1204

ED BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE

# இரக்ஷண்ய மூர்த்தி

## திரு அவதார சரித்திரச் சுருக்கம்

அ. தேவசகாயம் அம்மாள்

06:33
N33
121029

1933

[விலை அணா 8

# இரக்ஷண்ய மூர்த்தி

## திரு அவதார சரித்திரச் சுருக்கம்

# A brief life of our Lord Jesus Christ


BY

MRS. A. DEVASAHAYAM,

Madras Educational Department (Retired)

Member of the Dt. Educational Council, Salem

Author of the

'Travellers Round the World' Series and

Janabimani Series.



SECOND EDITION

"WITH FOREWORD BY

**His Lordship the Bishop of**

**DORNAKAL"**

**Price As. 8]** [விலை அணா 8

THE B. N. PRESS.
EDUCATIONAL PRINTERS.
MADRAS.

# முகவுரை

சர்வ சிருஷ்டிகளிலும் முதல்வனான மனுஷன் சிருஷ்டி நாதனின் கல்யாண குணங்களை அறியாத பேதை. அவனுக்குப் பிதாவின் பேரருள் தெரிவிக்க வந்த அவதாரக்கடவுளின் திருவிளையாடல்கள் கூற வல்லார் யார்? அவர் பாவ ஆத்துமாவை பரிசுத்த ஜீவியாக்குபவர். கடவுளோடு மனிதனை ஐக்யமாக்கும் மேலோன். அவரை யறிந்தவர் சர்வலோக நாதனை அறிகிறார். அன்பின் சொரூபி ஆகிறார். சகலவிதமான துன்பங்களிலும்கூட இன்பத்துக்கு வழி காண்கிறார். தெய்வ பிதாவின் பிள்ளைகளுக்கு இருக்கவேண்டிய தெய்வீக லக்ஷணம் அடைகிறார். இப்படிப்பட்ட நிகரற்ற வள்ளலைத் தமிழ் மக்கள் பலரும் கண்டடையவேண்டும், இரக்ஷண்ய மூர்த்தி அருளும் பாக்கியங்களைச் சகலரும் பெற்று அனுபவிக்க வேண்டும் என்பது இதை எழுதும் அடியாளின் வாஞ்சை.

நூல் ஏழைக்கு எளியனான இறைவனின் திரு அவதார மகத்துவச் சரித்திரமானதால், தமிழ் மக்கள் பலதரத்தாரின் வாசிப்பு வல்லமைக்கும் இணங்க பிள்ளைத்தமிழில் எழுதப்பட்டுளது.

# இரண்டாம் பதிப்புக்கு முகவுரை

இப்புத்தகம் சென்னை டெக்ஸ்புக் கமிட்டியாரது அங்கீகாரம் பெற்றமையின் இரண்டாம் பதிப்பில் சில அருமையான படங்கள் சேர்த்து, புத்தகத்தின் பருமனை மட்டுப்படுத்த சில அத்தியாயங்கள் நீக்கப்பட்டன.

தேசோபகாரிகளான பெருமக்கள் இந்நூலை ஆதரிக்குமாறு வேண்டுகிறேன்.

சேலம்,<br>ஜூன் 1933.

அ. தெய்வசகாயம்.

# முன்னுரை

கிறிஸ்து நாதர் சரித்திரத்தையாகிலும், கிறிஸ்துமத சித்தாந்தத்தையாகிலும் அறிய ஆசிக்கும் ஹிந்து ஒருவருக்கு நமது வேதாகமத்தையோ, அல்லது புதிய ஏற்பாட்டையோ கொடுப்பதினால் அத்தனை லாபமில்லை யென்று பலர் அனுபவத்தில் கண்டிருக்கலாம். ஆகமங்களின் பாஷை நடை, அவை வர்ணிக்கும் தேச நிலை, ஜன சமுதாய ஒழுக்கம் அரசிறை யாவும் நம் தேசத்தவர்களுக்கு வெகு விபரீதமாய் இருப்பதால் இவற்றைத் தெளிவுற விளக்கும் வியாக்கியானமின்றி எவரும் திரு அவதார மூர்த்தியின் திவ்விய மதத் தன்மையை வேதநூலிலிருந்து மட்டும் கிரஹித்துக் கொள்ளல் அரிது.

இக்குறையை நிவிர்த்தி செய்ய ஸ்ரீமதி தேவசகாயம் அம்மாள் ஒரு சிறு நூல் எழுதியிருக்கிறார்கள். ஆங்கில பாஷையில் அருள் நாதர் சரிதையைச் சரித்திர ரூபமாய் வியாக்கியானத்துடன் பல பண்டிதர்கள் எழுதியிருக்கின்றனர். திராவிட பாஷையில் இவ்வித நூல்கள் இரண்டொன்று மாத்திரமுள. தேவசகாயம்மாள் எழுதியிருக்கும் நூல் கிறிஸ்தவர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் பாலருக்கும் பெரியோருக்கும் ஏற்றதாக எழுதப்பட்டிருக்கிறது. நூல் முழுவதும் சிறு சிறு அத்தியாயங்களாக வகுக்கப்பட்டிருக்கிற படியால் உயர்தர வாசகப் புத்தகமாக வழங்குவதற்கும் ஏற்றது.

இந்து தேச மெங்கும் தற்காலத்தில் கிறிஸ்து நாதரைப் பற்றிய மதிப்பு அதிகரிக்கிறது. ஸ்ரீ இயேசு பெருமானின் உபதேசமும் சிலுவை மரணமும் சர்வலோகத்துக்கு முரிய தென்ற அபிப்பிராயம் அதிகரித்துக்கொண்டே வருகிறது "மலைப்பிரசங்கம்" என்ற பதத்தை ஹிந்து தின விருத்தாந்தப் பத்திரிகைகளிலும் கூட அப்போதைக்கப்போது காணலாம். எம்பெருமான் ஸ்ரீ இயேசுவை யாவரும் ஆசிக்கும் இக்காலத்தில் இவ்வித சுருக்க ஜீவிய சரிதையை இனிய நடையில் சுருக்கித் தெளிவுற எழுதிய அம்மாளுக்கு நன்றி சொல்லுகிறோம். சுவிசேஷகர், ஆசிரியர், தேசிகர், ஹிந்து மத பக்தர், தேசாபிமானிகள் — யாவருக்கும் இதைச் சந்தோஷமாய்ச் சிபார்சு செய்கிறோம்.

March 25, 1930. (Sd.) V. S. DORNAKAL.

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிறப்பு— அவரைக்குறித்த தீர்க்கத் தரிசனங்கள் ... ... | 1 |
| 2. | ,, வரலாறு ... ... | 3 |
| 3. | ,, ,, ... ... | 7 |
| 4. | ஸ்ரீ இயேசு பாலகன் ... ... | 12 |
| 5. | ,, பிள்ளைப் பிராயம் ... | 14 |
| 6. | யூதகுலம் I ... ... | 15 |
| 7. | ,, II ... ... | 19 |
| 8. | ,, III ... ... | 23 |
| 9. | ஸ்ரீ இயேசு பெருமானின் ஊழிய ஆரம்பம் ... ... | 25 |
| 10. | இயேசு பஹவான் ஊழியம் ... | 28 |
| 11. | கானவூர்க் கல்யாணம் ... ... | 31 |
| 12. | ஸ்வாமி பஸ்கா பண்டிகை ஆசரித்தது | 32 |
| 13. | நிக்கோதேமு - இயேசுவைக் காணவந்த யூத அதிகாரி ... ... | 34 |
| 14. | யோவான் முனிவரும் இயேசு பஹவானும் | 37 |
| 15. | ஸ்ரீ இயேசு பஹவான் சமாரியாவில் செய்த பிரசங்கம் ... ... | 39 |
| 16. | கானவூரில் இராஜாவின் வேலையாளின் மகன் குணமானது ... ... | 42 |
| 17. | எருசலேம்: முப்பத்தெட்டுவருஷ வியாதிக் காரன் குணமானது ... ... | 44 |

அத்தியாயம் பக்கம்


18. நாசரேத் ஜெப ஆலயத்தில் செய்த பிரசங்கம். ஊரார் அவரைக் கொல்ல யத்தனித்தது 47
19. பேதுரு யாக்கோபு யோவான் அந்திரேயாவை அழைத்தது ... ... 50
20. கப்பர்நகூம்-ஓய்வுநாள். ஜெபஆலயத்தில் செய்த பிரசங்கம்: பிணியாளர் பலர் குணமானது ... ... 52
21. கலிலேயாவில் பிரசங்க பிரயாணம். குஷ்ட ரோகி குணமடைந்தது ... ... 53
22. திமிர்வாதக்காரன் குணமானது ... 54
23. மத்தேயு சீஷனும், அவன் வீட்டில் நடந்த விருந்தும் ... ... ... 56
24. மலைப் பிரசங்கம் ... ... 58
25. ,, தொடர்ச்சி ... ... 61
26. நூற்றுக்கு அதிபதியின் வேலையாள் சுகமானது ... ... 64
27. மரித்த வாலிபன் உயிர் பெற்றது ... 65
28. பாவி ஸ்திரீ பஹவானுக்குப் பரிமள தைலம் பூசினது ... ... ... 66
29. ஸ்ரீ இயேசு பஹவான் கலிலேயா நாட்டில் செய்த சுற்றுப் பிரயாணம் ... 68
30. குருடும் ஊமையுமானவன் குணமானது 69
31. ஸ்ரீ இயேசு பஹவான் கடலில் பெருங் காற்றை அதட்டினது... ... 71
32. ஸ்ரீ இயேசு பஹவான் லேகியோன் என்னும் பைசாசக் கூட்டத்தைத் துரத்தினது 72

| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 33. | மரித்துப்போன சிறு பெண் உயிரடைந்தது | 74 |
| 34. | ஐயாயிரம் பேருக்கு உணவு கொடுத்தது பஹவான் கடல்மேல் நடந்தது | 75 |
| 35. | பிசாசு பிடித்த சிறு பெண் சுகமானது. ஊமையன் பேசினது ... ... | 78 |
| 36. | நாலாயிரம் பேருக்கு உணவளித்தது பரிசேயரின் மாயம் ... ... | 79 |
| 37. | குருடன் ஒருவன் பார்வையடைந்தது. சீஷரின் விசுவாச அறிக்கை ... | 81 |
| 38. | சந்திரரோகியான சிறுவன் குணமானது | 84 |
| 39. | தாழ்மை இரக்கம் அடக்கமாகிய குணங் களைப் பற்றிய போதனை... ... | 86 |
| 40. | ஸ்ரீ இயேசு பஹவான் கலிலேயாவிட்டு எருசலேமுக்குப் போனது ... | 90 |
| 41. | பிறவிக்குருடன் கண் பெற்றது ... | 91 |
| 42. | ஒரு நியாய சாஸ்திரிக்குச் சொன்ன உபதேசம்-நல்ல சமாரியன் உவமை | 94 |
| 43. | பெத்தானியாவில் மார்த்தாள் மரியாள் | 97 |
| 44. | ஸ்ரீ இயேசு பஹவான் ஜெபம் செய்யக் கற்பித்தது ... ... | 97 |
| 45. | நிமிரக்கூடாத கூனி சொஸ்தமானது ... | 99 |
| 46. | கெட்ட குமாரன் முதலிய மூன்று உவமைகள் ... ... | 100 |
| 47. | மரித்த லாசருவை பஹவான் உயிரோடு எழுப்பினது ... ... | 104 |

| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 48. | பஹவான் கடைசியாய் எருசலேமுக்குப் போன பிரயாணம். பத்துக் குஷ்ட ரோகிகள் குணமானது ... | 107 |
| 49. | ஜெபம். பரிசேயனும் ஆயக்காரனும் ... | 108 |
| 50. | பஹவான் குழந்தைகளை ஆசீர்வதித்தது | 109 |
| 51. | ஐசுவரியவான்களும் கடவுளுடைய இராஜ்யமும் ... ... ... | 110 |
| 52. | தோட்ட வேலைக்காரர்—உவமை. பஹவான் தமக்கு வரப்போகிற பாடுகளைச் சிஷருக்கு அறிவித்தது ... ... ... | 112 |
| 53. | சகேயுவுக்குக் கிடைத்த தரிசனம் | 114 |
| 54. | பெத்தானியாவில் நடந்த விருந்து. மரியாள் சுவாமிக்குத் தைலம் பூசினது ... | 115 |
| 55. | பஹவான் எருசலேமுக்குப் பவனிபோனது | 117 |
| 56. | பஹவான் பாடுகள் அடைந்த வாரம், திங்கட் கிழமை, தேவாலயத்தைச் சுத்திகரித்தது. | 119 |
| 57. | ஆலோசனை சங்கத்தாரும் யூதா ஸ்காரியோத்தும் செய்த சதி ... | 120 |
| 58. | பெரிய வியாழக்கிழமை I. பஸ்கா. பஹவான் சிஷர் பாதங்களைக் கழுவினது. மாயமற்ற தாழ்மையைப் பற்றிய உபதேசம் ... | 122 |
| 59. | பெரிய வியாழக்கிழமை II. பஹவான் சிஷருக்கு ஆறுதல் சொல்லி தைரியப்படுத்தினது. திராக்ஷச் செடியின் உவமை. ஜெபம் ... ... ... | 127 |

அத்தியாயம் பக்கம்

60. பெரிய வியாழக்கிழமை இரவு III. ஆத்துமப்பாடுகள். சீஷன் முத்தமிட, சத்துருக்கள் பிடித்தது ... ... 130
61. பாடுபட்ட வாரம்—வியாழக்கிழமை இரவு IV. இரக்ஷண்ய மூர்த்தியின் பாடுகள்—அன்னுவீட்டில், காய்பா வீட்டில், சனதரீம் சங்கத்தில் விசாரணை ... 133
62. பெரிய வெள்ளிக்கிழமை I. யூதாஸ்காரியோத்தின் முடிவு. பிலாத்துவின் விசாரணை. ஏரோதுவின் விசாரணை ... 136
63. பாடுபட்டவாரம்—பெரிய வெள்ளிக்கிழமை II. பிலாத்துவின் விசாரணை—மரண ஆக்கினை ... ... 139
64. பெரிய வெள்ளிக்கிழமை III. சிலுவைக் காட்சி ... ... ... 142
65. பெரிய வெள்ளிக்கிழமை IV. சிலுவை—திருவாக்கு ... ... ... 144
66. பெரிய வெள்ளிக்கிழமை V. திருப்பிரேத அடக்கம் ... .. ... 147
67. இரக்ஷண்யமூர்த்தி உயிரோடு எழுந்தது. பக்தருக்குக் கொடுத்த தரிசனம் ... 149
68. உயிர்த்து வெற்றி சிறந்த இரக்ஷண்ய மூர்த்தியின் தரிசனங்கள் ... ... 155



இரக்ஷண்ய மூர்த்தி

# இரக்ஷண்ய மூர்த்தி

## சரித்திரச் சுருக்கம்

---

### 1-வது அத்தியாயம்.

இரக்ஷண்யமூர்த்தி - பிறப்பு.

சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் பலஸ்தீனு நாட்டில் ஒரு பெரிய சம்பவம் நடந்தது. இந்தப் பலஸ்தீனு நாடானது இந்து தேசத்துக்கு வடமேற்குத் திசையில் சற்றேறக்குறைய இரண்டாயிரம் மைல் தூரத்தில் இருக்கிறது.

பலஸ்தீனுவில் யூதர் என்று ஒரு ஜாதியார் வசிக்கிறார்கள். அவர்கள் பூர்வத்தில் மிகச் சிறந்த ஒரு ராஜ்யத்தின் மக்களாய் இருந்தார்கள். அவர்களுக்குப் பஹுவான் தாமே விளம்பிய சட்டதிட்டங்கள், சுகாதார விதிகள், ஜனசமூகப் பிரமாணங்கள், தெய்வ வணக்க ஒழுங்குகள் இருந்தன. ஆகிலும் யூத ஜனங்கள் தெய்வ கட்டளைகளை மீறி சிட்சையடைந்து தமது சுயராஜ்யத்தை இழந்தார்கள். அந்நிய அரசர் அவர்களைச் சிறை பிடித்துக்கொண்டு போனார்கள். அவர்களுடைய தலைநகரான எருசலேம் பட்டணமும் அதில் இருந்த பெருமைவாய்ந்த ஆலயமும் இடிபட்டுக் கிடந்தன.

பாபிலோன் ராஜ்யத்திற்குச் சிறையாகப் போன யூதர் அங்கே எழுபது வருஷம் இருந்தபின் ஒரு பகுதியார் திரும்

பித் தம்மிடம் சேர்ந்து தமது நகரையும் ஆலயத்தையும் எடுத்துக் கட்டி ஆறுதலாய் ஜீவித்தார்கள். அக்காலத்திலும் தமக்குள் உண்டான சண்டை சச்சரவுகளால் தம்மைப் பல வீனப் படுத்திக்கொண்டார்கள். இவர்கள் நாடு யூதேயா கலிலேயா, சமாரியாவென மூன்று பாகங்களாயிற்று. பின்பு ரோமர் அவர்களை ஜெயித்து அரசாளத் தொடங்கினர்கள். யூதருக்கு இது அளவற்ற மனநோவுக்கு இடமாயிருந்தது.

ரோம அதிகாரிகள் மேற்சொன்ன ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும் இருந்தார்கள். அவர்களில் ஒருவனுன ஏரோது என்னும் சிற்றரசனும் அவன் குடும்பத்தாரும் யூத ஜனங்கள் மேல் தயை பாராட்டி எருசலேம் ஆலயத்தைப் புதுப்பித்து சிறப்பித்து, நகரத்திலும் பல நல்ல கட்டிடங்கள் கட்டினர்கள். எருசலேமைச் சுற்றியிருந்த சுவரில் 21 வாசல்கள் இருந்தன. எருசலேம் தேவாலயத்தில் காலை மாலை தவறுமல் ஆராதனைகள் நடந்தன. நகருக்கு ஆலயமானது மகிமையின் கிரீடமாய் விளங்கினது.

பஹவானுடைய சிக்ஷைக்கு ஆளாகி யூதர் அல்லற்படும் காலத்திலும், அவரையே கதியாகக் கொண்ட பக்தர்களும் சிலர் அவர்களில் இருந்தார்கள். அவர்கள் யூதரைமனம் போன போக்கில் போகவிடாமல் எச்சரித்தும் பஹவானுடைய கிருபைப் பிரவாகத்தை எடுத்துக்காட்டியும் வந்தார்கள். அப்படி இறைவன் திருஅருளைக் கூறும் திருத்தொண்டர்கள் தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்பட்டார்கள். தீர்க்கதரிசிகள் பலரும் பூலோக மனுமக்கள் எல்லாருக்காகவும் இரக்ஷண்யமூர்த்தி ஒருவர் ஒரு கன்னியின் பிள்ளையாய் அவதரிப்பார்; யூதஅரசர் குலத்தில் பெத்லேகேம் என்னும் சிறு ஊரில் தோன்றுவார் என்று ஏகவாக்காய் சொல்லி வந்தார்

கள். அவர்கள் வாக்கு நிறைவேற்றி, சர்வலோக மனுமக்களுக்கும் சிருஷ்டி கர்த்தாவின் பேரன்பும் அவாது அளவில் அடங்காத காதலும் வெளியிட அவர் அவதரித்தார். இந்த இரக்ஷண்ய மூர்த்தியின் பிறப்பு வரலாறு இனிக் கூறுவோம். இதுவே பலஸ்தீனுவில் நடந்த பெருத்த சம்பவம்.

---

## 2-ம் அத்தியாயம்.

### ஸ்ரீ இயேசுவின் பிறப்பு

பலஸ்தீன நாட்டில், கலிலேயா என்னும் பாகத்தில் நாசரேத் என்று ஒரு கிராமம் இருந்தது. அதில் யோசேப்பு என்று பெயர்கொண்ட தச்சன் ஒருவன் இருந்தான். அவனுக்குக் கல்யாணம் செய்யும்படியாக மரியாள் எனப் பெயர் கொண்ட ஒரு கன்னிகையை நியமித்திருந்தது. மரியாள் மகா உத்தமி.

கல்யாணம் நிறைவேற இன்னும் சில நாள் இருக்கும் பொழுது ஒரு நாள் மரியம்மாள் தன் வீட்டில் தனிமையாய் இருந்தாள். அப்பொழுது ஒரு தேவ தூதன் அவளுக்குக் காணப்பட்டான். மேலும் தூதன் அவளோடு பேசி, "கிருபை பெற்ற மாதே, நீ வாழ்க. கடவுள் உன்னோடு இருக்கிறார்" என்றான். அவளோ கலங்கிச் சிந்தனை செய்ததால் தூதன் அவளுக்குத் தேறுதல் சொல்லி, "அம்மா, நீ பயப்படாதே. கடவுள் உன்மேல் கிருபையாய் இருக்கிறார். நீ ஒரு குமாரனைப் பெறுவாய். அக்குழந்தைக்கு இயேசு என்று பெயரிடுவாய். அவர் மகாபெரியவராய் இருப்பார்; சர்வலோக அதிகாரியான கடவுளுடைய குமாரன் என்னப்படுவார். கடவுள் யூதகோத்திரத் தலைவனான தாவீதின் சிங்காசனத்தை அவ

ருக்குக் கொடுப்பார். அவருடைய ராஜ்யத்திற்கு முடிவே கிடையாது" என்று சொன்னான்.

மரியம்மாள் இதைக் கேட்டுத் திடுக்கிட்டு, "அப்பனே. நான் கன்னிப்பெண். பாவம் அறியாதவள், எனக்கேது குழந்தை?" என்றாள்.

தூதன் அதற்கு, "பயப்படாதே, பரிசுத்த ஆவி உன் மேல் வரும். சர்வ வல்லவருடைய கரம் உன்மேல் நிழலிட்டு உனக்கு அடைக்கலமாகும். உன்னிடம் அவதரிக்கும் குமாரனே கடவுளுடைய குமாரன் என்னப்படுவார்" என்றான். மேலும் அவள் மனதில் உண்டான குளப்படிகளுக்கு நிவாரணம் செய்யும் கருத்துள்ளவனாய் தூதன் மரியம்மாளின் பந்து எலிசபேத் என்ற பெரிய மனுஷி மலடியாயிருந்தவள் ஆறு மாதம் கர்ப்பமாயிருக்கிறதாய்ச் சொல்லி, கடவுளால் ஆகாத காரியம் ஒன்று உண்டோ என்பதை ரூபகாரப்படுத்தினான். உடனே அவள், நான் கடவுளின் அடியாள். அவர் திருவுளச் சித்தம் எதுவானாலும் நிறைவேறட்டும் என்று சொன்னாள். பின்பு தன் இனத்தாளைப் பார்க்கும்படியாகப் புறப்பட்டாள்.

கடவுளின் சத்தம் அவரைத் தேடுகிறவர்களுக்குக் கேட்கிறது. மரியம்மாளுக்குத் தூதன் காட்சி கொடுத்துத் தெய்வ அனுக்ரகத்தைத் தெரிவித்த மாதிரியே யோசேப்புக்கும் தோன்றி அவளிடம் அவதரித்திருக்கும் பாலகனின் தன்மை இன்னதென்று தெரிவித்தான். அது பரிசுத்த ஆவியால் உண்டானதென்றும், தமது ஜனத்தின் பாவங்களை நீக்கி அவர்களை ரக்ஷிக்கும் மேலோன் அவரே என்றும் சொல்லி யாதொரு சந்தேகமும் இல்லாமல் அவளை மனைவியாகச் சேர்த்துக்கொள்ளும்படியாகக் கட்டளையும் கொடுத்தான். யோசேப்பு அப்படியே செய்தான்.

இந்த நடபடிகளுக்கு ஆறுமாதத்திற்கு முன், எருசலேம் தேவாலயத்தில் ஏற்பட்ட ஒழுங்குப் பிரகாரம் ஆராதனை செய்துகொண்டிருந்த சகரியா என்னும் ஆசாரியன் ஒருவனுக்குத் தேவ தூதன் காணப்பட்டான்.

சகரியாவும் அவனுடைய மனைவி எலிசபேத் அம்மையாரும் பரிசுத்த ஜீவியம் செய்யும் மஹாத்துமாக்கள். தெய்வ கர்ப்பனைகளின் படியே நடக்கும் சிறந்தோர். பிள்ளையில்லாக் குறையால் பெருந்தவம் புரிந்து வாடினவர்கள். மூத்து நரைத்தவர்கள்.

தூதன் சகரியாவுக்குத் தேவாலயத்தில் காணப்பட்டு, "சகரியாவே பயப்படாதே; உன் வேண்டுதல்கள் கேட்கப்பட்டன. உனக்கு ஒரு நன் மகன் பிறப்பான். அவன் மானிடரைப் பாவத்திலிருந்து ஈடேற்ற வருகிற இரக்ஷண்ய மூர்த்திக்கு முன் தூதனாய் வெளிப்பட்டுத் தொண்டு புரிவான். அவர் உலகத்தில் சமீபகாலத்தில் வெளிப்படுவார். உன் மகனுக்கு யோவான் என்று பெயரிடுவாய். அவன் பிறப்பினிமித்தம் உனக்கும் பிறருக்கும் அளவற்ற சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும். அவன் கடவுளின் பார்வையில் பெரிய மனுஷனாய் இருப்பான். திராக்ஷாரசமும் மதுபானமும் குடியான். தாயின் கர்ப்பத்திலிருக்கும்போதே பரிசுத்த ஆவியால் நிறைந்து இருப்பான். அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரைக் கடவுளின் பாதாரவிந்தம் சரணமடையச் செய்வான். எலியாவின் பலமும் ஆவியும் உள்ளவனாய் சத்தியத்தை அறிவித்து நீதிக்குக் கட்டுப்படாத ஜனத்தைச் சன்மார்க்கராக்குவான். அவர்கள் வரப்போகும் அவதாரக் கடவுளுக்கு உகந்த ஜனமாய் இருப்பார்கள்" என்றான்.

சகரியா அதற்கு, "மஹானுபாவா, ஏழையேன் மூத்து நரைத்துத் தளர்ந்து வீடு போவென்க, காடு வாவென்னும் நிலையில் இருக்கிறேன். சுவாமி, எனக்குமா குழந்தை?" என்றான். தூதன், "சகரியா, கடவுளின் மகிமை இவ்வளவுதான் என்று அளவிடுகிறாயா? நான் தேவாதி தேவனுடைய சமுகத்தில் நிற்கும் தூதன். காபிரியேல் என்பது என் நாமம். உனக்கு இந்த நற்செய்தி கொண்டுவந்தேன். அதை நம்பாத படியால் குழந்தை பிறக்கும் வரை நீ ஊமையாய் இருப்பாய்" என்று சொல்லி மறைந்தான்.

தேவாலயத்தில் அந்நேரம் வெளியே ஜெபம் செய்து கொண்டிருந்த ஜனங்கள், 'ஏது, ஆசாரியர் உள்ளே போனவர் வரக்காணோ'மென்று காத்திருந்தார்கள். சகரியா தரிசனம் முடிந்து வெளியே வரும்போது வாய்பேசக் கூடாதவனாய் சைகை காட்டினான். குழந்தை பிறந்து பெயரிடும் வரை சைகை காட்டியே காலம் தள்ளினான்.

இதற்கிடையில் அவன் மனையாள் எலிசபேத் கர்ப்பவதியாகி பார்த்தோர் நகைப்பார் என்று சொல்லி தலைமறைவாய் ஜீவியம் செய்தாள். அக்காலத்தில் மரியம்மாள் அவளைப் பார்க்க யூதேயா நாட்டில் சகரியா வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். அவர்களுக்கு இருந்த சந்துஷ்டிதான் என்ன! மரியம்மாள் தன் இனத்தாளை வாழ்த்தினாள். அப்போது எலிசபேத் அம்மையின் கர்ப்பத்திலிருந்த பிள்ளை துள்ளிற்று.

எலிசபேத் பரிசுத்த ஆவியால் நிறைந்து, "என் அம்மை; நீ பெண்டீர்களில் மகா பாக்கியவதி. உன் கர்ப்பக்கனியோ ஆசீர்வதிக்கப்பட்டது. என் ஆண்டவரின் தாயார் என்னிடம் வர நான் என்ன தவம் செய்தேன்! அம்மணீ, நீ வாழ்த்தின சத்தம் கேட்டு என் கர்ப்பத்தின் பிள்ளையும் களிப்பாய்த்

துள்ளுகிறது. இறைவனின் வாக்கை நம்புகிறவள் பாக்கிய சாலி. அவளுக்குச் சொல்லப்பட்ட வாக்கு யாவும் நிச்சயம் நிறைவேறும்'' என்றாள்.

மரியம்மாள் நடந்த மகா சம்பவங்களை உற்று நோக்கி உணர்ந்தவளாய். ஆவியில் களிகூர்ந்து, ஆனந்தம் பொங்கி இன்னிசைக் கீதம் ஒன்று பாடினாள். அதன் பொருளைச் சுருங்கச் சொல்லுவோம். அதாவது:

"என்னுடைய ஆத்துமா கடவுளின் சீர் பாதங்களை வணங்குகிறது. என் ஆவி என் பெருமானின் கிருபைப் பெருக்கை நினைத்து இன்பமடைகிறது. அவர் எளிய நிலமையில் கிடந்த கடையேன் என்னை உன்னதபதவிக்கு உயர்த்தினார். அவர் துதிக்கு உரியவர். உலகத்தின் மேன்மக்களுக்கு அவர் இந்த மகிமையைக் கொடுக்கவில்லை. அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்தவர்களுக்குச் சந்தான பரம் பரையாய் கிடைக்கும். தமது புயத்தினால் பராக்கிரமம் செய்தார். சிந்தையில் அகந்தைக் காரரைச் சிதறடித்தார். பலவான்களைக் கீழே தள்ளித் தாழ்வானவர்களை உயர்த்தினார். பசித்தவர்களுக்கு இன்னமுது கொடுத்துச் செல்வரை வெறுமையாய் அனுப்பிவிட்டார். நமது பிதாக்களுக்கு இரக்கம் பாராட்ட நினைத்து தமது தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார்'' என்பதே.

மரியம்மாள் சுமார் மூன்று மாதம் சகரியா வீட்டிலிருந்து திரும்பிப் போனாள்.

---

## 3-ம் அத்தியாயம்.

### ஸ்ரீ இயேசு பிறப்பு—தொடர்ச்சி

எலிசபேத் அம்மையும் காலம் நிறைவேறின போது ஓர் அழகிய ஆண்மகவு பெற்று மனக்குறை நீங்கினாள். அவள் கண

வனும் உற்ருர் உறவினர் யாவரும் அவளோடு அகமகிழ்ந்து ஆநந்தித்தார்கள். சகரியா மகனை மடியிலேந்தி அவனுக்கு யோவான் என்று பெயரிட்ட பின்பு வாய் திறந்து பேசி ஊமைத் தன்மை நீங்கினுன்.

தன் காலமெல்லாம் அருள்வள்ளலின் பெருமையைச் சிந்தித்து செலவிட்ட விருத்தனுன சகரியா இத்தருணம் ஓர் இனிய கீர்த்தனம் பாடி அவரை வாழ்த்தினுன். அக்கீதத்தின் சுருக்கமாவது:

"நமது குலதெய்வமாகிய மகிமையின் கர்த்தாவுக்கு ஸ்தோத்திரம் துதிசெலுத்துகிறேன். அவர் நமது முன்னோருக்குக் கொடுத்த வாக்கு மாருமல், என் செல்வ மைந்தா, நமக்கு ஒரு ரக்ஷகனை அனுப்பியிருக்கிருர் அந்த இரக்ஷண்ய மூர்த்தி நமக்கு இப்போது இருக்கிற சகல சத்துருக்களின் கையிலிருந்துப் மீட்டு இரக்ஷித்து நமக்குச் சமாதானமும் சந்தோஷமுமான ஜீவியம் கட்டளையிடுவார். அக்காலம் பயம் திகில் இல்லாமல் தெய்வீக பிரமாணங்களைக் கைக்கொண்டு நடக்கலாம். பாவம் நிறைந்த இந்த உலகத்தில் மகா தாழ்வான ஜீவியம் செய்கிறவர்களுக்கு முத்தி வழிகாட்டி நற்கதி அடையச் செய்வதற்காய் அவர் வருகிருர். என் செல்வனே. நீ அந்த இரக்ஷண்யமூர்த்திக்குத் தாசனுய் வெளிப்பட்டுத் தொண்டு செய்வாய்" என்பதே. இது நிற்க.

மரியம்மாள் யோசேப்பின் வீட்டில் இருக்கையில் அக்காலத்து ரோமராயன் ஜனங்களுடைய தொகை கணக்கு எடுக்கும்படியாக, யாவரும் அவரவர் பிறந்த இடங்களுக்குப் போனுர்கள். அப்போது யோசேப்பும் மரியம்மாளும் தாங்கள் குடியிருந்த கலிலேயா நாட்டை விட்டு யூதேயா நாட்டில் உள்ள பெத்லகேம் ஊருக்குப் போனுர்கள். ஏனென்ருல்

யோசேப்பு தாவீது ராஜவம்சத்தான். பெத்லகேம் தாவீதின் ஊர்.

பெத்லகேமில் அப்போது பிரயாணிகளின் கூட்டம் மிகுதி. யோசேப்பு தங்க இடமில்லாமல் ஊர் சத்திரத்தில் மாட்டுக் கொட்டாயில் தங்க நேரிட்டது. அச்சமயம் மரியம்மாள் பிரசவித்து ஓர் ஆண் மகவு பெற்றுப் பாலனைத் துணியில் சுற்றி மாட்டுக்குப் புல்போடும் தொட்டியில் கிடத்தினாள். பாலனுக்கு இயேசு என்று பெயரிட்டார்கள். இது தேவதூதன் மரியம்மாளுக்குச் சொன்ன பெயர் என்று ஞாபகம் இருக்கும்.

அன்று இரவில் ஊருக்கு வெளியே இடையர் சிலர் மந்தைகளைக் காத்துக்கொண்டு படுத்திருந்தார்கள். அங்கே திடீரென்று வெளிச்சம் அவர்களைச் சுற்றிப்பிரகாசித்தது. இடையர் பயந்து நடுங்கினார்கள். தேவதூதன் ஒருவன் அங்கே தோன்றி அவர்களைத் தேற்றி, ஸ்ரீ இயேசு பாலனின் பிறப்பின் வரலாறு அறிவித்தான். அவன் "அஞ்சவேண்டாம்; உங்களுக்கும் பூலோக குடிகள் யாவருக்கும் எல்லையில்லாத சந்தோஷத்திற் கிடமான செய்தி ஒன்று கொண்டு வந்திருக்கிறேன், கேளுங்கள். இன்று, மனுமக்களைப் பாவத்திலிருந்து ஈடேற்றவும், அதனிமித்தம் வரும் தண்டனையிலிருந்து இரக்ஷிக்கவும், கிறிஸ்து என்னும் இரக்ஷண்யமூர்த்தி தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். பாலனைத் துணியில் சுற்றிப் புல்தொட்டியில் கிடத்தியிருக்கிறது. இதுதான் உங்களுக்கு அடையாளம்" என்றான்.

தூதன் சொல்லி முடிவதற்குள் பெருங்கூட்டமான தூதர் அங்கே தோன்றி மங்களகீதம் பாடி முழக்கினார்கள்.

"உன்னதத்தில் இறைவனுக்கு மகிமை,

மனுஷருக்குள் சமாதானம்,
மனுஷர்மேல் கடவுள் பிரியமாயிருக்கிறார்" என்று
இன்னிசை ராகம் தாளம் பிசகாமல் பாடினார்கள்.

தூதர்கள் மறைந்தவுடனே இடையர், "உலகத்தாரை இரக்ஷிக்கவந்த பெருமான், அவதார புருஷன், பெத்லகேமில், ஒரு மாட்டுக் கொட்டாயில், குழந்தையாய் பிறந்திருக்கிறாரா! இதென்ன அதிசயம்! வாருங்கள், வாருங்கள். நாம் இப்பொழுதே இந்த அற்புத பாலனைப் பார்க்கப் போவோம்" என்று சொல்லிப் புறப்பட்டுப்போய் அவதார புருஷனைத் தரிசித்துப் பணிந்து கொண்டார்கள். தங்களுக்குத் தூதர் சொன்ன செய்தியையும் பலருக்கு அறிவித்து, கடவுளைத் துதிசெய்து கொண்டே திரும்பிப் போனார்கள்.

சிலநாள் பொறுத்து கீழ்திசையில் வெகுதூரத்திலிருந்து சில சாஸ்திரிகள் இந்தத் தெய்வ பாலகனைத் தரிசிக்க வேண்டுமென்று ஆசைகொண்டு காணிக்கையோடு புறப்பட்டு வந்தார்கள். அவர்களுக்கு ஸ்ரீ இயேசு பாலன் பிறந்த செய்தி எப்படித் தெரியும்? சாஸ்திரிகள் அல்லவா? நக்ஷத்திரங்களைப் பார்த்து நடக்கப்போகும் பெருங் காரியங்களைக் கணிக்கும் ஞானிகள். அவர் ஒரு புதிய நக்ஷத்திரத்தைக்கண்டு உலகத்தில் இது வரையில் தோன்றாத மகிமையோடு அரசர் ஒருவர் பிறந்திருக்கிறார் என்று கணித்து, அவருடைய மகிமைக்கு ஏற்ற காணிக்கைகள் பொன் வெள்ளைப்போளம் தூபவர்க்கம் கையில் எடுத்துக்கொண்டு, பெருமான் பிறந்த இடம் தேடிப் புறப்பட்டார்கள். நக்ஷத்திரம் இடம் பெயர்ந்து தமக்கு முன்னால் போகக்கண்டு அது போன வழியே பின் சென்றார்கள்.

சாஸ்திரிகள் பலநாள் பிரயாணம் செய்து பலஸ்தீனா நாடு சேர்ந்து, அந்நாட்டின் அதிகாரியாகிய ஏரோது ராஜாவிடம்

போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் அரசனைப் பார்த்து, "வேந்தே, உமக்கு மங்களம். உம்முடைய எல்லைக்குள் யூதர்களை ஆளப்போகும் ராஜா ஒருவர் பிறந்திருப்பதை அறிவீரா? அவர் பிறந்திருக்கும் இடம் எங்களுக்கு நீர் காட்டவேண்டும். காணிக்கையோடு அவரைத் தரிசிக்க வந்திருக்கிறோம்," என்றார்கள்.

ஏரோது ராஜா திடுக்கிட்டு, "என்ன! யூதாவை ஆளும் பார்த்திபன் பிறந்திருக்கிறரா? எனக்குத் தெரியாதே!" என்றான்.

சாஸ்திரிகள், "கிழக்கில் ஒரு விசேஷமான நக்ஷத்திரம் கண்டு, கணித்து வந்திருக்கிறோம்," என்றார்.

ஏரோது பயந்து, "இந்த சாஸ்திரிகள் சொல்வது பயங்கரமாய் இருக்கிறது. என்னையும் என் பிள்ளைகளையு மல்லாது, இந்த நாட்டை ஆளப் பிரபு ஒருவன் பிறப்பான! பார்க்கலாம்" என்பதுபோல் எண்ணமிட்டுத் தனது நாட்டு வேத சாஸ்திரிகளை அழைத்து அவர்களிடம் காரியத்தைத் தீர விசாரித்தான். அவர்களும் தகுந்தபடி ஆராய்ச்சி செய்து சாஸ்திரிகளின் கணக்குச் சரிதான் என்றார்கள். ராஜா சாஸ்திரிகளைப் பார்த்து, "பெருமான்களே, உமது கருத்து மிகச் சிறந்தது. நீங்கள் போய்த் தரிசித்து வந்தபின் நான் அவசியம் அந்தப் பரம புருஷனைப் பணிந்துகொள்வேன். பார்த்து வந்து இருப்பிடம் எனக்கு வெளிப்படுத்துங்கள்" என்றான்.

சாஸ்திரிகளுக்கு நக்ஷத்திரம் சத்திரம் வரை வழிகாட்டிச் சென்று அதன்மேல் நின்றது. அவர்கள் தமது காணிக்கைகளைப் படைத்து ஸ்ரீ இயேசு பாலனை வணங்கித் திருப்தியடைந்தார்கள். ஆனல் தேவதூதனல் எச்சரிப்படைந்து கபடம் நிறைந்த அரசனிடம் திரும்பாமல் தமது தேசத்திற்குப் போய்விட்டார்கள்.

# 4-ம் அத்தியாயம்.

## ஸ்ரீ இயேசு பாலகன் - தேவாலயச் சடங்குகள் - சிமியோன் அன்னாள்

யூதகுல ஆசாரப்படி ஸ்ரீ இயேசு பாலகனுக்குப் பிறந்த எட்டாம் நாளில் நாமகரணம் சூட்டி, அறுபதாம் நாள் அதைத் தேவாலயத்திற்குக் கொண்டு போனார்கள். ஆலயத்தில் செலுத்தவேண்டிய காணிக்கை பலி முதலான கடன்கள் செலுத்தி முடிவாகும்பொழுது சிமியோன் அன்னாள் எனப் பெயர்கொண்ட இரண்டு முதியோர் பாலகனைப் பார்த்து ஆனந்தக் கடலில் முழுகினார்கள். அவர்களில் சிமியோன் பரவசனாகி இனிப சங்கீதம் பாடி, சலியாது சகல வளமும் கொடுக்கும் வள்ளலைப் போற்றினான். இவன் மகா பக்தன் இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்துக்கிடந்தவன். இரக்ஷண்ய மூர்த்தியைக் கண்ணாரக்கண்டு கையில் ஏந்துவதற்கு முன் சாவதில்லை என்று மங்கள வாக்கும் வாங்கினவன். அன்றையதினம் பாலன் ஆலயம் வருவதாகப் பரிசுத்த ஆவியானவரின் திரு அருளால் அறிந்து அவ்விடம் வந்து இருந்தான்.

அவன் பாடின கீதத்தின் சாரமாவது:—

“ சர்வலோக நாதா, உமது வாக்குப்படி
 அடியானைச் சந்தோஷப்படுத்தினீர்,
கருணையாழீ, உமது ஜனமாகிய
 இஸ்ரவேலுக்கு மகிமையாகவும்,
உம்மை அறியாத பலஜாதிகளுக்கும்
 ஒளியாகவும்,

தேவரீர் சர்வ ஜனத்திற்கும் ஆயத்தம் செய்த
இரக்ஷிப்பின் மூர்த்தியை என் கண் கண்டது"
என்பதே.

மறுபடியும் சிமியோன் அவர்களை ஆசீர்வதித்து, இவரால் அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிக்கு வரும். இஸ்ரவேலில் பலர் விழவும், பலர் மேன்மையடையவும் ஏதுவாயிருப்பார். மேலும், அம்மா, உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் என்பதை அறிவாயாக என்றான்.

ஸ்ரீ இயேசு பாலனைக் கையில் ஏந்தி இறைவனைப் புகழ்ந்த அன்னாள் என்னும் பெரிய மனுஷி ஏழு வருஷம் கணவனோடு வாழ்ந்து, எண்பத்து நாலு ஆண்டுகளாய் விதவை நிலமையில் ஆலயத் தொண்டே தன் பிரபஞ்சமா யிருந்தவள். அவள் ஒரு தீர்க்கத்தரிசி. எருசலேமில் க்ஷேமம் வாழ்வுண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்துப் பேசினாள்.

யோசேப்பும் மரியம்மாளும் மேற்பட்ட சம்பவங்களைக் குறித்துப் பிரமிப்படைந்தவர்களாய்த் தமது இருப்பிடத்துக்குத் திரும்பினார்கள். ஒன்றாகிலும் அவர் மறக்கக் கூடியதல்ல. அவற்றை நினைத்துச் சிந்தனை செய்தார்கள்.

சாஸ்திரிகள் திரும்பி வந்து செய்தி சொல்லுவார்கள் என்று காத்திருந்த ஏரோது ராஜா, அவர்கள் வராதபடியால் ஏமாந்தவனாய் மிகக் கோபங்கொண்டான். தன்னுடைய நாட்டில் உள்ள இரண்டு வயதுக்குட்பட்ட பாலர் யாவரையும் கொன்று விடும்படியாகக் கட்டளை யிட்டான். ஆனால் இந்தக் கொடிய கட்டளை பிறக்கு முன்னதாகவே தேவதூதன் ஒருவன் யோசேப்புக்குக் கனவில் தோன்றிக் குடும்பசகிதமாய் அடுத்த தேசமாகிய எகிப்திற்கு ஓடி, வரப்போகிற அநியாயப்

படுகொலைக்குத் தப்பும்படி கட்டளையிட்டான். அப்படியே யோசேப்பு மரியம்மாளையும் பாலனையும் ஒரு கோவேறு கழுதைமேல் ஏற்றி எகிப்துக்குப் போய் கஷ்டகாலம் கடந்து போகுமட்டும் அங்கே வசித்துத் திரும்பினுன். ஏரோது மரித்து அவன் மகன் பட்டம் சூட்டும் வரையில் எகிப்தில் குடியிருந்தார்கள். அப்புறம் திரும்பி வந்து நாசரேத் என்னும் கிராமத்தில் வாசம் செய்தார்கள்.

---

## 5-ம் அத்தியாயம்.

### ஸ்ரீ இயேசு பஹவானின் பிள்ளைப்பிராயம்

ஸ்ரீ இயேசு பஹவான் தமது தாயார் மரியம்மாளோடும் யோசேப்போடும், நாசரேத்தில் வளர்ந்தார். யோசேப்பு தச்சு வேலைக்காரன். பஹவான் இளம்பிராயத்தில் அவ்வேலையைக் கற்றுக்கொண்டு அவர்களுக்கு அடங்கி நடந்தார். உருவத்தில் வளர்ந்த புருஷனைக் கண்டோர் உள்ளத்தைக் கவரும் சக்தி அமைந்து இருந்தார். ஞானம் நிறைந்து, கடவுளுடைய நீங்காக் கிருபை பெற்று விளங்கினுர்.

அவருடைய பெற்றூர் வருஷா வருஷம் எருசலேம் தேவாலயம் சென்று பஸ்கா என்னும் பண்டிகை ஆசரித்து வருவது வழக்கம். யூதருக்கு இருந்த பல பண்டிகைகளில் பஸ்கா விசேஷமானது. அதை ஆசரிக்க ஜனங்கள் பல நாடுகள் கிராமங்களிலிருந்து வந்து எருசலேமில் கூடுவார்கள். ஸ்ரீ இயேசு பன்னிரண்டு வயதாய் இருக்கும்பொழுது எருசலேமுக்குப் போயிருக்கையில் ஒரு நாள் தேவாலயத்தில் கூடியிருந்த யூதகுருக்களோடு பேசிக்கொண்டிருந்தார். அவர்பேசக் கேட்ட அனைவரும் பிரமித்துப் போனுர்கள். அவர் அறிவும்,

அவர் கேட்ட கேள்விகளும் கொடுத்த விடைகளும், அவ்வளவு ஞானமாயிருந்தது.

இதற்கிடையில், பெற்றோர் இவர் தேவாலயத்தில் இருப்பதைக் கவனியாமல் புறப்பட்டு ஒருநாள் பிரயாணம் போன பின்பு தங்கள் கூட்டங்களில் அவர் இல்லாததைக்கண்டுகலங்கினார்கள். தேடி அலைந்து மூன்றாவது நாளில் தேவாலயத்தில் போதகர்கள் நடுவில்கண்டு ஆனந்தமடைந்தார்கள். "அப்பனே, உன்னைத்தேடி அலைந்து விசாரப்பட்டோம் ஐயா" என்றார்கள். அவரோ, "ஏன் தேடி அலைந்தீர்கள்? என் பிதாவின் வீட்டில் நான் இருக்க வேண்டுமென்று உங்களுக்குத் தெரியாதா?'' என்றார். தாயாருக்கும் யோசேப்புக்கும் இந்த நடபடிகள் புத்திக்கு எட்டாத ஆச்சரியமாய் இருந்தது. சிறுவன் மாதிரியா பேசுகிறான்! என்று சொல்லிக்கொண்டார்கள். ஸ்ரீ இயேசு பெருமான் நாசரேத்துக்குப் போய் அவர்களைச் சந்தோஷப்படுத்தினர். முப்பது வயதாகும் வரையில் சாதாரண தச்சன் குடும்பத்தில் இருக்கக்கூடிய சோலி எதையும் செய்து வந்தார்.

நாம் இனி பஹவான் அவதரித்த யூதகுலத்தின் வரலாறு கொஞ்சம் கவனிப்போம். வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டு நூல்கள் யாவும் யூதர்களுடைய சரித்திரமே.

---

## 6-ம் அத்தியாயம்.

### யூத குலம்—வரலாறு I

ஸ்ரீ இயேசுவின் அவதரா காலத்துக்கு இரண்டாயிர வருடங்களுக்கு முன் மெசொபொத்தாமியா நாட்டில் ஆபிரகாம் எனப் பெயர் படைத்த மனிதன் ஒருவன் இருந்

தான். அவன் சன்மார்க்கனும் இருதயத்தில் அன்பு குடி கொண்டவனும் இருந்தான். கடவுள் அவனை விசேஷமாகத் தெரிந்து கொண்டு வரங்கொடுத்து ஆரவணைத்தார். அவன் பிள்ளையில்லாக்குறை நீங்க கடவுளின் திருவாக்குப்படி நூறு வயதில் ஒரு ஆண்மகவு பெற்று மகிழ் வடைந்தான். என்கி லும், தெய்வ கட்டளைக்கிணங்கி அந்தக் குமாரனைப் பலியிடச் சித்தமாகிவிட்டான். கடவுள் அந்தப் பெருஞ்செயலை அங்கீ காரம் பண்ணி, ஈசாக்குக்கு உயிர் கொடுத்து, அவன் மூலமாய் திரள் ஜனக்கூட்டமாகிய யூதர் என்கிற இஸ்ரவேல் ஜாதியை எழும்பப் பண்ணினர்.

ஆபிரகாம், குமாரன் ஈசாக்கு, பௌத்திரன் யாக்கோபு ஆகிய மூவரும் பக்த சிரோமணிகளாய் விளங்கினர்கள். அவர்களே மனுக்குல இரக்ஷகரின் கோத்திரப் பிதாக்களானர் கள். ஆபிரகாம் பிள்ளையற்றவனாய் இருக்கும்பொழுதே, அவன் சந்ததியார் கானான் தேசத்தைச் சுதந்தரிப்பார்கள் எனக் கடவுள் அவனுக்கு ஆணையிட்டார்.

யாக்கோபுக்குக் கடவுள்மேல் இருந்த விசுவாசத்தின் பொருட்டு இஸ்ரவேல் என்ற பெயருமுண்டாயிற்று. அவன் சந்ததியார் இஸ்ரவேலர் என்னப்பட்டார்கள்.

கானான் தேசத்தில் யாக்கோபு பெற்றுப் பெருகி பெரிய வீட்டுக்காரனாய் பன்னிரண்டு ஆண்மக்களும் பல பேரன் பேத்திகளும் வைத்து வாழும் காலத்தில் அவன் குமார ரில் அருமையானவன் யோசேப்பு சிறையாய் எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டான். ஆகிலும் அவனுடைய ஞானத் தின் மகிமையாலும் அனாதி கடவுளை அவன் தஞ்சமாகக் கொண்ட பெருமையாலும் ராஜாவின் மந்திரியானன். அக் காலம் கானான் தேசத்தில் உண்டான கொடும் பஞ்சத்தி

னிமித்தம் யோசேப்புத் தன் பிதாவின் வீட்டாரை எகிப்த்துக்கு அழைத்து வந்து நாடு கொடுத்து அவரைக் குடியேற்றினான். யாக்கோபு காணாமற்போன மகனைக் கண்டு களித்து ஆறுதலடைந்தான்.

யோசேப்பின் காலத்துக்குப்பின் இஸ்ரவேலர் எகிப்து ராஜா கையில் கொடிய கஷ்டங்களை அடைந்தார்கள். பாரமான வேலை செய்து அடிமைகளாய் இருந்தார்கள். அரசன் அவர்களுக்குப் பிறக்கும் ஆண் மகவுகளைக் கொலை செய்யக் கட்டளையிட்டான். நதியில் போட உத்தரவு பண்ணினான். அக்காலத்தில் பிறந்த ஓர் அழகிய பாலனை அவன் தாய் தந்திரமாய் ஒரு பெட்டியில் வைத்து ஆற்றங்கரையில் நாணலுக்குள் மறைத்து வைத்தாள். ராஜகுமாரி அவனைக் கண்டு எடுத்து வளர்க்கவும், அவனைப் பெற்றவளே அவனுக்குப் பால் கொடுக்கவும், அவன் ராஜகுமாரரோடு கல்வி கற்று மகா புருஷனாகவும் மகத்துவ தெய்வம் கிருபை புரிந்தார். இவன் பெயர் மோசே. இவன் ராஜ அரண்மனையில் இன்ப பதவியில் நாட் கழித்தாலும், இஸ்ரவேலர் தன் ஜாதி ஜனமென்கிற சத்தியத்தைக் கணப்பொழுதேனும் மறந்தவன் அன்று. அவர்கள் படும் ஹிம்ஸையைக் கவனித்து வருந்தினான்.

ஒரு நாள் எகிப்தியன் ஒருவன் தன் ஜனத்தானை வருத்துவதைக்கண்டு அவனை வெட்டித்தள்ளி மணலில் புதைத்து விட்டு அயல் நாட்டுக்கு ஓடிப்போனான். மோசே மீதியான் தேசத்தில் நாற்பது வருஷம் வனத்தில் ஆடு மேய்த்து, மனை மக்கள் படைத்து வாழ்ந்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் வனத்தில் மோசேக்குச் சர்வ சிருஷ்டி கர்த்தாவின் தரிசனம் கிடைத்தது. தாம் யாக்கோபின் சந்ததியார்மேல் கொண்ட பரிதாபத்தையும், அவர்களைக் காணன்

தேசத்திற்கு அழைத்துச் சென்று தாம் ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றும் காலம் வந்தது என்பதையும் வெளியிட்டார். எகிப்து அரசனிடம் சென்று தமது ஜனத்தை அழைத்து வரும்படியாக மோசேக்குக் கட்டளை பிறந்தது. மோசே, நான் திக்குவாயன், என்னால் ஆகாது, என்று போக்குச் சொல்லியும் கடவுள் தமது வார்த்தையை மாற்றவில்லை. மோசே ராஜாவிடம் பேச எகிப்துக்குப் போனான்.

மோசேயும், அவன் சகோதரன் ஆரோனும், பார்வோன் என்ற எகிப்தின் ராஜனிடம் பலமுறை பேசிப் பெரிய அடையாளங்கள் நடப்பித்து, இஸ்ரவேலரை எகிப்தை விட்டு அழைத்து வந்தார்கள். வழியில், கடலைக் கால் நடையாய்க் கடந்தார்கள். அவர்கள் தாகந்தீர்க்க கடவுள் கடாக்ஷத்தால் கன்மலையிலிருந்து ஜலம் புரண்டு ஓடிவந்தது. சாப்பாட்டுக்கு வானத்திலிருந்து மன்னா என்னும் ருசியான வஸ்து கொத்துமல்லி அளவாய் விழுந்தது. சாப்பிட மாம்சம் இல்லை என்று அவர்கள் அழவே, காடைகள் வந்து விழும்படி தெய்வம் அருள் செய்தார். இரவில் வெளிச்சம் கொடுக்க அக்கினிஸ்தம்பமும், பகலின் நிழலுக்காக மேகஸ்தம்பமும் அவர்களுக்கு ஆதரவாய் இருந்தன. என்றாலும், வழியில் பலகாலும் மோசேக்கு விரோதமாய் கலகம் பண்ணினார்கள். எகிப்தில் அவர்களுக்கு இருந்த பெரு வாழ்வை அவன் கெடுத்து விட்டதாகப் பேசினார்கள். அக்காலத்தில் இஸ்ரவேலரின் தொகை சுமார் பத்து லக்ஷம் இருந்தது. மேற்படி காரணத்தினால் இஸ்ரவேலர் பல தண்டனைகளும் சிக்ஷைகளும் அடைந்தார்கள். நாற்பதுநாள் பயணத்தை நாற்பது வருஷத்தில் முடித்துக் கானான் தேசம் சேர்ந்தார்கள். மோசேயும் பிரயாணக் கடைசியில் மரணமானான்.

அவர்கள் வழியில் இருக்கும்பொழுது, சீன் வனந்தரத்தில் சீனாய் என்ற மலையில், இறைவன் மோசேக்குத் தரிசனமாகி, இஸ்ரவேலர் கைக்கொள்ள வேண்டிய பலவிதக் கட்டளைகள் கொடுத்தார். அதில் கடவுளை ஆராதிக்கும் முறையும், சுகாதார விதிகளும், மனிதன் அயலாரிடம் நடந்துகொள்ள வேண்டிய முறைகளும் அடங்கி யிருக்கின்றன.

---

## 7-ம் அத்தியாயம்.

## யூத குலம் II

இறைவன் கட்டளைப்படி தவறாமல் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நடத்தி வந்த வல்லவன் மோசே, கானான் தேசத்தின் எல்லை வரையில் வந்து உள்ளே செல்லாமல் மரித்துப் போனான். அவனுடைய காரியக்காரன் யோசுவா அவன் ஸ்தானத்திற்கு வந்து தெய்வ சித்தம் காட்டின பாதையில் நடந்தான். மகா செழிப்பான கானான் தேசத்தில் அவர்கள் கோத்திர முறைப்படி குடியேறச் செய்தான். இஸ்ரவேலர், யோசுவா காலத்துக்குப்பின் முன்னூறு வருஷமாய் அவனைப் போன்ற தலைவர்கள் அதிகாரத்தின் கீழ் இருந்தார்கள். தலைவர்களை பஹுவான் தாமே தெரிந்து கொண்டு ஏற்படுத்தினார். அவர்களுக்குத் தரிசனம் கொடுத்து ஆதரித்தார். இவர்களில் கடைசியானவன் சாமுவேல் முனிவன்.

சாமுவேலின் தாய் அன்னாள், பிள்ளையில்லாக் குறை நீங்க கடவுளிடம் பிரார்த்தித்துமன்றாடி அவனைப் பெற்றெடுத்தாள். அவனுடைய பிள்ளைப் பிராயம் மாறு முன்னே தேவாலயப் பணிவிடைக்கு ஒப்புவித்து அவன் அங்கே இருக்கும்

படி விட்டுவைத்தாள். சாமுவேல் மகாபக்தன். பரிசுத்த எண்ணங்களே குடிகொண்டவன். ஆகிலும், அவன் காலத்து ஜனங்கள் நமக்கு ஒரு அரசன் இருந்தால் நல்லது என்று அபிப்பிராயம் கொண்டார்கள். அப்படியே அது முதல் அரசர் ஏற்பட்டு ஐந்நூறு வருஷகாலம் ஆண்டு வந்தார்கள். அவர்கள் காலங்களில் கடவுளின் திரு அருளைக் கூறிப் பாவத்தைக் கண்டித்த சில முனிவர் பெருமையையும், நீதிமுறையாய் அரசாண்ட சில அரசர் தன்மையையும் கொஞ்சம் சொல்லிக் கொள்ளுவோம்.

முதல் அரசன் சவுல். அவனுக்குப் பின் அவனுடைய மருமகனும் சேனாதிபதியுமாய் இருந்த தாவீது பட்டத்துக்கு வந்தான். தாவீது சிறு வயதில் ஆடுமேய்க்குங் காலத்தில் ஆடுகளைக் களவு செய்யவந்த சிங்கம் ஒன்றைக் கொலை செய்தவன். மற்றொரு சமயம் கரடி ஒன்றுக்கு அதே சிக்ஷை கொடுத்தவன். இஸ்ரவேலரோடு சண்டை செய்த பெலிஸ்தியரின் தலைவனான கோலியாத் என்னும் ராக்ஷதனைக் கொன்றவன். இளம்பிராய முதல் பஹுவானுடைய கருணைக்கடலில் ஆழ்ந்து ஈடுபட்டவன். இருதயம் பொங்கிக் கவிபாடி அவற்றைப் பல்வகை வாத்தியங்களில் இன்னிசையுடன் பாடிய ஆவல் அடங்காதவன். தாவீது அரசன் கடவுளுக்கு ஆலயம் கட்ட இச்சைகொண்டு சகலவிதப் பொருள்களும் சேகரித்து வைத்தான். மரணமானபின் அவன் குமாரன் ஆலயம் கட்டினான். வேதாகமத்தில் "தாவீது ராஜாவின் சங்கீதங்கள்" என்று ஒரு நூல் இருக்கிறது. எருசலேம் நகரைக் கட்டினது தாவீது அரசனே. அடுத்த அரசன் சாலோமோன் காலம் சண்டையில்லாத சமாதான ஜீவியமாயிருந்தது. அவன், தன் பிதா தேடிவைத்திருந்த ஏராளமான பொருள்களைக் கொண்டு மதிப்பில் அடங்காத ஆலயம் ஒன்று கட்டி முடித்தான்.

சாலோமோன் மஹா சீமானாய் வாழும் நாளில் அந்நிய ஸ்திரீகளை விவாகம் செய்தான். அந்தப் பெண்களால் தேசத்தில் விக்ரஹ ஆராதனை தலைப்பட்டது. இஸ்ரவேல் ராஜ்யம், யூதா, இஸ்ரவேல் என இரண்டு பிரிவானது. யூதா ராஜ்யத்தார் எருசலேமில் சாலோமோன் கட்டின ஆலயத்தில் தொழுது வந்தார்கள். இஸ்ரவேல் ராஜ்யத்தார் படிப்படியாய் வேறு தேவர்களை வணங்கி, தெய்வம் ஒருவர், அவர் மகத்துவர், பரிசுத்தர் என்னும் கொள்கையை மறக்கலானார்கள். யூதா ராஜ்யத்தாரும் பலகால் மோசே தமக்கு விதித்த பிரமாணங்களை மறந்து பல விஷயங்களில் குற்றவாளிகளானார்கள். இவர்களது பாவங்களைக் கண்டிப்பதற்கும் அரசரைத் தமது வாக்கின் பெருமையால் நடத்துவதற்கும் எழும்பின தெய்வ தாசர் பலர் இருந்தார்கள். அவர்கள் சர்வ வல்லவருடைய பெரியதான இரக்கங்களை நினைப்பூட்டி, ஆபத்துக் காலத்தில் அவருடைய அனுக்ரகம் ஜனங்கள் தேடிக் கண்டடைய உதவியாய் இருந்தார்கள். அவருக்குத் தீர்க்க தரிசிகள் என்று பெயர். இவரில் சிலர் வேதாகமத்தை எழுதினவர்கள். பாவத்தைக் கண்டிக்கும்போதே இறைவன் பக்தர்களின் தீனதயாளு, குணக்குன்று என்றும் திட்டமாய்ப் போதித்தார்கள்.

எலியா என்று ஒரு தீர்க்கதரிசி ஸ்ரீ இயேசு பெருமானின் அவதார காலத்துக்கு ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன் இருந்தவன். அக்காலத்து மன்னன் கடவுளின் ஜனத்துக்குத் தகாத நடபடிக்காரனா யிருந்தான். தீர்க்கதரிசி அவனைக் கண்டித்து, "வேந்தே, உன் பாவங்கள் மிகுதி. என் வாக்குப்படியன்றிஉன் தேசத்தில்மூன்று வருஷம்மழைபெய்யாது" என்று கண்டிப்பாய்ச் சொன்னான். அப்படியே நடந்தது.

தீர்க்கதரிசியானவன் நாட்டில் நடந்தேறிய விக்ரஹ வணக்கத்தையும் மற்றும் பாதகங்களையும் பார்க்க சகிக்காதவனாய் காட்டில் வாசஞ் செய்து, தெய்வ கட்டளையால் காகங்கள் அவனுக்கு ரொட்டி கொண்டுவர, அதை உண்டு, ஆற்றின் தண்ணீர் குடித்து ஜீவித்தான். பஞ்சம் தீருவதற்குமுன், தேசத்தைப் பாழாக்கின அந்நிய பூசாரிகள் பலரைக் கொன்றுபோட்டான். இதற்காக ராணி அவனைக் கொல்லத் தேடினாள். தீர்க்கதரிசி அவள் கையில் மடியாமல், தன்னை ஆட்கொண்ட வல்லவர் கிருபையால் அக்கிரமத்தில் துணிந்து நடந்த அரசர் இருவரை மாற்றி, புதிய ராயருக்கு முடிசூட்டி, தனக்குப் பதிலாக எலிசா என்னும் சீர்தொண்டன் ஒருவனைத் தீர்க்கதரிசியாக்கினான். இதன்பின் உயிரோடு பரலோகத்துக்குச் செல்லும் பாக்கியம் பெற்றான்.

எலிசா முனிவர் பெருமையும் நூற்றில் ஒரு பங்கேனும் இங்கே கூறுவது அசாத்தியம். அவனுக்கு அரசரும் பயந்து நடுங்கி, அவன் சமுகத்தில் வாய்புதைத்து நின்றார்கள் அவன் வாக்கின் பெருமை அத்தன்மையதாய் இருந்தது. குஷ்டரோகியைக் குணமாக்கினான். மரித்த குழந்தையை உயிரோடு எழுப்பினான்.

இவனது காலத்தில் அசீரிய அரசன் பலமுறை இஸ்ரவேல் தேசத்தின்மீது படையெடுத்துச் சென்றும் ஒரு முறையாவது சித்திபெறவில்லை. அரசன் அதற்காக மனம் உளைந்து இருக்கும் பொழுது அவனுடைய பிரதானிகள், "எலிசா முனிவரது பலமே இஸ்ரவேலருக்கு மகா அரண். அவர் உயிரோடிருக்கும் காலத்தில் நீர் ஒன்றும் செய்யமுடியா" தென்றார்கள். அரசன் அப்படியானால் நாம் முனிவரைச் சிறை செய்வோமென ஒரு பட்டாளம் அனுப்ப, வந்த

பட்டாளத்தார் குருடராய் வழி தப்பி அலைந்தார்கள். பின்பு முனிவன் கருணையால் உணவு உண்டு, பார்வையடைந்து, அரசனிடம் திரும்பிப் போனார்கள்.

இஸ்ரவேல் ராஜாக்களின் 2-ம் ஆகமத்தில் பதின்மூன்று அத்தியாயங்கள் அவருடைய பெருஞ் செயல்களில் சிலவற்றைக் கூறுகின்றன.

---

## 8-ம் அத்தியாயம்.

## யூத குலம் III

இஸ்ரவேல் ராஜ்யத்தின் பாவங்களினிமித்தம் அசீரியாரஜா அவர்களைச் சிறைகளாக்கித் தன் தேசத்திற்குக் கொண்டு போனான். அவர்கள் மறுபடியும் தமது ஜென்மபூமிக்குத்திரும்பவில்லை. யூதா ராஜ்யம் கல்தேய அரசனால் சிறையாகி சின்னாபின்னப்பட்டது. நகரின் வீடுகள், ஆலயம், சுற்றுமதில் யாவும் கரிக்கோட்டையாயின. இக் கொடிய காலங்களில் ஜனங்களுக்குப் போதித்த முனிவர் பலரில் எசேக்கியேல், எரேமியா, ஏசாயா, தானியேல் முனிவர்களைப் பற்றிச் சிறிது சொல்லுவோம்.

ஏசாயா முனிவர் அரசர் வம்சத்தில் உதித்து மனாசே அரசனுக்குப் பெண் கொடுத்தவர். அக்கொடிய மன்னனால் வாளால் அறுப்புண்டு இறந்தார் என நம்புகிறார்கள். இவர் பாவத்தைக் குறித்து உணர்த்தினதோடு பக்தருக்கு பஹவான் பலத்த கோட்டை, சர்வ சம்பத்துக்கும் உறைவிடம் என்று உறுதிமொழி கூறத் தவறவில்லை. மேலும் உலகை ஈடேற்ற ஒரு இரக்ஷண்ய மூர்த்தி பிறந்து, பரலோக பாக்கியங்கள் பவுசுகள் யாவும் கொண்டு வருவார் என்று தீர்க்கதரிசனம் சொன்னபடியால் அவருக்கு "மங்களவசனி" எனப்பட்

டப்பெயரும் உண்டு. இவரது காலம் ஸ்ரீ இயேசுவுக்கு 700 வருஷங்களுக்கு முன்னனது.

ஏசாயாவுக்குச் சுமார் நூறுவருஷங்களுக்குப் பின் எரேமியா முனிவர் வந்தார். அவர் குடிகளின் பொல்லாப்பைப் பார்த்து அழுது புலம்பினர். அவர்கள் மேல்வரும் ஆபத்துக்கள் இன்னவென்று பட்டோலை படித்தாற்போல் சொன்னர். அவரை அக்கால மன்னனும் குடிகளும் பகைத்துத் துன்பப் படுத்தினர்கள். இவர் காலத்தில் யூதராஜ்பம் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனது. பாபிலோனிய ராஜாவும் எரேமியாவைக் கண்ணியப்படுத்தி சுயாதீனம் கொடுத்தான். பிற்காலம் எகிப்துக்குப் போய் அங்கே தன் சொந்த ஜனத்தின் கையால் மாண்டார்.

ஏசேக்கியேல் யூதர் சிறையிருப்பின் காலத்து ரிஷி. அவர் கண்ட தரிசனங்கள் பல. அவர்கள் விடுதலை பெற்று திரும்பி வரும் காலத்தை முற்கூறினர்.

சிறைப்பட்டு பாபிலோனிய ராஜ்யத்திற்குப் போனவர்களில் சில பக்தசிகாமணிகள் இருந்தார்கள். வேந்தர்களும் அவரது மேன்மைக்குச் சிரம் வணங்கி அவரில் வாலிபருக்குக் கலைகள் புகட்டி, ராஜ்யத்தில் பிரதானிகளாக்கினர்கள். அம்மேன்மக்களில் தானியேல் முனிவன் விசேஷித்தவன். கல்தேய மேதிய குல அரசர் தானியேலை மிகவும் நன்கு மதித்து அவனை ஞானியாகக் கண்டுணர்ந்து தேசத்தின் பிரதானிகளுக்கும் மேலானவனுகக் கொண்டாடினர்கள். தானியேல் முனிவன் உலகில் நடக்கப்போகும் பல பெருங் காரியங்களைக் குறித்து முன்னமே எழுதிவைத்தான். அவற்றில் உலகத்தை ஈடேற்றவரும் பெருமான் பிறந்து பல பாடுபட்டு மரணமடைவார் என்பதும் ஒன்று.

யூதா ராஜ்யத்தின் சிறையிருப்புக் காலம் எழுபது வருடம். தானியேல் காலம் சென்றபின் நெகெமியா எஸ்ரா என்னும் இரண்டு தலைவர் யூதாவில் எழும்பி, கோரேசு என்னும் அரசனுடைய சகாயம் பெற்று, திரும்பத் தம் நாட்டுக்கு வந்து, தேவாலயத்தையும் எருசலேமின் மதில்களையும் கட்டினார்கள். தேவாராதனைகள், பலிகள், பண்டிகைகள் யாவும் பழையபடி நடந்து வந்தன. இதற்கு நானூற்று நாற்பத்தைந்து வருஷத்துக்குப் பின் ஸ்ரீ இயேசு பெருமான் அவதரித்தார். அவர் யூதரைக் கூட்டிச் சேர்த்து யுத்தம் செய்து துன்பம் இல்லாத ஒரு இராஜ்யம் ஏற்படுத்துவார் என்பது யூதர்களுடைய நம்பிக்கை. அவர் பாவத்தைப் போக்கும் சாந்த பிரபு என்று அவர்கள் எதிர்நோக்கவில்லை.

---

## 9-ம் அத்தியாயம்.

### ஸ்ரீ இயேசு பெருமானின் ஊழிய ஆரம்பம்.

யூதகுல வாலிபரின் ஜாதி ஆசாரப்படி ஸ்ரீ இயேசு பெருமான் முப்பது வயதானபோது தாம் உலகத்தில் நிறைவேற்றவந்த ஊழியத்தை ஆரம்பித்தார்.

அக்காலங்களில் சகரியாவின் மகனாகிய யோவான் ஜனங்களுக்குப் பிரசங்கம் பண்ணி, பாவம் கொடியது என்றும், அதற்கு வரும் பலன் நிச்சயமானது, மாறாதது என்றும் தெளிவாய்த் தெரிவித்தான். பிரசங்கம் கேட்டுப் பாவத்தை வெறுத்து அறிக்கை யிட்டவர்களுக்கெல்லாம் ஞானஸ்நானத் தீட்சை கொடுத்தான். ஜனங்கள் அவனை மகா தீர்க்கதரிசி என்று நன்கு மதித்து எத்திசையிலுமிருந்து அவன் பிரசங்

கம் கேட்கத் திரண்டு கூடினார்கள். சிலர் அவன் தான் யூதரை ரக்ஷிக்கவரும் மேசியாவோ என்று எண்ணினார்கள்.

யோவான் ஒட்டகமயிர் உடை தரித்து காட்டிலுள்ள காய் கனி தேன் உண்டு துறவியாய் வனத்தில் வாசஞ் செய்தான். இரக்ஷண்யமூர்த்தி அதிசீக்கிரம் வருவார் என்று எதிர் நோக்கினான். அவர் வருமுன்னதாகவே ஜனங்களுக்கு அவரைக் குறித்துப் போதித்து அவரது சுபாவத்தை சீர்திருத்த வேண்டுமென்பது அவனுடைய அபிலாசையும் ஜீவிய நோக்கமுமாய் இருந்தது.

யூதஜனங்களுடைய முக்கியமான குற்றங்களில் ஒன்று தமது குலம் மகாமேலானது என்கிற மேட்டிமை. தாம் கடவுளைச் சரியான முறைப்படி பூஜிப்பதால் மகா பரிசுத்தமான ஜனம் என்று எண்ணினார்கள். தம்முடைய அநீதியான நடபடிக்கைகளைப் பற்றிச் சிறிதும் யோசிக்காதிருந்தார்கள். யோவான் அவர்களைப் பார்த்து, "விரியன் பாம்புக் குட்டிகளே, வருங்கோபத்திற்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வழி காட்டினவன் யார்? மனந்திரும்பினேன், பாவஞ் செய்யமாட்டேன் என்றால் அது காணாது. மனந் திரும்புதலுக்கு அடையாளமாக நன்மை செய்யுங்கள். தோட்டத்தில் நல்ல கனி இல்லாத மரங்களை என்ன செய்வார்கள்? வெட்டி விறகாக்குவார்கள். நன்மை செய்யாமல் ஜீவித்தால் உங்கள் கதி தான் என்னவாகும்? உங்களுக்கும் கோடாலி தயாராய் இருக்கிறது" என்றான்.

ஜனங்கள் உணர்வடைந்து, "சரிதான், ஐயா, எப்படி நன்மை செய்கிறது?" என்றார்கள்.

யோவான், "செல்வம் படைத்து சுகமாய் வாழுகிறவர்கள் ஏழைகளைக் கவனியுங்கள். உண்ண ஆகாரமின்றி, உடுத்

தக் கந்தையும் இல்லாதவனுக்குக் கொடுத்து உதவி செய்யுங்கள்'' என்றான். நாங்கள் என்ன நன்மை செய்யலாம் என்ற போலீஸ் சேவகரை நோக்கி, "ஒருவர் மேலும் அநியாயக் குற்றம் சாட்டாதீர்கள்'' என்றான். அப்படியே வரிவசூல் செய்கிறவர்களைப் பார்த்து, "குறித்த தொகைக்கு மேல் அநியாய வரி வாங்கவேண்டாம்'' என்றான்.

அவனுடைய சத்திய வசனத்தையும் அச்சமற்ற சொற்பொழிவையும் கண்ட ஜனங்கள், "இவன் தான் நம்மை ரக்ஷிக்க வந்த பெரியவனோ, இரக்ஷண்ய மூர்த்தி இவனோ என்று ஆலோசித்தார்கள். இதைக் கவனித்து, யோவான், "எனக்குப் பின் ஒருவர் வருகிறார்; அவருடைய பாதரக்ஷை தூக்க எனக்கு யோக்கியதை இல்லை. நான் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன். அவரோ பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார். ஆபிரகாம் எங்கள் பிதா, அதினாலே நாங்கள் ரட்சிக்கப்படுவோம் என்று சொல்லுவதில் என்ன பிரயோஜனம்? சிருஷ்டிகர்த்தா இந்தக் கற்களால் ஆபிரகாமுக்குச் சந்ததி உண்டாக்க வல்லவர். அசுத்த சிந்தையும் தகாத கிரியைகளும் நீக்குங்கள். அவர் இவைகளைச் சகியார்'' என்றான்.

அச்சமயம் ஸ்ரீ இயேசு பெருமானும் அவ்விடம் வந்து தமக்கும் ஞானஸ்நான தீட்சை கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். யோவான் அதற்கு, "ஆண்டவனே, இது தகுமோ, அடிமையல்லோ தேவரீரிடம் தீட்சை பெறவேண்டும்'' என்றான். எம்பெருமான் அதற்கு, "அப்பா, இப்பொழுது இடங்கொடு. இவ்விதமாய்ச் சகல நீதியையும் நிறைவேற்றுவது நமக்குத் தகுதி'' என்றார். யோவான் அவருக்கு இணங்கி, யோர்தான் என்ற நதியில் ஞானஸ்நானம்

கொடுத்தான். அவர் ஆற்றிலிருந்து கரை எறினவுடனே வானம் திறந்தது. தேவ ஆவியானவர் புருவைப்போல் அவர்மீது இறங்கினர். 'இவர் என்னுடைய நேச குமாரன். இவர்மேல் வாஞ்சையாய் இருக்கிறேன்' என்ற அசரீரி வாக்கும் அச்சமயம் கேட்டது.

தீட்சை நிறைவேறின உடனே எம்பெருமான் அந்த நதியை அடுத்த வனத்தில் போய் நாற்பது நாள் இரவு பகல் ஜெபித்துத் தபோ நிஷ்டையில் இருந்தார். காட்டு மிருகங்கள் நடுவில் தங்கினர். தேவதூதாட்கள் அவருக்கு ஊழியம் செய்தார்கள். யாதொரு உணவும் அவர் அந்நாட்களில் எடுத்துக்கொள்ளவில்லை. தாம் நிறைவேற்ற வந்த பெரிய வேலை முடிக்கத் தம்மை ஆயத்தப்படுத்தினர். நாற்பது நாளும் முடிந்த பிறகு பசியாய் இருந்தார்.

---

## 10-ம் அத்தியாயம்.

### இயேசு பஹவானின் ஊழியம். யோவான் முனிவர் சாட்சி. முதல் சீஷர்

ஸ்ரீ இயேசு பஹவானுடைய பூலோக ஊழிய காலம் மூன்று வருஷமும் ஆறு மாதமும். ஞானஸ்நான தீட்சை பெற்ற நாள் முதல் தமது அன்னையின் வீடு துறந்து, யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலும் சுற்றுப்புறங்களிலும் திரிந்து, கடவுளின் பிதாவடைவான பேரன்பைக் குறித்தும், மனிதன் அவரை நேசித்து பூஜை செய்ய வேண்டிய முறையைக் குறித்தும் உவமான வியாக்கியானங்களோடு பிரசங்கித்தார். ஜனங்கள் பெருங் கூட்டங்களாய் அவரைப் பின் தொடர்ந்து அவர் வாய்மொழிகளை ஆவலாய்க் கேட்டார்கள்.

அவர் வருகிறார் என்று அறிவிக்க உலகில்பிறந்த யோவா னுடைய நிர்தாக்ஷண்யமான உபதேசம் அக்காலத்து ஏரோது அரசனுக்கு வெறுப்பாய் இருந்தது. அவன் பல பாவங் களுக்கும் அஞ்சாதவன். சகோதரன் மனைவியை அப கரித்தவன். ஆதலின் யோவானைச் சிறையில் அடைத்து வைத்தான். யோவான் அப்போது, இரக்ஷண்ய மூர்த்தி இவர்தானோ, அல்லவோ என்று சந்தேகித்து, தன் சீஷர் களில் இரண்டு பேரை அவரிடம் அனுப்பி, "எம்பெரு மானே, யூத ஜாதியானது வருவார் வருவார் என்று வாடிக் காத்திருந்த ரக்ஷண்யமூர்த்தி தேவரீர்தானோ, அல்லது இன் னும் நாங்கள் காத்திருக்கவேண்டுமோ?" என்று விசாரித்தான்.

சுவாமி அத்தருணம் பிரசங்க வேலையாய் இருந்தார். குருடர், சப்பாணிகள், குஷ்டரோகிகள் அவரைச் சூழ உட் கார்ந்து இருந்தார்கள். யோவானுடைய சீஷர் பிரசங்கம் கேட்டார்கள். நோயாளிகளை அவர் குணமாக்கும் மகத்து வத்தையும் கண்டார்கள். பஹவான் தம்மைக் கேள்வி கேட்ட வர்களைப் பார்த்து, "நீங்கள் கண்டவைகளையும் கேட்டவை களையும் யோவானிடம் போய்ச் சொல்லுங்கள்" என்றார். மேலும், "உலகில் பிறந்த மனுஷரில் யோவானைவிட வல்லவர் கள் காண்பது அறிது" என்றார்.

அவர் நடந்து போவதைக் கண்ட யோவானும், "இதோ, உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி! இவரே பாவ நிவர்த்தி செய்யும் பெருமான்" என்றான். அவன் சீஷர் இதைக் கேட்டபோது இரண்டு பேர் உடனே, ஆஹா, பாவநிவர்த்தி கொண்டு வந்த மூர்த்தி இவரா! என்று அவர் பின்சென்று அவருடைய சீஷரானார்கள். அன்று இரவு அவரோடு தங்கினார்கள். மறுநாளில் அவர்களில் ஒரு

வணுகிய அந்திரேயா என்பவன் தன் சகோதரனுகிய சீமோனைக் கண்டு "அண்ணு! மோசே முனிவரும் மற்றும் பல முனிவரும் வருவார் என்று சொன்ன இரக்ஷண்யமூர்த்திவந்திருக்கிருர், வா, என்று சொல்லி, ஸ்ரீ இயேசுவினண்டை அழைத்து, வந்தான். பஹவான் அவனைக் கண்டபோதே அன்புகூர்ந்து "யோனுவின் மகனுகிய சீமோனே, உனக்குக் கேபா என்ற பட்டப்பெயர் இருக்கும்" என்றுர். கேபா என்றுல் பேதுரு; அதாவது கல். மறு நாளில் சுவாமி பிலிப்பு என்பவனைக் கண்டு, "என்னேடு வா" என்றுர். அவனும் உடனே அவரைப் பின் தொடர்ந்து போய் சிஷனுனுன்.

பிலிப்பு தன் தோழன் நாத்தான் வேலைக் கண்டு, "ஐயா மோசே முனிவரும் தீர்க்கதரிசிகளும் வருவார் என்று சொன்ன மேசியாவைக் கண்டாம்" என்றுன்.

நாத்தான்:—அது யார்? விவரமாய்ச் சொல்லு.

பிலிப்பு:—நாசரேத்தூரான், யோசேப்புடைய மகன் இயேசுதான் அவர்.

நாத்தான்:—ஆஹா, நாசரேத்திலிருந்து நன்மை வருவதுண்டா!

பிலிப்பு:—வந்து பார்.

நாத்தான்வேல் தம்மைப் பார்க்கவருவதைக் கண்டு பஹவான், "இதோ கபடமறியாத உத்தம இஸ்ரவேலன்" என்றுர். நாத்தான்வேல் அதற்கு, "சுவாமி, என்னை நீர் எப்படி அறிவீர்?" என்றுன்.

சுவாமி:—அப்பா, நான் உன்னை அத்திமரத்தின் கீழ் கண்டேன்.

நாத்தான்வேல் அத்திமரத் தண்டை தான் ஜெபம் செய்ய ரகசியமாய்ப் போவதை யாருமே அறியார் என்று

எண்ணியிருந்தான். இந்த வார்த்தைகளைக் கேட்டு அதிசயித்து, பேசினவருடைய திவ்ய சொரூபத்தை ஏற இறங்கப் பார்த்து, "ஸ்வாமி, நீர் தேவகுமாரன், இஸ்ரவேலின் ராஜா" என்றான்.

சுவாமி:—நான் உன்னை அத்திமரத்தின்கீழ் கண்டது பெரிய காரியமா? அல்ல. நீ இன்னும் மகா பெரிய காரியங்களைக் காண்பாய் என்றார்!

---

## 11-ம் அத்தியாயம்.

### ஸ்ரீ இயேசு பஹவான் கானூர் கல்யாணத்துக்குப் போனது.

பஹவான் யூதேயா நாட்டிலிருந்து கலிலேயா நாட்டிற்குப் போனார். நாசரேத்துக்குச் சமீப தூரத்திலிருந்த கானா என்னும் ஊரில் ஒரு கல்யாணம் நடந்தது. மரியம்மாள், சீஷர், இயேசு பஹவான், எல்லாரும் போயிருந்தார்கள். அந்த நாட்டு ஆசாரப்படி கல்யாண விருந்தில் திராக்ஷரசம் பரிமாறினார்கள். (அந்த ரசம் பழத்திலிருந்து எடுத்தது. தோஷமற்றது). பந்தி நேரத்தில் ரசம் குறைவுபட்டது. மரியம்மாள் மகனிடம் போய், "அப்பா, ரசம் குறைவுபட்டுப் போயிற்று ஐயா" என்று மகா வருத்தத்தோடு சொன்னாள். சுவாமி, "அம்மா, அவசரப்படாதே! என் வேளையாகவில்லை" என்றார். மரியம்மாள் வேலையாட்களிடம் ஓடிப்போய், "அவர் என்ன சொல்லுவாரோ அப்படிச் செய்யுங்கள்" என்று காட்டிவிட்டாள்"

வேலையாட்களைப் பார்த்து, அவர், அங்கிருந்த ஆறு கல் சாடிகளை ஜலம் ஊற்றி நிரப்பச் சொன்னார். பந்தி பரிமாறு

கிறவன் அதை எடுத்தபோது அது மகா ருசியான திராக்ஷ ரசமாயிருந்தது. சாப்பிட்டவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். எல்லா வீட்டிலும் முதலாவது நல்லரசம் கொடுப்பார்கள். இரண்டாந்தரம் மூன்றாந்தரம் ருசி குறைவானது வரும்; இங்கே கடைசி பரியந்தம் நல்லரசமே வருகிறது. நல்ல மகா ராஜன், என்று பந்தி எஜமானை வாழ்த்திக் கொண்டார்கள். வேலைக்காரருக்கும் எஜமானுக்கும் மட்டும் நடந்த காரியம் தெரியும். இது அவர் செய்த முதலாம் அற்புதம். இதனால் தமது மகிமையை வெளிப்படுத்தினார்.

கல்யாணம் முடிந்த பிறகு தாயாரோடும், சீஷரோடும், சகோதரரோடும், கப்பர்நகூம் ஊருக்குப்போய் அங்கே பஹ வானுக்கு இருந்த வீட்டில் இருந்தார்.

---

## 12-ம் அத்தியாயம்.

### சுவாமி பஸ்கா பண்டிகை ஆசரித்தது

பஸ்கா பண்டிகை யூதருக்கு அக்காலத்தில் இருந்த மூன்று பண்டிகைகளில் முதன்மையானதென்று அறிவோம். எருசலேமில் அக்காலத்தில் திரண்டு கூடும் ஜனங்கள் நகர் கட்டியிருந்த நாலு குன்றுகளிலும் கூடாரங்கள் நெருங்கப் போட்டுத் தங்குவார்கள். அவர்கள் செலுத்தவேண்டிய பலி காணிக்கைக்கான பொருட்கள் தேவலாயப் பிரகாரங்களில் தானே வாங்கலாம். அங்கிருந்த கடைகளின் நெருக் கத்தால் ஆலயம் ஒரு சந்தைக் கடைபோல் ஆனது. மேலும் பற்பல நாடுகளில் இருந்து விதவிதமான காசுகள் நாணயங் கள் கொண்டு வந்த ஜனங்கள் எருசலேமில் வழங்கி வந்த நாணயத்திற்காக மாற்றுவார்கள். அதற்காக காசுக்கடை

நாணயத்திற்காக மாற்றுவார்கள். அதற்காக காசுக்கடைகளும் அங்கே இருந்தன. இத்தனை வியாபாரங்கள் நடைபெறவே, அங்கே பொய், சூது, வஞ்சனை, சந்தடி, சண்டை, எல்லாம் கூடவே வந்து சேர்ந்தன. ஏழைகள் பலர் ஏமாற்றப்பட்டார்கள். பிரதான ஆசாரியருக்கு இந்தக் கடைகளால் நல்ல லாபம். அவர்கள் ஆட்சேபனையின்றிக் கடைகளுக்கு இடம் கொடுத்தார்கள். இறைவனை வணங்கப்போகும் ஜனங்களுக்கு இது எத்தனை துயரத்துக்கு இடமானது!

ஸ்ரீ இயேசு பஹவான் தொழுது கொள்ளும் வாஞ்சையுடன் தமது பிதாவின் வீட்டில் பிரவேசித்தார். அங்கே இருந்த சந்தடி பெருங் கூச்சல்களும், ஆடு மாடு புரு விற்கும் கடைகளும் அவரை வருத்தி அளவற்ற மனநோவை உண்டாக்கின. பிதாவின் வீட்டில், அருள்பெருஞ் ஜோதியை வணங்கி, மனக்குறை நீங்கி, இருதயம் இன்புற்று, பூரித்து நிற்கவேண்டிய சமுகத்தில் இந்தக் கோலமா! கயிற்றினால் சவுக்கு ஒன்று உண்டாக்கி வியாபாரிகளையும் அவர்கள் கூட்டங்களையும் வெளியே போகும்படி அடித்துத் துரத்தினார். காசுக்கடைகளுக்கும் பெரிய மரியாதை. காசுகளைக் கொட்டி, கடைக்காரர் ஆசனங்களைக் கவிழ்த்துப் போட்டு, "என் பிதாவின் வீட்டைக் கள்ளர் குகை யாக்காதிருங்கள். அது சர்வ ஜனத்துக்கும் ஜெபவீடு'! என்றார்.

சீஷர்கள் பார்த்தார்கள். "ஆஹா தீர்க்கதரிசனங்களில் நமது மகாமுனிவர்கள் இவரைக் குறித்து எழுதினார்களே: இப்போது அதெல்லாம் இவர் நிறைவேற்றுகிறார். இவர் இரக்ஷண்ய மூர்த்திதான். சந்தேகமில்லை'' என்று பேசிக்கொண்டார்கள்.

தேவ ஆலயத்தில் இருந்த யூதருக்கு அவர் யாரென்று தெரியாது. அவர்களுக்கு இருந்த ஆச்சரியம் சொல்ல முடியாது. "ஐயனே, நீர் யார்? என்ன அதிகாரத்தில் இப்படிச் செய்கிறீர்? ஒரு கால் நீரே மேசியாவோ? எங்களை ஈடேற்ற வந்த பெருமான் நீரானால் அதை ரூபிக்க அடையாளம் எங்கே, காட்டும்" என்று வாதாடினார்கள். ஆசாரியர் முதலிய அதிகாரிகள் பலருக்கும் அவர்மேல் அடங்காக்கோபம் பொங்கினது. அதோடு, தேவாலயத்தில் பல நோயாளிகளைக் குணமாக்கினார். சாதாரண ஜனங்கள் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் கொண்டார்கள்.

---

## 13-ம் அத்தியாயம்.

### நிக்கோதேமு—ஸ்ரீ இயேசுவை ரகசியமாய்க் காணவந்த யூத அதிகாரி.

ஸ்ரீ இயேசுதேவாலய அதிகாரிகளைப் பகிரங்கமாய் எதிர்த்து தேவாலயத்தைச் சுத்தப்படுத்தின வைபவத்தை அன்று எருசலேமின் வீடுகள் வீதிகள் தோறும் பெரியோர் சிறியோர் நல்லார் பொல்லார் ஆகிய சகலவித மனுஷரும் பேசியிருக்க வேண்டும். அவரை நேசித்தவர் பகைத்தவராகிய சகலவிதமான ஜனங்களும் ஆச்சரியப்பட்டார்கள்; சந்தேகித்தார்கள். இவர்தான் இரக்ஷண்ய மூர்த்தியா? என்ற கேள்வி கல்விமான்கள் சாதாரண மனுஷாட்கள் எல்லாருடைய வாயிலும் இருந்தது.

யூதரில் வேதத்தை எழுதுகிற வேலைக்காரர்களான வேதபாரகரும், அதைப் போதிக்கும் வேலைக்காரரான பரிசேயரும் நியாய சாஸ்திரிகளும் விசேஷமான வகுப்பார். வேதபாரகர்

அரசருக்கு மந்திரிமாராகக்கூடியவர்கள். எருசலேமில் இருந்த மேற்படி வகுப்பார்களுக்குள் ஸ்ரீ இயேசு பெருமானைப்பற்றி ஆயாசம் எக்காலமும் மிகுதியாயிருந்தது. அவர் ஒரு வாலிபன். எந்தப் பேச்சிலும் அவர் வேதபாரகர் பரிசேயர் போதனைக்கு முற்றிலும் விரோதமான போதனையே சொன்னார். அவருடைய வல்லமையைப் பார்த்தும் அவரைப் பகைத்தார்கள். அவர்களின் ஒரு பெரிய மனுஷன் பெயர் நிக்கோதேமு. அவன் தன்னுடைய சந்தேகத்தைத் தீர்க்கும்படி அவரிடம் இரவில் ரகசியமாய் வந்தான்.

நிக்கோதேமு : பஹவானே, தேவரீர் கடவுளிடமிருந்து வந்த குருவென்றே நினைக்கிறேன். மற்றப்படி நீர் செய்கிற வல்லமையான கிரியைகளைச் செய்வது அறிது.

சுவாமி அவன் கருத்தை அறிந்தார். தாம் ஏற்படுத்துகிற தெய்வீக ராஜ்யத்தைக் குறித்து அவனும் யூத தலைவரும் சாதாரண ஜனங்களும் மயங்குகிறதை நினைவு கூர்ந்தார். தம்முடைய ராஜ்யம் சிறிது காலம் இருந்து பின்பு மங்கிப் போகிற உலகத் தன்மையுள்ளதல்ல. அது இருதயங்களை மாற்றி ஆட்சி செய்யும் தெய்வீகத் தன்மையானது என்று அவனுக்குப் போதித்தார்.

ஸ்ரீ இயேசு :—ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தெய்வத்தின் ராஜ்யத்தைக் காணமுடியாது.

நிக் :—அதெப்படி, ஐயா, மறுபடியும் பிறக்கிறது? அது கூடியதா ? மனுஷன் இரண்டாம் தடவை பிறப்பது எவ்விதம் ?

ஸ்ரீ இயேசு :—மனுஷன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கவேண்டியது அவசியம். மற்றப்படி கடவுளுடைய பேரானந்த ராஜ்யத்திற்குள் போகமுடியாது. மாம்சத்தினால்

பிறப்பது மாம்சமாய் இருக்கும். ஆவியினால் பிறப்பது ஆவியாய் இருக்கும். வித்து எப்படியோ, முளையும் அப்படியே. நீ ஆச்சரியப்படாதே, காற்று வீசுகிறது பார். அது எங்கிருந்து வருகிறது, எங்கே போகிறதென்று உனக்குத் தெரியுமா? ஆவியால் மனுஷன் மறு ஜென்மம் எடுப்பது அப்படிப்பட்ட அந்தரங்கமான காரியம்தான்.

நிக்:—சுவாமி, அது எப்படியாகும்? எனக்கு இன்னும் புலப்படவில்லை.

ஸ்ரீ இயேசு:—நீ போதகனல்லவா? உனக்கே தெரியவில்லையே? நான் பரலோகத்தில், பிதாவின் சன்னிதியில் கண்டதைச் சொல்லுகிறேன். நீங்கள் அதை நம்புகிறதில்லை. உங்களில் ஒருவனும் பரலோகத்துக்கு ஏறிப்போய் அவற்றைக் கண்டுகொள்ளமுடியாது. மோசே சீன் வனாந்தரத்தில், இஸ்ரவேலர்களில் பாம்பு கடித்து சாகிறவர்கள் பார்த்து உயிர் பெறும்படி ஒரு வெண்கல சர்ப்பத்தை உயர்த்தினான். அந்தப்படியே தெய்வ குமாரன் சிலுவையில் மரித்து, மனுமக்களுடைய பாவத்துக்காய் மனம் நொறுங்கி மடியும் பரிசுத்த பிதாவின் அன்பை வெளியிடவேண்டும். இவ்விதமாய் சிலுவையில் தொங்கி உயிர் விடும் தேவ மைந்தனை விசுவாசிக்கிறவன் எவனும் கெட்டுப்போகாமல், பாவ மரணத்துக்குத் தப்பி, நித்திய ஜீவனைக் காண்பான். பாவி சாகா ஜீவன் பெறும்படி, தமது மைந்தனையே நீசச்சாவுக்கு ஒப்புக்கொடுத்து, பிதாவானவர் தமது நேசத்தை வெளியிட்டார். பாவ உலகத்தாரைத் தீர்ப்பிட்டு அழிக்கும்படியாக அவர் திருக்குமாரனை அனுப்பவில்லை. பாவி தன்னிலுள்ள தோஷம் நீங்கி ரக்ஷிப்பு அடையும்படியாகவே அனுப்பினார். அவனை அழிப்பது அல்ல, ஈடேற்றுவதே அவர் நோக்கம். அவரை

விசுவாசியாதவன் அவரிடம் வராமல் ரக்ஷிப்பை அடையா மற்போகிறுன். தனக்குத்தானே தீர்ப்பிட்டுக் கொள்ளுகிறுன். அவனுடைய நஷ்டம் அவன் சொந்த கிரியைகளால் தேடிக் கொண்டதே.

உலகத்தில் வெளிச்சம் எவ்வளவு பிரகாசித்தாலும் தீமை செய்கிறவர்கள் இருட்டில்தான் வேலை செய்வார்கள். அவர்களுக்கு வெளிச்சத்தின்மேல் வெறுப்பு எதனுல் உண் டாகிறது? அவர்களுடைய சொந்த நடபடிதானே காரணம் என்று சொன்னுர். உபதேசம் பெற்றுத் திரும்பிப்போன நிக் கோதேமு ஆயுள் பரியந்தம் அவர்மேல் கொண்ட அபிமா னத்தை விடவேயில்லை. அந்தரங்க சிஷனுய் இருந்தான்.

---

## 14-ம் அத்தியாயம்.

### யோவான் முனிவரும் ஸ்ரீ இயேசு பஹவானும்

யோவான் முனிவர் பிரசங்கவேலை ஆரம்பித்தவுடனே ஜன ங்கள் திரண்டு கூட்டங்களாய் அவன் போதனை கேட்க வந்தார்கள். ஆகிலும் ஸ்ரீ இயேசு பெருமான் பிரசங்கிக்க ஆரம்பித்தபோது அவருடைய வார்த்தைகள் பதின்மடங்கு வல்லமையுள்ளதாயும் அற்புத அடையாளங்களின் மகத்துவம் பொருந்தியதாயும் இருந்ததால் ஜனங்கள் படிப்படியாய் பஹவானைப் பின் சென்றுர்கள். சூரியனைக் கண்ட காந்த விளக்குப்போல் முனிவர் பிரஸ்தாபம் குறைவுபட்டது. ஜனங் கள் இதைக் குறித்து எடுத்துப் பேசினபோது யோவான், அவர் என்னிலும் பெரியவர், வல்லவர். நான் அவருடைய தூதன். அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டுமென்று நிகரற்ற பெருந்தன்மையுடன் சாட்சி சொன்னுன். மேலும்

அவன், "நான் பஹவானைக் குறித்தும் அவருடைய பிரஸ்தாபத்தைக் குறித்தும் பரவசமாகின்றேன். பரலோகத்திலிருந்து தான் எந்தப் பெரிய வரமும் வருகிறது. பூமியிலிருந்து உண்டானவன் பூவுலகின் சங்கதி பேசுவான். பரலோகத்திலிருந்து வந்தவரோ, மகாதேவனுடைய சமுகத்தில் நடக்கும் பெருங் காரியங்களைச் சொல்லுவார். அவருடைய வார்த்தைகளை எல்லாரும் கேட்டு சிரமேல் கொள்ளுவது சரி. பிதாவாகிய இறைவன் தமது பிள்ளையின்மேல் அன்பு பொங்கி சகல அதிகாரமும் அவர் கையில் கொடுத்திருக்கிறார். அவர் சாட்சியை ஏற்றுக்கொண்டவன் கடவுள் சத்தியபரன் என்று ரூபிக்கிறான். அவன் என்றும் சாகா வரம் பெற்றவன். அவன் பேரில் விசுவாசம் கொள்ளாதவன் ஜீவனைக் காண்பதில்லை. கடவுளுடைய கோபத்திற்குப்பாத்திரன் ஆகிறான்' என்றான்.

யோவான் முனிவரை ஏரோது ராஜாவின் மனைவி கொல்லத் தேடினாள். ஏரோது அவனைச் சிறையில் வைத்தான். தான் சத்தியம் பேசின தோஷத்திற்காக சிறையில் அடைபட்டு வருந்துங் காலத்தில் சீஷர்கள் இரக்ஷண்ய மூர்த்தியின் மகத்துவத்தையும், தன்னைக் குறித்து அவர் கொடுத்த அருமையான சாட்சிகளையும் கேட்டு மனம் ஆறுதலடைந்திருக்கலாம்.

அவனுடைய விரோதியான ஏரோதியாள் தருணம் பார்த்து ராஜாவின் அநுமதி பெற்று, முனிவனைக் கொன்று போட்டாள். யோவானுடைய சீஷர்கள் உடலை எடுத்து நல்லடக்கம் செய்தார்கள்.

ஸ்ரீ இயேசு பஹவானுடைய பிரசங்கம் கேட்ட அநேக ஜனங்களில் சிலர் அவருடைய உபதேசங்களை உணர்ந்து அவரிடம் விசுவாசம் வைத்தார்கள். அவர்களில் சிலர் யோவானுடைய சீஷராயிருந்தார்கள்.

# 15-ம் அத்தியாயம்.

## ஸ்ரீ இயேசு பஹவான் சமாரியாவில் செய்த பிரசங்கம்

சுவாமி யூதேயா நாடுவிட்டு கலிலேயாவுக்குப் போகும் கருத்துள்ளவராய் சமாரியா நாட்டு வழியாய்ப் பிரயாணம் செய்து சீகார் என்னும் கிராம கிணற்றின் அண்டையில் தவிப்போடும் தாகத்தோடும் உட்கார்ந்தார். அவர் சீஷர்கள் கிராமத்துக்குள் சாப்பாடு வாங்கப் போய்விட்டார்கள். அச்சமயம் ஒரு மனுஷி அங்கே தண்ணீர் எடுக்க வந்தாள்.

அக்காலத்தில் யூதர் சமாரியரை மகா தாழ்வானவர்களாக மதித்தார்கள். சமாரியர் அசீரியரும் யூதரும் சேர்ந்த கலப்புஜாதி. பூர்வத்தில் பல தெய்வங்களை வணங்கினவர்கள். கி. மு. 530-வருஷங்களுக்கு முன் யூதபோதகர்களின் போதனை அடைந்து, அதுமுதல் ஒரே தெய்வத்தை பூஜித்து, ஒரு நல்ல ஆலயமும் தங்கள் இடத்து மலைமேல் கட்டிக் கொண்டார்கள். என்றாலும் யூதர் அவர்களை மகா நீசஜென்மமாக மதித்தார்கள்.

ஸ்ரீ இயேசு பெருமான் தண்ணீருக்கு வந்தவளைப் பார்த்து, "பெண்ணே, தாகமாயிருக்கிறேன். தண்ணீர் கொடு" என்றார். அவள் திடுக்கிட்டு, "சுவாமி நான் சமாரிய ஜாதி. நான் தண்ணீர் கொடுக்க நீர் குடிப்பீரா, மெய்தானா?" என்றாள்.

அதற்கு பஹவான் "உன்னிடம் பேசுகிறவர் யார் என்று உனக்குத் தெரியவில்லை. தெரிந்தால், என் தாகந் தீர் அப்பா என்று கெஞ்சுவாய்" என்றார்.

சமாரியப் பெண், "ஐயனே, கிணறு மகா ஆழமாய் இருக்கிறது. தண்ணீர் மொள்ள உம்மிடம் பாத்திரமும் கிடையாது. எனக்கு எப்படித் தாகந் தீர்ப்பீர்?" என்றாள்.

சுவாமி, "உனக்குச் சர்வ வல்லவர் மனுஷருக்குக் கொடுக்கும் ஈவைப்பற்றித் தெரியாது' என்றார்.

ஸ்திரீ: "இந்தக் கிணற்றை எங்கள் பிதாவாகிய யாக்கோபு எங்களுக்குத் தந்தார். அவரைவிட நீர் பெரியவரா! அவர் இந்த ஜலம் சாப்பிட்டார். அவர் பெண்டீர் பிள்ளைகள் சாப்பிட்டார்கள். ஆஹா, இதற்கு ஈடான தண்ணீரும் உண்டா" என்றாள்.

சுவாமி: இந்தக்கிணற்றுத் தண்ணீர் குடித்தால் மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் நீரைப் பானம் பண்ணினவனுக்குத் தாகம் உண்டாகாது. அது நித்திய காலமாய் அவனில் ஊறும் ஜீவ ஊற்றாய் இருக்கும்" என்றார்.

ஸ்திரீ: அவர் கருத்தை அறியாமல், "ஐயனே, எனக்கு அந்த தீர்த்தம் தரவேண்டும். எனக்கு மறுபடியும் தாகம் உண்டாகாமலும் இந்தக் கிணறு தேடி நான் அலையாமலும் இருக்கத் தேவரீர் கிருபை கூரவேண்டும்" என்று பதைத்துச் சொன்னாள்.

அவளுக்கு ஜீவதண்ணீர் கொடுக்கும்படியாக பஹவான் மனம் உவந்து, "உன் கணவனை அழைத்துவா" என்றார்.

ஸ்திரீ, "சுவாமி நான் நாதன் இல்லா ஏழை" என்றாள்.

பஹவான்: "சரிதான். உனக்கு ஐந்து கணவர் இருந்தார்கள். இப்போது உனக்கு இருக்கிறவன் கணவனல்ல" என்றார்.

அவள் இதைக் கேட்டவுடன் உணர்வடைந்து, இவர் மகா புருஷன்; சாதாரண மனுஷன் அல்ல என்று எண்ணமிட்டாள். இவரிடம் நான் எனக்குத் தெரியாத பெருங் காரியங்களைக் கேட்டுக்கொள்வேன் என்று தீர்மானம் பண்ணினாள். யூதர் சமாரியரைப் பகைத்த பெரிய காரணம் அவர்

கள் எருசலேமில் தொழுதுகொள்ளவில்லை என்பதே. சமாரியருடைய எண்ணமெல்லாம் தங்களுடைய மலைக்கும் ஆலயத்துக்கும் நிகர் கிடையாது என்பது.

பெண்: "அப்பனே, நீர் மகாரிஷி; உமக்குத் தெரியும். கடவுளைத் தொழுதுகொள்ள எந்த மலை தகுந்தது? எருசலேம் நல்லதா? அல்லது சமாரியா மலை நல்லதா?" என்றாள். பெருமான் அதற்கு, "பெண்ணே, எருசலேமிலும் சமாரியாவிலு மட்டும் அன்று. பூலோகத்தின் சகல இடங்களிலும் பிதாவைத் தொழுதுகொள்ளக் காலம் வருகிறது. நீங்கள் அறியாமல் தரிசிக்கிறீர்கள். நாங்கள் அறிந்து தரிசிக்கிறோம். யூதர் வழியாகவே இரக்ஷிப்பு வரவேண்டுமென்பது அநாதி தீர்மானம்.

மெய்த்தொண்டர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழும் காலம் வரும். அது இப்பொழுது வந்துவிட்டது. கடவுள் அரூபி; அவருக்கு ரூபமில்லை. அவரைத் தொழுது கொள்வோர் தமது இருதயத்தில் ஆராதனை செய்யவேண்டும்" என்றார்.

பெண், "மேசியாவாகிய இரக்ஷண்ய மூர்த்தி வந்துவிட்டால் இதெல்லாம் தெளிவாய் நமக்குச் சொல்லுவார்" என்று பதைத்துச் சொன்னாள்.

சுவாமி: "அம்மா, உன்னோடு பேசுகிற நானே அந்த இரக்ஷண்ய மூர்த்தி" என்றார்.

ஸ்திரீ இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் உடல் பூரித்து சந்தோஷம் பொங்கி ஊருக்குள் ஓடி, ஜனங்களிடத்தில், "ஒரு மஹா ரிஷி வந்திருக்கிறார். அவர் என்னுடைய பூர்வோத்திரம் எல்லாம் சரியாய்ச் சொன்னார். அவர்தான் இரக்ஷண்ய

மூர்த்தியாய் இருக்கலாம் என்று நினைக்கிறேன். வந்து பாருங்கள்'' என்று சொன்னாள்.

இரக்ஷண்யமூர்த்தி என்ற நாமம் காதில் கேட்டவுடனே அவர்கள் ஓடிவந்து அவள் வார்த்தைகள் மெய்தானா என்று அறியும்படி திரண்டு கூடினார்கள்.

இதற்கிடையில் சீஷர்கள் வந்து, சுவாமி சமாரியப்பெண்ணிடம் பேசுகிறார்!! இது சரிதானா? என்று சிந்தனை பண்ணிக்கொண்டு நின்றார்கள். "ஐயனே, சமாரியப் பெண்ணிடம் பேச என்னகாரியம் இருக்கிறது, என்று கேட்க அவர்களுக்கு நாவு எழவில்லை. அதை நிறுத்தி, பெருமானே, சாப்பிட வர வேண்டும் என்றார்கள். அவர் அதற்கு, உங்களுக்குத் தெரியாத ஆகாரம் ஒன்று எனக்கு இருக்கிறது என்றார். சீஷர்கள் அவர் கருத்தை அறியாமல் நிற்பதைக் கவனித்து அவர் என் பிதாவின் சித்தப்படி செய்து என் வேலையை நிறைவேற்றினால் அதுவே என் ஆகாரம். மகா திருப்தி'' என்றார்.

சமாரியர் கூட்டமாய் அவரைக் காண வந்தார்கள். அவருடைய ஞான உபதேசம் கேட்டு அவர்மேல் விசுவாசம் வைத்தார்கள். அன்று அவரைப் போகவிடாமல் இரண்டு நாள் நிறுத்திக் கொண்டார்கள். அவரே இரக்ஷண்யமூர்த்தி என்று அவர்கள் நம்பினார்கள்.

பஹவான் பின்பு கலிலேயா நாடு போய்ச் சேர்ந்தார். அங்கே அவருடைய வேலை வெகுவாய் நடைபெற்றது.

---

# 16-ம் அத்தியாயம்.

## கானவூரில் ராஜர்வின் வேலையாளின் மகன் குணமானது.

ஸ்ரீ இயேசு பஹவான் கலிலேயாவில் இருக்கிறார் என்ற செய்தி அந்த நாட்டுத் திசையெங்கும் பரவினது. எருசலேமில் அவரைக் கண்ட பலர் அவரிடம் வந்து கூடினார்கள். சிலர் அவர்மேல் விசுவாசம் வைத்தார்கள்.

கானவூரில் பஹவான் முன்னே கல்யாணத்திற்குப் போய்த் தண்ணீரைத் திராக்ஷ ரசமாக்கினார் அல்லவா. சுவாமி அவ்வூருக்குத் திரும்பிப்போனார். ஒரு பிரபுவின் குமாரன், அடுத்த கிராமத்தில் வியாதியாய் இருந்தான். பிரபு, எருசலேமுக்குப் போன பெருமான் எப்போ வருவாரோ என்று திசை பார்த்து இருந்தான். அவர் கானவூரில் இருக்கிறார் என்று செய்தி எட்டியவுடன் வந்து, அவரைத் தன்னிடம் வரையில் போகும்படி வேண்டிக் கொண்டான். "சுவாமி, என் பிள்ளை மரண அவஸ்தையில் கிடக்கிறான், வந்து அவனைக் குணமாக்கும் ஐயனே" என்று கெஞ்சினான். பஹவான் "அப்பா, அற்புத அடையாளம் கண்டால் மாத்திரம் நம்புவீர்கள்" என்றார். அவனோ, "சுவாமி, வாரும், வாரும், என் பிள்ளை சாகும் நிலைமையில் கிடக்கிறான். உயிர் போகுமுன் வாரும்" என்று சொல்லி நிலை கலங்கி நின்றான்.

ஸ்ரீ இயேசு, "பயப்படாதே, வீட்டுக்குப்போ. உன் மகன் சுகமாய் இருக்கிறான்" என்றார். அவனும் அவர் வார்த்தையை நம்பிப் போய் விட்டான். அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்கொண்டு வந்து, பையன் நன்றாய் இருக்கிறான் என்று தெரிவித்தார்கள். எப்போது குணமானான் என்று விசாரித்தான். அவர்கள் சொன்ன நேரம் சுவாமி போகக் கட்டளையிட்ட அதே நேரம் என்று கண்டான்.

# 17-ம் அத்தியாயம்.

## எருசலேமில் முப்பத்தேட்டு வருஷ நோவாளியைக் குணமாக்கினது.

என்ன விதமாய் பஸ்காப் பண்டிகையை பஹவான் எருசலேமில் ஆசரித்தார் என்று கவனித்தோம். இனி அறுப்புக்காலப் பண்டிகை ஆசரிக்க எருசலேமில் கூடின கூட்டங்கள் நடுவில் அவர் செய்த மகத்துவச் செயல்களையும் பேசின உபதேசங்களையும் கவனிப்போம்:

இந்தப் பண்டிகைக்கு எருசலேமில் யூதஜனங்கள் எத்திசையிலுமிருந்து வந்து கூடி மரக்கிளைகள் கொம்புகளால் கூடாரம்போட்டு வாசம் செய்து, வெகு ஆநந்தமாய் காலம் போக்கி, தேவாலய ஆராதனைகளுக்குப் போய்வருவார்கள். எருசலேம் நகரைச் சுற்றியுள்ள கோட்டைச் சுவருக்கு பல வாசல்கள் இருந்தன. அவற்றிற்கு அலங்கார வாசல் ஆட்டு வாசல் மீன்வாசல் என்பதுபோல் நல்ல பெயர்கள் இருந்தன. வாசல்களை அடுத்து மண்டபங்களும் குளங்களும் இருந்தன. ஆட்டுவாசல் அருகில் பெதஸ்தா என்று பெயர் கொண்ட நல்ல குளம் ஒன்று இருந்தது. அதில் நல்ல ஊற்றுகள் இருந்தன. அதை அடுத்த மண்டபத்தில் வியாதியஸ்தர் பலர் படுத்து இருப்பார்கள். குளத்தில் ஊற்றுப் பொங்கி ஜலம் கலங்கும்போது வியாதியஸ்தர்போய் முழுகினல் சௌக்கியமடைவார்கள்.

ஸ்ரீ இயேசு பஹவான் அங்கே போனபொழுது நெடுநாள் நோயாளி ஒருவன் படுத்திருக்கக்கண்டு மனதுருகி அவனைப் பார்த்து, "குணமாக ஆசிக்கிறாயா?" என்றார். அவன், "அப்பனே, என் கதியைப்பார் ஐயா; முப்பத்தெட்டு

வருஷமாய் நான் இங்கே பாயும் படுக்கையுமாய்க் கிடக்கிறேன். குளத்தின் ஜலம் கலங்கும்போது யாராவது சக்தியுள்ளவன் முந்தி இறங்கிவிடுகிறான். என்னைக் கவனிப்பார் இன்றி இப்படிக் கிடக்கிறேன். ஐயா" என்று வருந்தினான்.

சுவாமி, "உன் படுக்கையைச் சுருட்டி எடுத்துக்கொண்டு வீடு போய்ச் சேர்" என்றார். அது ஒரு ஓய்வு நாள். அவனும் பிணி நீங்கி நடக்க சக்தியடைந்து வீட்டுக்குப் போய்விட்டான். அவனை வழியில் கண்ட யூதர், "அடே, சண்டாளா, இன்று ஓய்வுநாள் என்று சற்றும் யோசியாமல் படுக்கை எடுத்துக்கொண்டு நடக்கிறாய். இத்தனைநாள் இங்கே மண்டபமே கதியாய்க் கிடந்த நீ ஓய்வுநாளை மீறுகிறாய். இது தகாது" என்றார்கள். அவனோ, "என்னைக் குணமாக்கின நாதன் வீட்டுக்குப் போகச் சொன்னார்; போகிறேன்" என்றான். அது யாரென்று கேட்டார்கள். அவனுக்குச் சொல்லத் தெரியவில்லை. சுவாமியும் அந்தக் கூட்டத்தில் இல்லை. வேறொரு வேளை அவர் தேவாலயத்தில் அவனைக்கண்டு, "இப்படிப்பட்ட கொடிய ரோகங்கள் வராதபடி நீ இனிமேல் பாவஞ் செய்யாதே" என்றார். அவன் போய் தன்னைக் குணமாக்கினது யாரென்று பிரஸ்தாபித்தான். யூத தலைவரும் அறிந்துகொண்டார்கள்.

அவர்கள் பஹவான் மேல் கோபங்கொண்டு ஓய்வுநாளை ஆசரிக்கவில்லை என்று அவரோடு வாக்குவாதம் பண்ணினார்கள். அவரைக் கொலை பண்ண வகை தேடினார்கள். அவரோ, "என் பிதா இதுவரையில் கிரியை செய்து வருகிறார். நானும், அவர் கிரியைகளுக்கு இசைந்தபடியே செய்கிறேன்" என்றார். இவ்வார்த்தைகள் யூதருடைய பகையை இன்னும் அனல் மூட்டிவிட்டது. என்ன! இவர் ஓய்வுநாளை அசட்டைபண்

ணின தோஷம் ஒருபாலிருக்க, சர்வ சிருஷ்டிகர்த்தாவான மேலோனைத் தமது சொந்தப் பிதா என்று சொல்லிக்கொள்ளுகிறார். இது தகுமோ! நாம் இவரைக் கொல்ல வேண்டுமென நிச்சயித்தார்கள். நெடுநாள் நடைபிணத்திலும் கேடாய் படுக்கையே பிரபஞ்ச வாழ்க்கையாய் கிடந்தவனை நடமாடிச் சுகவாழ்வைக் காணச்செய்த நாதன், இவரென்ன அற்புத சொரூபியோ என்பது அவர்கள் புத்திக்கு எட்டவேயில்லை.

அருட்கடலானவர், சத்தியத்தை எடுத்துக்கூறும் கருத்துடன், "நான் பிதாவினிடம் கண்ட காரியங்களைச் செய்கிறேன். அவர் மரித்தோரை உயிர் அடையச் செய்கிறார். நானும் எனக்குச் சித்தமானவனை உயிர் அடையச் செய்கிறேன். நீங்கள் இதுவரையில் கண்ட காரியங்களைவிட இன்னும் மேலான காரியங்களும் குமாரன் செய்வார். பார்த்து அதிசயிப்பீர்கள்.

பிதா குமாரனை மகிமைப்படுத்த விருப்பமாய் இருக்கிறார் நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் குமாரனுக்கே கொடுத்திருக்கிறார். குமாரனைக் கனம்பண்ணுகிறவன் பிதாவைக் கனம்பண்ணுகிறான். என் வசனத்தைக்கேட்டு என்னை உலகத்திற்கு அனுப்பின பிதாவில் விசுவாசம் வைக்கிறவன் சாகாவரம் பெறுகிறான். அவனுக்கு நியாயத்தீர்ப்பு வரும் என்கிற பயம் இல்லை.

மரித்தோர் தெய்வ திருக்குமாரனுடைய சத்தம் கேட்கும் காலம் இது. அதைக் கேட்கிறவர்கள் பாவகுணம் நீங்கிப் பிழைப்பார்கள். நான் தெய்வகுமாரனேயன்றி வேறல்லஎன்று பிதா சாட்சிகொடுக்கிறார். நீங்கள் நம்பிக்கைவைத்த யோவான் சாட்சி கொடுத்தான். எல்லாவற்றிற்கும் மேலாக நான் செய்கிற கிரியைகள் சாட்சி கொடுக்கின்றன. வேத ஆகமங்களை

ஆராய்ந்து பாருங்கள் அவைகள் என்னைக் குறித்து சாட்சி பகருகின்றன.

நான் பிதாவின் சமுகத்தில் உங்களைக் குற்றப்படுத்த மாட்டேன். நீங்கள் நம்புகிற மோசே தான் உங்களைக் குற்றப்படுத்துவான்.

நீங்கள் பிதாவில் விசுவாசம் வைத்தால் என்னை அன்போடு ஏற்றுக் கொள்வீர்கள். அவரில் விசுவாசம் வைக்காதபடியால் அவர் அனுப்பி, அவருடைய திருவுளச் சித்தம் என்னவென்று அறிவிக்கும் என்னை ஏற்றுக் கொள்ளாமலும் என் வார்த்தைகளை அங்கீகாரம் பண்ணுமலும் இருக்கிறீர்கள்'' என்றார்.

இந்த வார்த்தைகள் கேட்டபின் அவர்கள் மனநிலை எத்தன்மையாய் இருந்தது என்று சொல்வது அனுவசியம்.

பண்டிகை நாட்கள் முடிந்தன. பஹவான் கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார்.

---

## 18-ம் அத்தியாயம்.

### நாசரேத் ஜெப ஆலயத்தில் பிரசங்கம்.
### ஊரார் அவரைக் கோல்ல யத்தனித்தது.

ஸ்ரீ இயேசு பஹவான் எருசலேலிமிருந்து திரும்பி வந்து தாம் வளாந்த ஊராகிய நாசரேத்துக்குப் போனார். கலிலேயா நாட்டின் கிராமங்கள் தோறும் பிரசங்கித்தார். சகல ஜெப ஆலயங்களிலும் ஜனங்கள் அவருடைய பிரசங்கம்கேட்கத் திரண்டு கூடினார்கள். அவரைப் புகழ்ந்து ஏத்தாத நாவு கிடையாது. அவருடைய கீர்த்தி அதி தீவிரகதியாய் எங்கும் பரவினது.

ஒரு ஓய்வு நாளில் நாசரேத்தூர் ஆலயத்தில் வழக்கமான படி வேதாகமச் சுருள் வாசிக்க எழுந்து நின்றார். ஏசாயா முனிவர் இரக்ஷண்ய மூர்த்தியைக் குறித்து எழுதியிருக்கிற பாகம் அவருக்கு எதிர்ப்பட்டது. அதில், "கடவுளின் ஆவி என்மேல் இருக்கிறது ஏழைகளுக்குப் பேரின்பமான சந்தோஷ செய்தி அறிவிக்க என்னை அபிஷேகம் பண்ணினார். சிறையில் கிடக்கிறவர்களுக்கு விடுதலை, குருடருக்குப் பார்வை, மனக்கிலேசம் நிறைந்தவர்களுக்குச் சுககாலம் அறிவிக்க என்னை அனுப்பினார்'' என்று எழுதியிருக்கிற இடத்தைக் கண்டு வாசித்து சுருள் புஸ்தகத்தைச் சுருட்டி வேலையாள் வசம் கொடுத்துவிட்டு உட்கார்ந்தார். ஆலயத்தில் இருந்த எல்லோரும் அவரை இமைகொட்டாமல் பார்த்த வண்ணமாய் இருந்தார்கள்.

பஹவான் திருவாய் மலர்ந்து, முனிவர் கூறின வாக்கு இன்று நிறைவேறினது என்று ஆரம்பித்துப் பிரசங்கித்தார். அவர் வாயின் அருள் வசனங்கள் சகலரையும் பிரமிக்கப் பண்ணின. "இவர் தச்ச வேலைக்காரன், யோசேப்பின் குமாரன் தானே! மரியாள் இவன் தாய்! இவன் கூடப்பிறந்த எல்லாரும் இந்த ஊரில் இருக்கிறார்கள்; ஒரு சாதாரண மனுஷன்; இந்த ஞானமும் கல்வியும் வல்லமையும் இவருக்கு எங்கேயிருந்து வந்தது?'' என்று பலவாறு அசட்டையாயும் பேசினார்கள். சுவாமி அவர்களைப் பார்த்து, "வைத்தியரே, உம்மை முந்திக் குணமாக்கிக் கொள்ளும் என்று பழமொழியும் இருக்கிறதே. நீங்கள் அப்படியே பேசுவீர்கள். ஐயா, நீர் கப்பர்நகூம் ஊரிலும் மற்றும் இடங்களிலும் எவ்வளவோ அற்புத அடையாளங்கள் செய்து மகா பெரிய நோய்கள் குணமாக்கினீர்; இது உம்முடைய சொந்த ஊர்; அந்த

இடங்களில் செய்தபடி இங்கேயும் செய்யும்; அப்பொழுது உம்மை நாங்கள் நம்புவோம் என்று சொல்லத் தயாராய் இருக்கிறீர்கள். எலியா முனிவர் காலத்தில் யூதேயாவில் எத்தனை விதவைகள் இருந்தார்கள்! என்றாலும் பஞ்சகாலத்தில் சிதோன் நாட்டில் சரெப்தா ஊர் விதவைக்கே அவருடைய சகாயம் கிடைத்தது. எலிசா முனிவர் காலத்தில் இஸ்ரவேலரில் குஷ்டரோகிகளுக்குப் பஞ்சமா? அவர்கள் அவருடைய கையால் சுகமாகவில்லை. சிரியா தேசத்தாணுகிய நாகமான் அவர் வாக்கால் சுகமானான்'' என்றார்.

உடனே அவர்கள் கோபமூண்டு, பஹவானைக் கொல்லும்படி தீர்மானித்தார்கள். நாசரேத்தூர் இருந்த குன்றிலிருந்து அவரைக் கீழே தள்ளும்படி மலையின் செங்குத்தான பாறைக்கு அழைத்துச் சென்றார்கள். அவரோ மறைந்து போனார்.

பின்பு அவர் நாசரேத்தூரைவிட்டு கப்பர்நகூம் ஊருக்குப் போய் அங்கிருந்து தமது ஊழியம் நடப்பித்தார்.

நாசரேத் ஊராருடைய அவநம்பிக்கையினிமித்தம் அவர் அங்கே அதிகமான நற்கிரியை நடப்பிக்க வகையில்லாமல் போனது.

---

## 19-ம் அத்தியாயம்.

### பேதுரு யாக்கோபு யோவான் அந்திரேயா என்னும் சீஷர்களை பஹவான் அழைத்த வரலாறு.

### மிகுதியான் மீன் பிடித்தது.

கப்பர்நகூம் கலிலேயாக் கடல் கெனசரேத் கடல் சின்னக் கடல் என்று பல பெயர்களால் அழைக்கப்பட்ட ஒரு பெரிய ஏரி அருகில் இருந்தது. அதைச் சகலரும் கடல் என்று அழைப்பதால் நாமும் அப்படியே செய்வோம்.

கப்பர்நகூம் ஊரில் ஒரு நாள் பஹறவான் கடற்கரை ஓரமாய் போய்க் கொண்டிருந்தார். அங்கே சீமோன் என்பவனும் அவன் தம்பி அந்திரேயாவும் கடலில் வலை போட்டுக் கொண்டிருந்தார்கள். சுவாமி அந்தப் படகைக் கரைக்குத் தள்ளச் சொல்லி அதில் ஏறி உட்கார்ந்தார். ஜனங்கள் அங்கே வந்து கூடினார்கள். அவர்களுக்குப் பிரசங்கம் செய்து முடித்தபின்பு, சீமோனைப் பார்த்து, "அப்பா, படகைத் தள்ளிக்கொண்டுபோய் ஆழத்தில் வலைபோடு" என்றார். சீமோன் "ஐயனே, இதுவரை எவ்வளவோ கஷ்டப்பட்டோம். ஒன்றுமே பலன் இல்லை. தேவரீர் சொல்ல நான் தட்டவா! இதோ போடுகிறேன். சுவாமி" என்று சொல்லிக் கொண்டே படகைத் தள்ளிக்கொண்டு போனான். வலைபோட்டுச் சிறிது நாழிகைக்குள் வலை இழுக்க அசைக்க முடியவில்லை. இழுத்தால் கிழிந்து போகும்போல் தோன்றுகிறது. அயலின் நின்ற படகுக்காரர்களான செபதேயுவையும் அவன் மக்களையும்கூவி அழைத்து வெகு பிரயாசத்தோடு மீனைக்கரை சேர்த்தார்கள்.

பேதுரு அவரைப் பார்த்து நடுங்கி, சுவாமி, நான் மகா பாவி. பரிசுத்தரே, என்னை விட்டுப் போகவேண்டும். உமது திருச்சமுகத்தில் நிற்க எனக்கு யோக்கியதை கிடையாது" என்றான்.

சுவாமி, "மீன்பிடித்ததற்கு இவ்வளவு பிரமிப்பா! பயப்படாதே, மனுஷரைப் பிடிப்பாய்" என்றார். உடனே அண்ணனும் தம்பியும் வலைகளைவிட்டு அவர் பின்னால் போனார்கள். அத்தருணம் செபதேயு என்பவனும், அவன் குமாரர் யாக்கோபு, யோவானும் தமது வேலையாட்களோடு மீன் பிடித்துவிட்டு வலை அலசிக்கொண்டு இருந்தார்கள். சுவாமி அந்த

சகோதரர் இருவரையும் தம்மோடு வரும்படி அழைத்தார். அவர்களும் மறுபேச்சு இல்லாமல் அவருக்குப் பின்சென்று தாசர் ஆனார்கள்.

இந்த நாலுபேரும் முன்னமே பஹவானோடு பழகினவர் என்று அறிவோம். ஆரம்பத்தில் குடும்ப சம்ரக்ஷணைக்காகத் தமது தொழிலை நடத்திக்கொண்டு வருவதும் போவதுமாய் இருந்தார்கள். இதற்குப் பின் அவரோடு தங்கியிருந்து உபதேசம் கற்றுத் தொண்டு செய்பவர் ஆனார்கள் என்று அறிவோம்.

---

## 20-ம் அத்தியாயம்.

### கப்பர்நகூம் : ஓய்வு-நாள் ஆசரிப்பு.

### ஸ்ரீ இயேசு பஹவான் ஜேப ஆலயத்தில் செய்த பிரசங்கம் ; பிணியாளர் பலர் குணமானது.

ஸ்ரீ இயேசு பஹவானுக்குக் கப்பர்நகூமில் இருந்த வீட்டில் அவர் வாசம் செய்தார். அவ்வூரில் ஒரு ஜெப ஆலயம் இருந்தது. அங்கே ஒரு ஓய்வுநாள் முழுவதையும் பஹவான் செலவிட்ட வரலாறு கூறுவோம். அவர் செய்த பெருங் காரியங்களை எல்லாம் எழுதுவது அசாத்தியம். காலையில் நாட்டு வழக்கப்பிரகாரம் ஆலயத்தில் ஆராதனை செய்யப் போனார். பிரசங்கம் அவரே நிகழ்த்தினார். ஆலயம் ஜனங்களால் நிரம்பியிருந்தது. அவர் வேதபாரகராகிய தீக்ஷதர் மாதிரி போதியாமல் அதிகாரத்தோடே பேசினார் என்று எல்லாரும் ஆச்சரியப் பட்டார்கள். சகல ஜனங்களும் அவரைப் பார்த்தவண்ணமாய் இருக்கும்பொழுது திடீரென்று அங்கே பெருங் கூச்சலும் குளப்படியும் உண்டாயிற்று. "ஐயோ

ந்சரேயனுகிய ஸ்ரீ இயேசு பெருமானே, சுவாமி, நீர் கடவுளு டைய பரிசுத்த குமாரனல்லவா! எங்களைக் கெடுக்கவந்தீரா'' என்று பேய்பிடித்த ஒருவன் கூச்சலிட்டு அமளி பண்ணி ஞன்.

பஹவான், "இவனை விட்டுப்போ, வாய்மூடு" என்று அந்த ஆவியை அதட்டினர். அது அவனை அலக்கழித்துக் கீழேதள்ளிப் புறளச்செய்து போய்விட்டது. எல்லாம் அமை தலாயிற்று. அவரவர் இடத்தில் உட்கார்ந்தார்கள். ஜனங் களுக்கு இருந்த ஆச்சரியம் சொல்லக்கூடுமோ; இந்த உபதே சம் எப்படியிருக்கிறது! அசுத்த ஆவிகளுக்கும் கட்டளை கொடுக்கிருர். அவைகளும் பயந்து நடுங்கிக் கீழ்ப்படிகின்றன என்று பேசிக்கொண்டார்கள். அவர்கீர்த்தி நாடெங்கும் பிரசித்தமாயிற்று.

அவர் ஆலயத்தைவிட்டு வெளியேறி பேதுருவின் வீட் டுக்குப் போனுர். அங்கே வீட்டுக்குப் பெரிய மனுஷி, பேதுருவின் மாமியார் கடுஞ்சுரத்தினுல் கண் விழிக்கக்கூடாத நிலமையில் படுத்துக்கிடந்தாள். பஹவான் பிரவேசித்த வீட் டில் பிணியுண்டா? அவர் கைபிடித்து அவளைத் தூக்கிவிட, அவள் சுகமாகி, வீட்டுக்கு வந்த பெரிய விருந்தாளிக்கு வேண் டிய பணிவிடை பலதும் விரைந்து செய்தாள்.

சாயங்காலமாயிற்று. ஊரில் ஜனங்கள் வெகு அவசர மாய் நடக்கிருர்கள். ஊர்வாசல் அருகில் பெரிய கூட்டம். அங்கே சப்பாணிகள், கூன், குருடு, செவிடு, ஊமை, ஜுரத்தினுல் மெலிந்தவர்கள், பைத்தியக்காரர், பேய் பிடித்து நொந்து வாடினவர்கள், இன்னும் பலவிதமான ரோகிகள் எல்லாரும் கூடிக் கிடக்கிருர்கள். தாய்மார் வியாதிக்காரப் பாலரை மடியில் ஏந்திக்கொண்டு இருக்கிருர்கள். போதகம்

கேட்கவந்த பெரியோரும், வேடிக்கை பார்க்கவந்த சிறியோரும், பழிசாற்றவந்த பகைஞரும், கலந்து நெருங்கி நிற்கிறார்கள்.

பஹவான் அங்கே வந்து, நோயாளிகள் சகலரையும் குணமாக்கினர். "அவர் தாமே நமது நோய்களை ஏற்றுக் கொண்டு நமது கஷ்டங்களைச் சுமந்தார்" என்று ஏசாயா முனிவர்கூறிய முன்னுரை அங்கே நிறைவேறிற்று. நோயாளிகளும், முடவரும், குருடருமாய் வந்த எளியோர் திருப்புகழ் பாடிக்கொண்டு திரும்பினர்கள். மேலும் மேலும் ஜனங்கள் அவரைத் தேடி வந்தார்கள். அதிகாலையில் இருட்டோடு, சற்றுநேரம் தனித்திருக்க விரும்பி அவர் வனாந்தரமான ஓர் இடத்திற்குப் போனர். அவரைத் தேடிக்கொண்டு முதலாவது பேதுரு போனன். திரள் கூட்டம் ஜனங்கள் அவன்பின்னல் போய் அவரை நிறுத்திக் கொண்டார்கள். அவர்களை விட்டு வெளியேறுவது பெரிய கஷ்டமாயிருந்தது.

---

## 21-ம் அத்தியாயம்.

### கலிலேயாவில் பிரசங்க பிரயாணம் - குஷ்டரோகி குணமானது.

கப்பர்நகூமிலிருந்து ஸ்ரீ இயேசு பஹவான் கலிலேயா நாட்டின் கிராமங்களில் தாம் கொண்டுவந்த நல்ல செய்தியை அறிவிக்கப் புறப்பட்டார். சீஷர்கள் அவரோடு போனர்கள். அவர் ஜெப ஆலயங்கள் தோறும் போய் பிரசங்கித்து அவ்விடங்களில் கண்ட வியாதியஸ்தர் எல்லாரையும் குணமாக்கினர். ஆகவே அவர் புகழ் அதிதீவிரமாய்ப் பரவியது. நாலா திசையிலுமிருந்து ஜனங்கள் வந்து கொண்டேயிருந்தபடியால் இரவில் ஜெபிக்கவும் இளைப்பாறவும் அவர் வனாந்தரங்களில் தங்கினர்.

ஒருநாள் குஷ்டரோகி ஒருவன் அவரிடம் வந்து தெண்டம் சமர்ப்பித்து, "அருளாளி, இறைவா, என் நிர்ப்பந்தம் பாருமையா, உமக்கு மனதுண்டானால் என்னைச் சுத்தமாக்குவீர்" என்றான். சுவாமி மனது உருகி, "எனக்குச் சித்தமுண்டு, குணமாகு" என்றார். அவன் உடனே சுகமானான்.

பகவான் அதைக் கண்ணுற்று, அவனை அழைத்து "நீ இதை வெளியிடவேண்டாம். தேவாலயம் சென்று ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து சுத்திகரித்துக்கொள்" என்றார். ஏனென்றால், யூதமுறைப்படி குஷ்டரோகிகள் ஊருக்குவெளியே இருக்கவேண்டும். ஒருக்கால் சுகமடைந்தாலும் அவர்கள் ஆசாரியனிடம் தம்மைக் காண்பித்து, சுத்திகரிப்பின் ஒழுங்குப்படி தமது கடன்களை நிறைவேற்றி பின்பு தமது ஜனத்தோடு சேரவேண்டும்.

குணமான ஏழை தான் அடைந்த பாக்கியத்தையும் தனக்கு இரக்கம் பாராட்டின வள்ளலின் பெருந்தகையையும் மனதில் அடக்கக் கூடாதவனாய் இச்சங்கதியை எங்கும் பிரஸ்தாபித்தான். ஜனங்கள் பல திசைகளிலுமிருந்து அவரிடம் வந்தார்கள். கிராமங்கள் தோறும் வியாதியஸ்தர் அவர் திருக்கரத்தால் சுகமடைந்தார்கள்.

---

## 22-ம் அத்தியாயம்.

### கப்பர்நகூம்-திமிர்வாதக்காரன் குணமானது.

ஸ்ரீ இயேசு பகவான் கிராமங்களில் பிரசங்கம் செய்து கப்பர்நகூமிற்குத் திரும்பி வந்தார். அவரைக் காணப் பல கட்சியான ஜனங்களும் கூடி வந்து நெருக்கி இடித்துத் தள்ளிக்கொண்டு நின்றார்கள்; யூதர்கள் வீடு பொதுவாய் தொட்டிக்கட்டும், விசாலமான உள்முற்றமும் அடங்கியது. அவர் முற்றத்தில் இருந்தார்.

அப்போது நாலுபேர் கூடி திமிர்வாதக்காரன்ஒருவனைச் சுமந்துகொண்டு அவரிடம் வந்தார்கள். வீட்டிற்குள் நுழைவது அசாத்தியமாய் இருந்தது. அவன் வந்திருக்கும் கோலத்தை அவருக்குத் தெரியப்படுத்துவதுகூட முடியாத காரியமாய் இருந்தது. அவர்கள் கூரைமேல் ஏறி, அவனை உள்ளே படுக்கையோடு பெருமானது பாதப்படியில் வைக்கத் திறப்பு உண்டாக்கிக் கயிறுபோட்டு இறக்கிவிட்டார்கள். திமிர்வாதக்காரன் ஸ்ரீ இயேசு பெருமானின் சந்நிதிகண்டான். அவன் துயரம் துன்பம் யாவும் விளக்குக்குப் பயந்த இருள்போல் பறந்துபோயிற்று.

சுவாமி அவனை நோக்கி, "அப்பா, உன் பாவங்களை மன்னித்தேன். திடன்கொள்; கலங்காதே; எழுந்துநட" என்றார்.

அவர்மேல் குறை காணும் விருப்பத்துடன் அங்கே காத்து இருந்த வேதபாரகரும் பரிசேயரும், இதென்ன, பாவங்களை மன்னிக்க இவர் யார்? துணிகரமாய் தேவ தூஷணம் பேசுகிறார். சாக்ஷாத் பகவான் ஒருவரல்லவா பாவமன்னிப்புக்கு அதிகாரி, என்றுசொல்லி முறுமுறுத்தார்கள். உரத்துப்பேச அவர்களுக்கு நாவில்லை. கட்டில் கிடையாய் கூரையிலிருந்து கீழே இறக்கி விடப்பட்ட பிணியாளி எழுந்து உட்கார்ந்து நடக்கச் சித்தமாயிருக்கிறான். அவன் உள்ளம் பூரித்துக்குலுங்குகிறது. விரோதம் பேசுகிறவர்களை இவன் கவனிக்கவில்லை. பார்த்த பார்வையில்தானே இருதயத்தின் ஆழங்களை அறிகிற இறைவன் அவர்களைப் பார்த்து, போதகர்களே, நீங்கள் சிந்தனை பண்ணுவது என்ன? உன் பாவங்களை மன்னித்தேன் என்று சொல்லுவதோ, அல்லது நீ காலூன்றி நில், நட, என்று சொல்வதோ எது எளிது! என்றார். பதில்பேச அவர்களுக்கு எதுவில்லை.

பார்த்த ஜனங்கள் எம்பெருமானுடைய கல்யாண குணங்களைப் பெரிதும் பாராட்டினார்கள். கட்டில் கிடையாய் வந்தவன் காலூன்றி நடந்து வீட்டுக்குப் போனான்.

---

## 23-ம் அத்தியாயம்.

### மத்தேயு சீஷன் ஆனது - அவன் வீட்டில் நடந்த விருந்து.

ஸ்ரீ இயேசு பஹவான் தமது வீட்டிலிருந்து வெளியே போனார். அவர் சுங்கம் வாங்குகிற இடம் வரைக்கும் போனபோது வரி வாங்கிக்கொண்டிருந்த மனுஷனைப் பார்த்தார். இவன் பெயர் மத்தேயு. அவர் அவனைப் பார்த்து, "மத்தேயுவே, என் சீஷன் ஆகுவாயா?" என்றார். உடனே, அவன் தன் வேலையைக் கணக்கு மூடிவிட்டு அவர் பின் சென்றான்; அவர் கட்டளை எதுவும் சிரமேல் கொண்டு ஒழுகும் கொள்கையன் ஆனான். இவனே எம்பெருமானுடைய சரித்திரத்தை எழுதிவைத்த நாலு பெரு மக்களில் ஒருவன்.

மத்தேயு தான் அடைந்த பெரும் பாக்கியத்தைக்குறித்த மகிழ்வால் இன ஜன பந்து, அயலார் மித்திரர், எளியார் வலியார், எல்லாரையும் அழைத்துவந்து பெரிய விருந்து பண்ணி, அந்நாள் நல்ல நாள் என்று பண்டிகை கொண்டாடினான். சுவாமி சீஷரோடுகூட அங்கே பந்தி அமர்ந்தார். அவர்மேல் குற்றம் சாட்டும் தன்மையுள்ள வேதபாரகர் முதலியோருக்கு இது ஒரு மகா சம்பவமாய் இருந்தது.

ஏனெனில், சுங்கம் வாங்குகிற உத்தியோகஸ்தர் ரோம அரசாங்கத்தின் ஊழியர். யூதர் ரோமரைப் பகைத்ததாலும், சாதாரணமாய் சுங்கம் வசூல் செய்கிறவர்கள் நியாயக்கேடாய் மிகுதியான பொருள் அபகரிக்கும் கள்ளராய் இருந்தபடியா

லும் ஜனங்கள் அவர்களை வெறுத்தார்கள். இரக்ஷண்யமூர்த்தி, தேவாலய அதிகாரிகளைக் கண்டிக்கக் கூடியவர், இப்படி ஆயக்காரரோடும் பாவிகளோடும் பந்தி அமர்வது மகா கேவலம் என்று தீர்மானித்தார். பாவமன்னிப்பை அருளும் வல்லவன், பரலோக பார்த்திபன் மைந்தன் கூட்டாளிகள் பார்! என்று பலவாறு தங்களுக்குள் ஆலோசனை பண்ணினார்கள். சீஷரை அழைத்து, "என்ன காண், உங்கள் போதகர் செய்கிறது மிக நன்றாய் இருக்கிறது! இப்படித்தானா ஆயக்காரர் பாவிகள் நடுவில் நெருங்கி உட்கார்ந்து விருந்து உண்பது?" என்றார்கள். அவர்கள் லோககுருவிடம் போய் இந்த ஆட்சேபனைகளைத் தெரிவித்தார்கள். அதற்கு பகவான், "நோயாளர்தான் வைத்தியனைத் தேடுவார்கள். சுக தேகிகளிடம் வைத்தியர்களுக்கு என்ன சோலி! இரக்ஷண்ய மூர்த்தி பேதைகளுக்கும், பாவத்தில் கிடந்து மயங்குவோருக்கும் அவசியம். சாதுக்களுக்கும் கலைவல்லோருக்கும் இரக்ஷண்ய வழிகாட்டி அவசியமா? நானும் பாவிகள் மனந்திரும்பி, நற்சிந்தை யடைந்து, பரிசுத்தராகும்படி அழைக்க வந்தேன்" என்றார்.

யோவானுடைய சீஷர் அவரிடம் வந்து, "தேவா, நாங்கள் அடிக்கடி உபவாசிக்கிறோம். பரிசேயரும் அப்படியே. உமது சீஷர் உபவாசிக்கக் காணோமே. அது சரியா?" என்றார்கள்.

சுவாமி, "மனரம்மியமாய் இருக்கிறவன் யாராவது உண்ணாவிரதம் காத்து உடலை ஒடுக்குவானா? நான் அவர்களோடு இருக்கும் வரையில் அவர்களுக்கு ஏது கவலை? நான் போன பின்பு விரதம் காப்பார்கள்" என்றார்.

———

# 24-ம் அத்தியாயம்.

## மலைப் பிரசங்கம்.

ஸ்ரீ இயேசு பகவான் மலையில் சீடருக்குக் கட்டளை கொடுத்துத் தீர்வதற்குள் பெருங் கூட்டம் ஜனங்கள் அவரைச் சூழ்ந்து நின்றார்கள். அவர்களுக்குச் சொன்ன அமிர்த வசனங்களில் சிலவற்றைச் சொல்லுவோம். முதலாவது அவர் பாக்கியசாலிகள் யாரென்று விளம்பினர்.

1. பாவம்விட்டு நீங்கி, ரக்ஷிப்படைந்து, பரிசுத்த சிந்தை எப்போ அடைவேனென்று ஏங்குவோர் பாக்கியவான்கள், பரிசுத்தரின் வீடாகிய பரலோகராஜ்யம் அவர்களுடையது.

2. துயரப்படுவோர் பாக்கியவான்கள்-அவர்கள் ஆறுதலடைவார்கள்.

3. சாந்தகுண முள்ளவர்கள் பாக்கியவான்கள் - அவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள்.

4. பசி தாகத்திற் கொத்த வாஞ்சையோடு நீதி மார்க்கம் தேடுவோர் பாக்கியவான்கள் - அவர்கள் வாஞ்சை நிறைவேறும். அவர்கள் திருப்தியடைவார்கள்.

5. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் - அவர்களுக்கு இரக்கம் கிடைக்கும்.

6. பரிசுத்த சிந்தையுள்ளவர் பாக்கியவான்கள்-மஹா பரிசுத்தரான கடவுளை அவர்கள் தரிசிப்பார்கள்.

7. சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியசாலிகள் - அவர்கள் கடவுளுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.

8. நீதியாய் நடந்து அதனால் வரும் துயர்களைச் சகிக்கிறவர்கள் பாக்கியவான்கள் - பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

என் சீஷராகி, என் வார்த்தைகளைக் கைக்கொள்ளும் தொண்டருக்கு மற்ற ஜனங்களால் மிகுந்த துன்பம் உண்டு. பொய்யாய் குற்றம் சுமத்தி விரோதிப்பார்கள். ஆயினும் அஞ்சவேண்டாம். அதனால் பாக்கியவான்களாகிறீர்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதி. இதற்கு முன்னிருந்த தீக்ஷதர் முனிவர்களையும் அவர்கள் துன்புறுத்தினார்கள்.

உலகத்தில் உப்பைப்போல் இருக்கிறீர்கள். ஆனால் உப்பு சாரமில்லாதிருந்தால் எதற்காகும்? நீங்களும் அப்படியே. உலகத்தார் உங்களுடைய மேன்மையான ஒழுக்கங்களைக் கண்டு பிதாவாகிய தெய்வத்தைப் போற்றும்படி சிறக்க நடந்து கொள்ளுங்கள்.

நான் பாவிகளை ரக்ஷித்து அவர்களைப் பக்தர்களாக்கி ஈடேற்ற வந்தேன். கடவுள் அருளிய பிரமாணங்களை அகற்ற அல்ல; நிறைவேற்றவே அவதரித்தேன் என்பதை நீங்கள் உணர்ந்து அப்படியே போதிக்கவேண்டும்.

வேதபாரகரும் பரிசேயரும் நீதியைச் சிலாக்கியமாய் போதிக்கிறார்கள். உங்கள் ஒழுக்கமோ அதற்கும் மேலான நீதியாய் இருக்கவேண்டும். எப்படியெனில், கொலை செய்தவனை நியாயஸ்தலத்தில் நிறுத்தித் தீர்ப்பிட வேண்டும் என்பது நியாயப்பிரமாணம். நான் சொல்லும் பிரமாணம், சகோதரனை அநியாயமாய்க் கோபிக்கிறவன் நியாய சபையில் தீர்ப்படைய வேண்டியது. சகோதரனை மூடனே என்பவனை ஆலோசனை சங்கத்தின் முன் நிறுத்தவேண்டும். வீணனே என்று சொன்னவன் நரகத்திற்குப் போவான். அவனை விசாரிக்க நியாயசபை இல்லை.

சகோதரனுடன் மனஸ்தாபம் பண்ணி அவனை மனம் நோகவிட்டு கடவுளுக்குக் காணிக்கை செலுத்தப் போகவேண்

டாம். முதலாவது அவன் மனம் குளிரச் செய். அப்புறம் காணிக்கை செலுத்து.

மனஸ்தாபங்கள் ஏற்படுத்தி நியாயசபைக்குப் போகாதே. வழியில் தானே எதிரியோடு சமாதானம் பண்ணிக்கொள். நியாயசபை தேடி நடப்பது மஹா இம்சை.

விபசாரம் செய்யாதே என்பது பூர்வத்தார் பெற்ற பிரமாணம். அந்நிய மாதரை இச்சையோடு பார்ப்பதுவும் தோஷமே என்பது என்னுடைய போதனை.

பாவதோஷங்களுக்கு இடங்கொடுப்பதைவிட பாவ இச்சைக்குக் காரணமான கண் கால் கையாகிய உருப்பை அகற்றுவது லகு. மற்றப்படி நரகம் அடைவாய்.

மனைவியோடு சமாதானமாய் வாழவேண்டும். விபசாரம் தவிர வேறு எந்தக் குற்றத்திற்காகவும் அவளைத் தள்ளிவிடக் கூடாது. அப்படித் தள்ளப்பட்டவளை விவாகம் செய்வது தோஷம்.

பொய் சத்தியம் பண்ணுதே என்பது பூர்வத்தார் பெற்ற கற்பனை. நீங்களோ எக்காரணத்தினாலும் சத்தியம் பண்ணக் கூடாது. வானம் தேவாதி தேவனுடைய சிங்காசனம். பூமி அவர் பாதப்படி. எருசலேம் மகா மகத்துவரின் நகரம். எதன்பேரில் சத்தியம் பண்ணலாம்? தலையில் அடித்து சத்தியம் பண்ணுவாயோ? தலைமயிரில் ஒன்றை வெண்மையாக்க, கருப்பாக்க உன்னால் ஆகுமா? உள்ளதை உள்ளபடி பேசுங்கள். சத்தியம் பண்ணுவது தீங்கு.

பதில்செய்து தீதுக்கெல்லாம் பழிவாங்கும்படி பூர்வத்தாருக்குக் கட்டளைபிறந்தது. நீங்களோ அடித்தவனை மாறி அடிக்க வேண்டாம். ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மறு கன்னத்தைத் திருப்பிக்கொடு. உன்னோடு கள்ள வழக்குப் பேசுகிற

வனோடு வாதாடாதே. உன் வேஷ்டியை அநியாயமாய் எடுத்துக் கொண்டவனுக்குச் சட்டையையும் கொடு. ஒருமைல் தூரம்போ என்று கஷ்டப்படுத்தினால் இரண்டுமைல் போ. கேட்கிற எவனுக்கும் கொடு. கடன் கேட்டவனுக்கு முகங் கோணாதே.

நியாயப் பிரமாணத்தில் அடுத்தவனைச் சிநேகித்து சத்துருவைப் பகைக்கக் கூறியுள்ளது. நீங்களோ சத்துருவையும் சிநேகியுங்கள். சபிக்கிறவனை ஆசீர்வதியுங்கள். சிநேகிதரை சிநேகிப்பது ஒரு பெரிய காரியமா? எவரும் செய்வார்கள். உங்கள் பரமபிதா சகல சற்குண சம்பன்னராய் இருப்பது போல் நீங்களும் இருங்கள்'' என்றார்.

---

## 25-ம் அத்தியாயம்.

### மலைப் பிரசங்கம் - தொடர்ச்சி

மேலும் பகவான் தரும வழியைக் குறித்தும், ஜெபதப முறையைக் குறித்தும் செல்வம் படைத்துக் கையாள வேண்டிய விதத்தைக் குறித்தும் திருவாய்மலர்ந்து போதித்ததாவது:—

"தருமம் செய்கிறவர்கள் இரகசியமாய் அந்தரங்கத்தில் செய்யவேண்டும். அப்போது பலன் பிதா தாமே அளிப்பார். விரதம் காக்கிறவனும் தன் பக்தி நிலையைப் பிரஸ்தாபிக்கக் கூடாது. அந்தரங்கத்தில் கேட்ட விண்ணப்பத்தின் பலன் பிதா விடமிருந்து நிச்சயமாய்க் கிடைக்கும்.

தருமம் செய்யாமல் தேடிப் புதைத்த செல்வமானது வீணே அழிந்து கெடும். திருடர் கொள்வார். தெளிந்த புத்தியோடு செல்வத்தைத் தரும வழியில் செலவிட்டு ஜீவியாவிட்

டால் வாணுள் வீணுளாய் ஒழியும்; நிலையற்ற வாழ்வைச் சாஸ்வதமாகக் கொண்டு நஷ்டமடைய நேரிடும். மேலும், இரண்டு எஜமான்களுக்கு ஒரே ஊழியன் இருந்தால் அவன் பாடு கஷ்டம். கடவுளுக்கு ஊழியம் செய்கிறவன் உலகப் பொருளும் வெகு கருத்தாய் தேடித் திரட்டக்கூடாது. உண்ணவும், சிறப்பாய் உடுத்தவும், பொருள் தேடிப் பொக்கிஷம் திரட்டவும் கவலை கொண்டு அலையவேண்டாம். ஜீவகோடிகளுக்கெல்லாம் கருத்தாய் ஊட்டுகிற பிதா உன்னை மறப்பாரோ! மறவார். மறவார்.

பிறர் குற்றங்கள் தவறுதல்களை மன்னியுங்கள். மற்றபடி பிதா உங்களுக்கு மன்னியார். நீங்களும் பலவிதமான குற்றங்களும் செய்கிறீர்கள்.

பாவமார்க்கத்தை விட்டு நீங்காதவன் மற்றவர்களுக்கு நீதிமார்க்கம் போதிப்பது கூடாத காரியம். உன் கண்ணில் பெரிய தூசி விழுந்து அவஸ்தைப்படுகையில் அயலான் கண்ணில் கிடக்கும் சிறு தூசி நீக்கி அவனுக்கு உதவி செய்வது எப்படி ஆகும்?

பரிசுத்தனுக வேண்டும், பாவத்தைவிட்டு நீங்கவேண்டுமென்ற எண்ணமில்லாதவனுக்கு உபதேசிப்பது வீண்காலப் போக்கு. அபாயத்துக்கு இடம்; முத்துக்களைப் பன்றிமுன் போட்ட மாதிரியாகும்.

எது வேண்டுமானுலும் பிதாவைக் கேளுங்கள். அவர் நிச்சயம் கொடுப்பார். உங்கள் குழந்தைகள் அப்பம் பழம் கேட்டால் அதற்குக் கல்லைக் கொடுத்து வஞ்சிப்பீர்களா? பரம பிதா உங்களிலும் நல்லவர், வல்லவர்.

உங்கள் அயலார் உங்களிடம் எவ்வித தமருசிந்தையுடன் நடந்துகொள்ள விரும்புகிறீர்களோ அவ்விதமே

தயாள சீலத்துடன் நீங்களும் அவர்களிடம் நடந்து கொள்ளுங்கள். பூவுலகில் ஏற்பட்ட சகல சன்மார்க்க விதிகளும் இவ்வளவே.

உன் மனம்போன போக்கில் போய் இஷ்டப்படி நடக்காதே. அதுவே நரகம் போகிற ராஜபாதை. எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். நீதியின் பாதையில் நட. அதைக் கண்டவர் சிலரே. அது நெருக்கமான வழி. அதுவே சாயுட்சப்பதவி சேர்க்கும் பாதை.

போதிக்கிறவர்கள் எல்லாரும் போதகர் அல்ல. தங்களுடைய ஆதாயத்துக்காக அலைகிறவர்கள் மகா யோக்கியர் போல் காணப்பட்டாலும் அவர்கள் கிரியைகளால் அவர் தன்மையைக் கண்டு பிடிக்கலாம்.

கடவுளுடைய திருவுளச் சித்தம் எதுவோ அதைத் தெரிந்துகொண்டு அதன் பிரகாரம் நடப்பது பெரிதேயல்லாமல் பெரிய ஆராதனைகள் செய்வதும் கடுந்தவம் புரிவதும் பெரிதல்ல.

கடவுள் கேட்டவருக்கெல்லாம் கொடுக்கும் அருள் வள்ளல். ஒருக்கால் உன் பிரார்த்தனைக்கு அவர் இரங்கி உன் கைகளால் அற்புத அடையாளங்கள் நடந்தாலும் கூட பரமபதம் அடைந்துவிட்டோம் என்று எண்ணவேண்டாம். கீழ்ப்படியாதவர்களுக்கு மகத்துவ தேவனின் வீட்டில் இடங் கிடையாது. அவர்கள் சொரிமணலில் அஸ்திபாரம் போட்டு வீடுகட்டிய மதியீனனுக்கு ஒப்பானவர்கள். அவன் வீடு எத்தனைநாள் நிற்கும்? அது பெருங்காற்று மழையில் இடிந்து கிடக்கும். இறைவனின் ஆணையைக் காத்து நடக்கிறவர்களே கன்மலைமேல் அஸ்திபாரம் போட்டு வீடுகட்டின ஞானிக்கு ஒப்பானவர்கள்'' என்றார்.

ஸ்ரீ இயேசு பஹவான் பேசின அதிகாரப் போங்கைக் கவனித்த ஜனங்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்.

---

## 26-ம் அத்தியாயம்.

### நூற்றுக்கு அதிபதியின் வேலையாள் திமிர்வாதம் நீங்கிக் குணமானது.

ஸ்ரீ இயேசு பஹவான் பிரசங்கம் முடித்து கப்பர்நகூம் ஊருக்குள் பிரவேசித்தார். பட்டாளத்தில் நூறு வீரருக்குத் தலைவனான ரோம அதிகாரி ஒருவன் அவரிடம் வந்து, "சுவாமி, என் வேலையாள் திமிர்வாத நோயால் வருந்துகிறான். அருள்புரிவீராக" என்றான்.

பஹவான் அவனைப் பார்த்து, "அஞ்சாதே, நான் வந்து அவனைக் குணமாக்குவேன்" என்றார்.

தலைவன் அவரை வணங்கி, "எமபெருமானே, எளியேன் சொற்ப அதிகாரி. எனக்கு அடங்கி நடக்க ஊழியர் பலர் கைகட்டி நிற்கிறார். தேவரீர் மகிமை பெரிது. என்பால் அடிகள் வர நான் தகுதியற்றவன். ஒரு வார்த்தை திருவால் மலர்ந்தருளும்; அதுவே போதும்" என்றான்.

பஹவான் அவனது விசுவாசத்தைப் பெரிதும் பாராட்டி "நீ போகலாம். அருள் கூர்ந்தேன்' என்றார். நோயாளி உடனே குணமானான்.

தம்மைச் சூழ நிற்போரை அவர் பார்த்து, "இஸ்ரவேலருக்குள்ளும் இவ்வளவு விசுவாசம் காண்பது அறிந்து. யூதரல்லாத பற்பல ஜாதிகளும் வந்து கடவுளின் ராஜ்யத்தில் பந்தி அமர்வார்கள். வேசி மார்க்கத்தாரும் பாவிகளும் சீரடைந்து பரிசுத்த நிலை அடைவார்கள். ராஜ்யத்தின் மக்களான இஸ்ரவேலரோ இன்னும் பாவ இருளில் கிடப்பார்கள்" என்றார்.

---

## 27-ம் அத்தியாயம்.

### மரித்த வாலிபன் உயிர் பெற்றது.

மேற் சொல்லிய காரியாதிகள் நடந்த மறுநாளில் ஸ்ரீ இயேசு பெருமான் கப்பர்நகூம் ஊரிலிருந்து நாயீன் என்ற கிராமத்துக்குப் போனார். திரள்கூட்டம் ஜனங்களும் சீஷரும் அவரோடு போனார்கள். ஊர் வாசலில் மயானத்துக்குப் போகிற பாடை ஒன்றையும் அதோடு பெருங்கூட்டம் ஜனங்களையும், "ஐயோ, என் மகனே, என் மகனே" என்று தலையில் அடித்துப் புலம்பும் ஸ்திரீ ஒருத்தியையும் கண்ணுற்றார்.

அவருடைய உள்ளம் உருகிற்று. நாதனற்ற அந்தத் தாயின் துயரம் அவரை வருத்தினது. அவளைப் பார்த்து, 'அம்மை, அழாதே," என்று சொல்லி பாடையை அணுகி, பிரேதத்தைத் தொட்டார். வாலிபன் உடனே உயிர் பெற்று எழுந்தான்.

இதைக்கண்ட ஜனங்கள் "இவர் யாரோ மஹானுபாவர், நமது நடுவில் தோன்றியுள்ளார்," என்று சொல்லிக் கடவுளின் மகத்துவத்தைப் புகழ்ந்து போற்றினார்கள். அவருடைய மகிமை எத்திசையும் பரவினது. இந்த வரலாறுகள் யாவும் யோவான் முனிவருடைய சீஷர் காவலில் இருந்த தமது குருவுக்குச் சொன்னார்கள்.

யோவான் உபதேசம் கேட்ட ஆயக்காரர் முதலிய சாதாரண ஜனங்கள் மனந்திரும்பிச் சீர்பொருந்தினார்கள். கடவுளை மகிமைப் படுத்தினார்கள். குருத்தொழில் பூண்ட வேதபாரகர் பரிசேயரோ தமது பெருமையைப் பாராட்டித் திரிந்து, தம்குறைகளை உணராதிருந்தார்கள். பஹவான் அவருடைய

கடின இருதயத்தைக் குறித்துப் பரிதபித்தார். அவர்களுடைய பார்வையில் காட்டுக்காயும் தேனும் புசித்து ஜீவித்த ரிஷி யோவானுடைய உபதேசமும் பொருந்தவில்லை. நாட்டில் நாலா ஜனங்களைப்போல் ஒழுகின குரு ஸ்ரீ இயேசு பஹவான் உபதேசமும் சரிப்படவில்லை. யோவான் முனிவரைப் பேய் பிடித்தவன் என்றார்கள். சுவாமியைப் பாவிகள் தோழன் என்று சொன்னார்கள். அவர்களுக்கு விமோசனம் எங்கிருந்து வரும்!

---

## 28-ம் அத்தியாயம்.

### பாவி ஸ்திரீ ஸ்ரீ இயேசு பஹவானுக்குத் தைலம் பூசினது.

ஒரு நாள் கப்பர்நகூம் ஊரில் பரிசேய வகுப்பைச் சேர்ந்த சீமோன் என்னும் பெயருடைய மனுஷன் ஒருவன் சுவாமியை விருந்துக்கு அழைத்தான். அவர் பந்தியில் இருக்கும் போது ஒரு மனுஷி வந்து அவர் பாதத்தண்டை உட்கார்ந்து பாதத்தை முத்தி செய்து கண்ணீர் சிந்தினாள். அவ்விதம் பாதம் நனைந்துபோகவே தன் தலைமயிரால் அதைத் துடைத்தாள். பின்பு கையில் கொண்டுவந்திருந்த வாசனைத் தைலத்தை எடுத்து பாதங்களில் பூசி மறுபடியும் முத்தஞ்செய்தாள்.

வீட்டுக்காரன் பார்த்தான். என்ன, இவர் ஒரு மகாமுனிவரா! பாவியான ஸ்திரீ இவர் பாதங்களை முத்தி செய்கிறாள். மறுவார்த்தை பேசக் காணோம், என்பதாய் எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். இறைவன் அதை அறிந்து, "அப்பா, சீமோன், இங்கே வா," என்றார். வந்தான். 'நான் ஒரு காரியம் உனக்குச் சொல்லவேண்டும். கேள்' என்றார். சீமோன், 'சுவாமி சொல்லும், அடியேன் கேட்கிறேன்,' என்றான்.

அவர், "ஒரு மனிதனிடம் இரண்டு பேர் கடன் வாங்கினார்கள். ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசு. அடுத்தவன் ஐம்பது வெள்ளிக்காசு. கொடுக்க நிர்வாகம் இல்லை என்று இருவர் கடனையும் மன்னித்துவிட்டான். அப்படியானால் இரண்டு பேரில் யார் அதிக அன்பு பாராட்டுவான்?" என்றார்.

சீமோன், "பெரிய கடன்காரன் மிகுதியும் உணருவான்" என்றான்.

பஹவான், "சரி அப்படியே இதையும் நினைத்துக்கொள். இவள் செய்த திரளான பாவங்களை மன்னிக்கிறேன். நான் இங்கே வந்தேன். நமது குல ஆசாரப்படி நீ என்னை முத்தஞ் செய்யவில்லை. என் தலையில் எண்ணெய் தடவவில்லை. கால் கழுவத் தண்ணீர் கொடுக்கவில்லை. இவள் அன்பைப் பார். கொஞ்சம் மன்னிப்புப் பெற்றவன் கொஞ்சம் அன்பு கூறுவான்" என்று சொல்லி, பெண்ணை நோக்கி, "மாதே, உன் பாவங்களை மன்னித்தேன். உன் விசுவாசம் உன்னை ரக்ஷித்தது. சமாதானத்தோடு போகலாம்" என்றார்.

அப்போது பந்தியில் இருந்தவர்கள், "ஆஹா! பாவங்களை மன்னிக்கிற இவர் யார்?" என்று முறு முறுத்தார்கள். ஆகிலும் கோபத்தைத் தங்களுக்குள் அடக்கிக் கொண்டார்கள்.

# 29-ம் அத்தியாயம்.

## ஸ்ரீ இயேசு பஹவான் கலிலேயா நாட்டில் செய்த சுற்றுப் பிரயாணம்.

ஸ்ரீ இயேசு பெருமான் கலிலேயாவின் கிராமங்களில் பிரசங்கிக்கும்படியாகத் தமது சிஷர்களோடு புறப்பட்டார். அவர் கடாக்ஷத்தால் வியாதிகள் நீங்கி அருள் பெற்றவர்களும், தமது ஆஸ்திகளால் அவருக்குத் தொண்டு புரிந்த சீமாட்டியரும் அவரோடு போனார்கள்.

அவர்களில் மகதலேனமரியாள் என்பவளிடமிருந்து ஏழு பிசாசுகளைத் துரத்தினர். யோவன்னள் என்ற மனுஷி அக்காலத்து அரசன் ஏரோதுவின் காரியக்காரனுடைய மனைவி. இன்னும் பல மாதரும் அவர் உயிர்விடும் காலம் வரை கூடவே இருந்தார்கள்.

சகல கிராமங்களிலும் பட்டணங்களிலுமிருந்து பலவித ஜனங்கள் வந்து அவரைச் சூழ்ந்து கூடினர்கள். கலிலேயாக் கடலில் ஒரு படகில் இருந்து கொண்டு பிரசங்கம் நிகழ்த்தினர். அரும்பொருள் யாவையும் உவமானங்களால் விளக்கினர். அந்த அருமையான உவமைகளில் சிலவற்றைக் கூறுவோம்:

சுவாமி குரு உபதேசம் கேட்கிற ஜனங்களை நிலத்துக்கும், போதனையை விதைக்கும் ஒப்பிட்டுப் பேசினர். எப்படியெனில் குடியானவன் விதைக்கிற விதையில் சில விதை பாறையிலும், சில விதை முள்செடிப் புதரிலும், சில விதை பாதைகளிலும் விழுந்து நஷ்டமாகின்றன. சில விதை நல்ல நிலத்தில் விழுந்து ஒன்று நூறு அறுபதாய் பலன் கொடுக்கிறது. பாதையில் விழுந்ததைப் பட்சிகள் உடனே சாப்பிடு

கின்றன. வேதவசனம் கேட்கும் மாந்தர் பலரும் உடனே மறந்து விடுகிறார்கள்.

பாறை நிலத்தில் விதைமுளைத்து வளர்ந்து எட்டு நாளில் தீய்ந்து போகும். அவ்விதமாகவே ஒரு வகுப்பு ஜனங்கள் உபதேசம் கேட்டு சற்று நிதானிப்பார்கள். பாவங்களை விட்டு விலகுவது அவர்களால் கூடாத காரியம். வேறு பல ஜனங்கள் திருவசனம் கேட்பார்கள். உணர்வடைந்து அதன் படி நடக்க ஆசிப்பார்கள். ஆகிலும் தமது அந்தஸ்துக்குப் பங்கம் வருமென்றும், ஆஸ்திக்குக் குறைவு வருமென்றும் பயந்து அருங்கவலைக்கிடம் கொடுத்து, தாம் ஏற்றுக்கொண்ட சுகிர்த மொழிகளை அனுஷ்டானத்தில் கொண்டுவருவதில்லை. நல்ல நிலத்திற் கொப்பான சிலர் மட்டும் திருவசனத்தை உணர்வோடு கேட்டு, ஆராய்ச்சி செய்து, அதன்படி நடக்கிறார்கள். பலன் நிறைந்த ஜீவியம் செய்கிறார்கள்.

விதையையும் நிலத்தையும் உவமானமாகக்கொண்டு இன்னுமொரு அரும்பொருள் உரைத்தார். "குடியானவன் ஒருவன் தன் வயலில் விதை விதைத்து வந்து வீட்டில் நித்திரைசெய்து இளைப்பாறுகிறான். விதை தானாய் முளைத்து வளர்ந்து பலன் கொடுக்கிறது. திருவார்த்தையும் கேட்டு உணர்ந்தவருக்குள் அப்படியே பலன் செய்கிறது," என்றார்.

---

## 30-ம் அத்தியாயம்.

### குருடும் ஊமையு மானவன் குணமானது.

கலிலேயா நாட்டின் கிராமங்களில் பஹவான் பிரயாணம் பண்ணி உபதேசம் செய்து திரிந்த அக்காலங்களில் குருடன் ஒருவனை அவரிடம் கொண்டுவந்தார்கள். அவன் ஊமை

யனுமாயிருந்தான். அவனைப் பீடித்த பைசாசத்தை அவர் துரத்தவே ஊமை பேசிப் பார்வையும் பெற்றான்.

ஜனங்கள் அதைக்கண்டு சந்தோஷித்து, இஸ்ரவேலரை ரக்ஷிக்கும் தாவீதின் மைந்தன் இவரோ என்பதாய் பேசிக் கொண்டார்கள். அதைக்கேட்ட பரிசேயர் முதலானவர்கள் பகை பூண்டு, அப்படியன்று; இவர் பைசாசங்களின் தலைவன் பெயர் செபூலினால் பிசாசுகளைத் துரத்துகிறார். மற்றப்படி யல்ல என்றார்கள்.

சுவாமி அதற்கு, "பைசாசங்களின் தலைவன் தன் குடிகளைத் துரத்தினால் அவன் ராஜ்யம் நிலைப்பதெவ்விதம்? சாத்தான் தனக்கே விரோதம் செய்வது கூடிய காரியமா? இது பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷணம்; மன்னிக்கப்படாது. மற்றெந்தப் பாவமும் மன்னிக்கப்படலாம்.

நல்ல மரம் நல்ல கனியும் கெட்ட மரம் கெட்ட கனியும் கொடுக்கும். விரியன் பாம்புக்குட்டிகளான உங்கள் உள்ளத்தில் தீமை இருக்க நீங்கள் நன்மை பேச முடியுமா?" என்றார்.

வேத பாரகரும் பரிசேயரும், "ஆண்டவனே, ஒரு அடையாளம் காட்டி உம்மை எங்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்" என்றார்கள்.

பஹவான், 'யோனா முனிவன் மூன்று நாள் இரவு பகல் ஒருமீன் வயிற்றில் இருந்தான். அவதார புருஷனும் அப்படியே மூன்று நாள் பூமிக்குள் இருப்பார். அப்புறம் வெளிப்படுவார். அது ஒன்றே உங்களுக்குக் கொடுக்கப்படும் அடையாளம். மேலும், தென் தேசத்து ராஜ ஸ்திரி பூமியின் எல்லைகளிலிருந்து சாலமோனுடைய ஞானம் கேட்க வந்தாள். சாலமோனிலும் மஹா பெரியவர் உங்கள் நடுவில் இருந்

தும் நீங்கள் அவர் சொல் கேட்கிறதில்லை. அவள் தீர்ப்பு நாளில் உங்களைக் குற்றப்படுத்துவாள்' என்றார்.

அவர் பிரசங்க வேலை இடைவிடாது செய்தார். அவரைப் பார்க்க வந்த அவருடைய மாதாவும் சகோதரரும் அவருடன் ஒரு வார்த்தை பேசுவதும் அசாத்தியமாய் இருந்தது. அவருக்குச் சொல்லியனுப்பிவிட்டு, இவர் மதிமயங்கித்தான் இருக்கிறாரோவென்று சந்தேகமும் கொண்டார்கள். இவ்வள்வு கஷ்டப்பட்டு உழைப்பானேன் என்பது அவர்களுடைய கருத்து.

பஹவானுக்குத் தமது தாயார் முதலானவர் தேடிவந்திருக்கிறார் என்று சொல்லப்பட்டபோது அவர் எறிட்டுப் பார்த்து, "என் தாயார் யார்? என் சகோதர பந்துக்கள் யார்? என் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு என்னை விசுவாசிக்கும் இந்த என் சீஷப்பிள்ளைகள் தானே" என்று சொல்லி தம்மைச் சுற்றிலும் இருந்த சீஷரைக் காட்டினார்.

---

## 31-ம் அத்தியாயம்.

### ஸ்ரீ இயேசு பஹவான் கடலில் பெருங்காற்றை அதட்டினது.

பகலெல்லாம் செய்த வேலையால் களைப்படைந்திருந்த பெருமான் படகில் நித்திரை செய்யும் வேளையில் கடலில் பெரிய புயல்காற்று எழும்பியது. சீஷரும் தம்மால் கூடியமட்டும் பிரயாசை எடுத்து படகு ஓட்டப் பார்த்தார், கூடவில்லை. படகில் ஜலம் நிரம்புகிறது. எந்த நாழிகையில் பாதாளம் சேருவோமோ என்ற பயம் மேலிட்டது. அலறினார்கள். சுவாமியை எழுப்பி ஐயனே மடிந்துபோகிறோம். எங்கள் கஷ்டம் தேவரீர் கவனிப்பதில்லையா? என்றார்கள்.

சுவாமி எழுந்து உட்கார்ந்து, "காற்றே அடங்கு, கடலே அமர்ந்திரு", எனக் கட்டளையிட்டார். எல்லாம் அமைதலாயிற்று. சீஷர் நடுங்கி, ஆஹா, இவர் பெருமை என்னே! காற்றை அதட்டுகிறார். கடல் அவருக்கு அடங்கி நடக்கிறது, என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

பஹவான் அவர்களைப் பார்த்து, "அவநம்பிக்கைக்காரரே, ஏன் கலங்கினீர்கள்" என்றார். அவர்கள் பஹவானுடைய மகத்துவச் செயல்களை இதுவரை கண்டதில்லையோ என்பது அவருடைய கருத்து.

---

## 32-ம் அத்தியாயம்.

### ஸ்ரீ இயேசு பஹவான் லேகியோன் என்னும் பைசாசக் கூட்டத்தைத் துரத்தினது.

ஸ்ரீ இயேசு பஹவானும் சீஷரும் படகை ஓட்டிக்கொண்டு போய் கதரேன ஜாதியாருடைய நாடு சேர்ந்தார்கள். அங்கே பேய் பிடித்தவன் ஒருவன் அவர்களுக்கு எதிரில் வந்தான். அவனோ, நிர்வாணி. கல்லறை பூமியே அவன் வீடு. வஸ்திரம் உடுத்தச் சகியான். விலங்கு போட்டாலும் அதை முறித்து எறிந்துவிடுவான். கல்லால் அடித்துக் கொள்வான். முள்ளால் கீறிக்கொள்வான். அவனுக்கு எதிரிட்டுப் போக எவருமே துணியார்.

அவன் இரக்ஷண்ய பெருமானைக் கண்டதும் ஓடி பாதம் பணிந்து, கூச்சலிட்டு அலறினான். "அவதார மூர்த்தி, ஸ்ரீ இயேசு ஐயனே, எங்களைக் கெடுக்க வந்தீரா?" என்றான்.

ஏனென்றால், சுவாமி அவனைப் பிடித்த கெட்ட ஆவி வெளியேறும்படி கட்டளை கொடுத்துவிட்டார். மாறுத்தர

மாக அவர், "உன் பெயர் என்ன'' என்றார். அவன் அதற்கு "ஐயனே, *லேகியோன் என்பது எங்கள் நாமம்; நாங்கள் ஒரு கூட்டத்தார். சுவாமி எங்களைத் துரத்த வேண்டாம்'' என்றான்.

பின்பு சமீப தூரத்தில் ஒரு மலைமேல் ஒரு கூட்டம் பன்றிகள் மேயக்கண்டு அவற்றிற்குள் போகும்படி உத்தரவு அளித்தார். பன்றிகள் உடனே ஓடிக் கடலில் விழுந்து மாய்ந்தன.

பன்றி மேய்த்த ஜனங்கள் ஓடி ஊருக்குள்போய் நடந்த காரியம் யாவும் அறிவித்தார்கள். ஜனங்கள் கேட்டுப் பிரமித்து பஹவானைப் பார்க்கக் கூட்டங்களாய் வந்தார்கள்.

பேய் பிடித்து அலையும் ஏழை ஒழுங்காய் உடைதரித்து அவர் பாதத் தண்டை உட்கார்ந்து இருந்தான். பார்த்த ஜனங்கள் திகில் அடைந்து, 'சுவாமி, எங்கள் எல்லைகளை விட்டுப் போய்விட வேண்டு''மென்று வேண்டினார்கள்.

பஹவான் படகில் ஏறும் தருணம், சொஸ்தமடைந்த மனிதன், "ஆண்டவனே அடியேன் கூடவர விடை தரவேண்டும்'' என்றான்.

சுவாமி அதற்கு, "அப்பா, நீ போய் கடவுள் உனக்குக் காட்டின அன்பை யாவருக்கும் தெரிவிப்பாய்'' என்றார். அவனும் அவ்விதமே புறப்பட்டுப்போய் அந்த நாடுகளெங்கும் அறிவித்தான்.

பஹவான் கடலின் அக்கரை சேர்ந்தபோது தாம் விட்டுப்போன கூட்டமான ஜனங்கள் போய்விடாமல் தமக்காய்

---

*லேகியோன் பெருந்தொகை என்பது கருத்து. 6000 சேவகருள்ள ரோம பட்டாளம். யூதர் பன்றி வளர்க்கக் கூடாது.

காத்திருக்கக் கண்டார். அவரைப் பார்த்தவுடனே சூழ்ந்து கூடினார்கள்.

---

## 33-ம் அத்தியாயம்.

### மரித்துப்போன சிறு பெண் உயிரடைந்தது.

### பெரிய வியாதிக்கார மனுஷி சுகமடைந்தது.

ஒருநாள் ஜனக் கும்பல் நடுவில்பகவான் இருக்கும்போது ஜெப ஆலயத் தலைவனான யவீரு என்பவன் அவசரமாய் அவர் சமுகம் வந்து பணிந்து, "எம்பெருமானே, என் குமாரத்தி மரண அவஸ்தையில் கிடக்கிறாள். அப்பனே வாரும். உமது திருக்கரத்தை அவள்மேல் வையும், அப்போது சொஸ்தமடைவாள். உடனே வாருமையா" என்று கெஞ்சினான்.

சுவாமியும் அவன் கேட்டபடியே தலைவனோடு போனார். ஜனக்கூட்டம் அவரோடு கூடப் போனது. அப்போது அவர் திரும்பிப்பார்த்து, என்னைத் தொட்டது யார் என்றார். சீஷர்களும் மற்றவர்களும், சுவாமி இத்தனை கூட்டம் நெருக்கிக்கொண்டு நிற்கிறதே என்றார்கள். அவரோ, "என்னை ஒருவர் தொட்டதுண்டு" என்று சொல்லிச் சுற்றிலும் பார்த்தார்.

ஜனக்கூட்டத்திலிருந்து ஒரு ஸ்திரீ வந்து அவரைப் பணிந்து, "ஐயனே! நான் ஒரு ஏழை. பன்னிரண்டு வருஷமாய் நோவினால் வருந்தித் தவிக்கிறேன். என் ஆஸ்தியெல்லாம் வைத்தியருக்காய் செலவிட்டும் பலன் காணேன். தேவரீர் வஸ்திரத்தின் ஓரம் தொட்டு அந்த நிமிஷமே குணமானேன்" என்றாள்.

பஹவான் அவளை நோக்கி, "மகளே திடன் கொள். உன் விசுவாசம் உன்னை இரக்ஷித்தது. உன் வேதனை நீங்கிச் சுகமாயிரு" என்றார். அவள் அப்படியே குணமானாள்.

அத்தருணத்தில் தலைவன் வீட்டிலிருந்து ஆட்கள் வந்து அவனைப் பார்த்து, ஐயா, உமது பெண் மரித்துப்போனாள். போதகரை வருத்தப் படுத்துவது என்னத்திற்கு என்றார்கள். பஹவான் அவன்மேல் கருணைகொண்டு, "பயப்படாதே. நம்பிக்கை விடாதே," என்று சொல்லி, பேதுரு யாக்கோபு யோவான் என மூன்று பேரைத் தம்மோடு அழைத்துக் கொண்டு தலைவன் வீட்டுக்குள் போனார்.

வீட்டில் அழுது புலம்பும் ஜனங்கள் நிறம்பி யிருந்தார்கள். அவர்களை வெளியே போகச் செய்து, "பெண் நித்திரையாய் இருக்கிறாள்" என்றார். கூட இருந்தவர்கள் நகைத்தார்கள். பஹவான் பெண்ணின் கையைப் பிடித்து, 'அம்மணி, எழுந்திரு' என்றார். அவளும் உடனே எழுந்து உட்கார்ந்தாள்; அவளுக்கு ஆகாரம் கொடுக்கும்படி கட்டளையிட்டார்.

பார்த்தவர்கள் பிரமிப்படைந்தார்கள். நடந்த காரியங்களைப் பிரஸ்தாபம் பண்ணவேண்டாம் என்று கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.

---

## 34-ம் அத்தியாயம்.

### ஐயாயிரம் பேருக்கு உணவு கொடுத்தது.

### பஹவான் கடல்மேல் நடந்தது.

இக்காலங்களில் காவலில் இருந்த யோவான் முனிவரை ஏரோது அரசன் சிரசாக்கினை செய்த செய்தி ஸ்ரீ இயேசு பெருமானுக்கு வந்தெட்டியது. அவர் மன வருத்தமுற்று

த்னித்திருக்கும் நோக்கத்துடன் வனாந்தரத்துக்குப் போகும்படி ஒரு படகில் ஏறி கலிலேயாக் கடலைக் கடந்தார். இதற்குள்ளாக ஜனங்கள் சகல பட்டணங்களிலும் கிராமங்களிலும் இருந்து புறப்பட்டு கால் நடையாய் அங்கே போய்ச் சேர்ந்து விட்டார்கள். அவர் படகு விட்டு இறங்கும்போது அங்கே பரவி நின்ற பெருங்கூட்டங்களைப் பார்த்தார். அவர்கள்மேல் அனுதாபம் பொங்கி அவர்களில் சுகமடையும்படி வந்திருந்த நோயாளிகளைக் குணமாக்கினார். பின்பு திருமொழி கேட்க வந்தவர் இச்சைப்படியே வெகுநேரம் போதனை பலதும் கூறினார். அவரோ இளைப்பாற இல்லை.

பிரசங்கம் முடிந்தவுடனே சீஷர் வந்து எம்பெருமானே, 'ஜனங்களை அனுப்பிவிடும், பசியாய் இருக்கிறார்கள்; இடமோ வனாந்தரம்' என்றார்கள். சுவாமி அதற்குப் "பசியோடு அனுப்புவது தவறு. சாப்பாடு கொடுத்து அனுப்புங்கள்" என்றார்.

சீஷர்: பெருமானே, இந்தத் திரள் படைக்கு ஆகாரம் எங்கிருந்து வரும்! கிடைக்குமா ?

சுவாமி: உங்களிடம் என்ன இருக்கிறது?

சீஷர்: ஐந்து அப்பமும் இரண்டு சிறிய மீனும் இருக்கிறது. அது எம்மாத்திரம் !

சுவாமி: "அதை இங்கே என்னிடம் கொண்டு வாருங்கள். ஜனங்கள் புல்லின்மேல் பந்தி அமரட்டும். அப்பமும் மீனும் கொண்டுபோய் வேண்டிய அளவு கொடுங்கள்" என்றார்.

பெருமான் கட்டளைப்படியே ஜனங்கள் நூறு நூறு பேராகவும் ஐம்பது ஐம்பது பேராகவும் ஆசாரமாய் உட்கார்ந்தார்கள். பஹவான் ஆசீர்வதித்துக் கொடுத்த ஆகாரம் திருப்தியாய் உண்டு மீதம் போட்டு எழுந்தார்கள். சீஷர் அத்

துண்டுகளைப் பொறுக்கினபோது அது பன்னிரண்டு கூடை நிறைய இருந்தது. சாப்பிட்ட புருஷர் சுமார் ஐயாயிரம் பேர். ஜனங்கள் போய்விட்டார்கள்.

பஹறவான் தமது சீஷரைப் படகில் ஏற்றி அனுப்பிவிட்டு, ஒரு மலைமேல் ஏறி ஜெபதியானத்தில் இருந்தார். மேலும் உண்டு திருப்தியடைந்த ஜனங்கள் தம்மை ராஜாவாக்க எண்ணமாயிருப்பதை அறிந்து அவர்களுக்கு விலகியிருந்தார்.

கடலில் எதிர் காற்று எழும்பி சீஷர் தண்டு வலித்து படகைச் செலுத்த வெகு கஷ்டப்பட்டார்கள். அத்தருணம் பஹறவான் கடலில் நடந்து அவர்களிடம்போய் அவரை விட்டுக் கடந்து போவதுபோல் காணப்பட்டார். சீஷர் அவரை ஆவேசமென்பதாய் நினைத்து அலறினார்கள்.

சுவாமி அவரைப் பார்த்து நான்தான் பயப்படாதிருங்கள் என்றார். இதைக்கேட்ட பேதுரு மெய் மறந்த சந்தோஷத்தினால் "ஐயனே, நீரானால் நானும் ஜலத்தில் நடக்கிறேன்" என்றான்.

சுவாமி "சரி, நட, வா" என்றார்.

சீஷனும் உடனே ஜலத்தில் குதித்து நடந்தான். அப்புறம் அவர் திருமுகம் பார்த்து அகமகிழ்வதை விட்டு, காற்றையும் பெரிய அலைகளையும் பார்த்து அலறி, "ஆண்டவனே அபயம், அபயம்" என்று கூச்சலிட்டான்.

சுவாமி, "என்ன, என்ன, இத்தனை அவநம்பிக்கையா?" என்று சொல்லி கை நீட்டி இரக்ஷித்தார். பின்பு இருவரும் படகில் ஏறினார்கள். காற்றும் அமர்ந்தது. கெனசரேத் நாட்டின் கரை பிடித்தார்கள்.

# 35-ம் அத்தியாயம்.

## பிசாசு பிடித்த சிறு பெண் சுகமடைந்தது.

## ஊமையன் பேசினது.

ஒரு நாள் ஸ்ரீ இயேசு பகவான் தீருசீதோன் பட்டணங்களின் அருகில் போய் இருந்தார். அவரும் சிஷரும் ஒரு வீட்டில் இருப்பதாய்க் கேள்விப்பட்ட மனுஷி ஒருத்தி அவரிடம் ஓடிவந்து அவரைப் பணிந்து, "எம்பெருமானே, ஒரு கெட்ட ஆவி என் மகளைப் பிடித்து வருத்துகிறது. அவளைக் குணமாக்கும் தேவா" என்று கெஞ்சினாள். சுவாமி கவனியாதவர்போல் இருந்தார். சிஷர் அவளுக்காக சிபார்சு பண்ணினார்கள். அதற்கு அவர், "குழந்தைகளின் சாப்பாட்டை நாய்க் குட்டிக்குப் போடலாமா? நான் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரைத் தேடி அலைகிறேன்" என்றார். அதற்கு அந்த ஸ்திரீ" ஆண்டவனே, நாய்க்குட்டி குழந்தைகள் சிந்தின உணவு சாப்பிட்டுத் திருப்தி யடையுமே" என்றாள்.

கருணைக்கடலான இறைவன், அவள் மன உறுதியைப் புகழ்ந்து, மனம் உவந்து, "நீ போ. உன் மகள் சௌக்யமாய் இருக்கிறாள்" என்றார். அவள் போய் தன்மகள் சுகமாய் படுத்திருக்கக் கண்டாள்.

சுவாமி அவ்விடம்விட்டு, கலிலேயாக் கடலின் கரையிலுள்ள தெக்கப்போலி நாட்டிற்கு வந்தார். அவர் கடலோரம் இருக்கிற மலை ஒன்றின்மேல் ஏறினார். சப்பாணிகள் குருடர் ஊமையர் ஊனர் முதலான பலவித நோயாளிகளை அழைத்துக்கொண்டு பெருங்கூட்டமாய் ஜனங்கள் அவரிடம் வந்து

சேர்ந்தார்கள். வந்த வியாதியஸ்தர் ஒருவர் பாக்கியில்லாமல் சகலரையும் குணமாக்கினார்.

அவர்களில் ஒருவன் கொளரிக் கொளரிக் கொஞ்சம் போவான். அவன்மேல் கை வைக்கும்படி ஜனங்கள் பிரார்த்தித்தார்கள். சுவாமி அவனைத் தனியாய் அழைத்துச்சென்று அவன் காதில் விரல் வைத்து உமிழ்ந்து அவன் நாவைத் தொட்டு மேலே பார்த்துப் பெருமூச்சுவிட்டு, "திறக்கப்படு" என்றார்.

உடனே ஊமை திருத்தமாய்ப் பேசினான். காதும் கேட்டது. அற்புதங்களைக்கண்ட ஜனங்கள் தமது பெருஞ் செயல்களைப் பிரஸ்தாபிக்க வேண்டாமெனக் கட்டளை கொடுத்து அனுப்பினார். ஆகிலும் அவருடைய மகிமைப் பிஸ்தாபம் திசை திசைக்கு எட்டினது. இரக்ஷண்யமூர்த்தி ஒருவரை உலகத்திற்கு அனுப்பின அருட்பெருஞ் சோதியான இறைவனைப் புகழ்ந்து போற்றினார்கள். பெருங்கூட்டம் ஜனங்கள் ஒரு சமயம் மூன்று நாளாய் அவரிடம் தங்கி உபதேசம் கேட்டுக்கொண்டு இருந்தார்கள்.

---

## 36-ம் அத்தியாயம்.

### நாலாயிரம் பேருக்கு உணவளித்தது-வேதபாரகர் பரிசேயர் மாயத்தைக் கண்டித்தது.

மூன்று நாள் பிரசங்கம் நடத்தியபின், ஸ்ரீ இயேசு பஹவான் தமது முன் இருக்கும் ஜனங்களைப் பார்த்தார். அவர்கள் ஊர்களுக்குப் போகவேண்டியது. ஆனால் பசியாய் இருக்கிறவர்களை அனுப்பிவிட்டால் வழியில் சோர்ந்து

போவார்களே என்று ஆலோசித்தார். அவர்களில் பெண்கள். பிள்ளைகள்கூடப் பலர் இருந்தார்கள். அதனால் பஹறவான் சீஷரைப் பார்த்து, "ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன். சாப்பிடாமற் போனால் வழியில் சோர்ந்து போவார்கள்" என்றார்.

சீஷர்: பெருமானே, என்ன செய்யலாம். இந்த வனாந்தரத்தில் இவர்களுக்குக் கொடுக்க அப்பம் எங்கிருந்து வருமையா ?

சுவாமி: உங்களிடம் ரொட்டி ஒன்றுமே இல்லையா ?

சீஷர்: ஏழு ரொட்டியும் சில சிறு மீன்களும் உண்டு. அது இந்தக் கூட்டத்திற்கு எந்த மூலைக்குக் காணும்?

சுவாமி, "அதை என்னிடம் கொண்டுவாருங்கள். ஜனங்கள் பந்தி அமரட்டும்" என, சீஷர் அப்படியே செய்தார்கள். சுவாமி அப்பத்தை ஆசீர்வதித்து அவர்களிடம் கொடுத்தார். ஜனங்கள் ஒழுங்காய் உட்கார்ந்து திருப்தியாய் சாப்பிட்டார்கள். சாப்பிட்டவரின் தொகை நாலாயிரம். மீந்த துண்டுகளைப் பொருக்கி ஏழு கூடை நிறைய எடுத்தார்கள்.

அவர் ஜனங்களை அனுப்பிவிட்டுத் தாமும் சீஷருமாய் தல்மனுத்தா என்ற இடத்திற்கு வந்தார். சீஷர் அப்பம் கொண்டுபோகத் தவறிப்போனார்கள். அவர்களிடம் ஒரே ரொட்டி இருந்தது.

பரிசேயருடைய மாயமாகிய குணத்தைக் குறித்து அவர் மனம் நொருங்குண்டவராய், 'பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்' என்றார். சீஷர் தாம் அப்பம் கொண்டுவராதபடியால் எச்சரிக்கிறார் என்று நினைத்தார்கள்.

சுவாமி அவர் எண்ணங்களே அறிந்து, "அப்பம் இல்லே என்று விசாரப்படுகிறீர்களா? ஐந்து அப்பம் கொண்டு ஐயாயிரம் பேர் சாப்பிட்டதும் ஏழு அப்பம்கொண்டு நாலாயிரம் பேர் சாப்பிட்டதும் மறந்து போயிற்ரு? இன்னும் உணர்வில்லாமல் இருக்கிறீர்களா?" என்ருர்.

அன்றையத் தினத்தில் பரிசேயர் சதுசேயர் அவரிடம் வந்து, சுவாமி! நீர் இரக்ஷண்ய மூர்த்தியானுல் வானத்திலிருந்து ஒரு அடையாளம் காட்டும் என்ருர்கள். அவர்களுடைய மாயத்தை அறிந்தவராய், "வானத்தில் தோன்றும் குறிகளால் காற்று மழை வருமென்று அறிந்து கொள்ளுகிறீர்கள். தற்காலங்களேயும் நிதானிக்க ஏன் தெரியாது?" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டு அப்புறம் போனுர். அவர்கள் உள்ளத்தில் பகை, விரோதம், தாங்களே மேலானவர் என்ற இருமாப்புக் குடிகொண்டு இருந்ததே தவிர சத்தியத்தைக் காணவேண்டுமென்ற வாஞ்சை அணுவளவும் கிடையாது. இதவே சுவாமி உவமானமாய்ச் சொன்ன "புளித்தமா"

---

## 37-ம் அத்தியாயம்.

### குருடன் ஒருவன் பார்வை யடைந்தது.

### சீஷரின் விசுவாச அறிக்கை.

ஸ்ரீ இயேசு பஹவான் பெத்சாய்தா என்ற ஊருக்குப் போனுர். அங்கே சிலர் ஒரு குருடனே அவரிடம் அழைத்துவந்து அவனேத்தொட்டு சொஸ்தமாக்கும்படியாகக் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் விருப்பத்தின்படியே அவர் குருடனேத் தனியே அழைத்துப்போய் உமிழ்ந்து அவன்

கண்களைத் தொட்டு, 'ஏறிட்டுப்பார் என்றார்,' அவன் பார்த்து, 'சுவாமி, நடக்கிற ஜனங்கள் பார்க்க மரம்போல் காணப்படு கிறார்கள்,' என்றான்.

மறுபடியும் அவர் கண்களைத் தொட்டு, 'பார்' என்றார். அவன் உடனே தெளிவான பார்வை யடைந்தான். அவன் ஊருக்குள்போய் அதைப் பிரஸ்தாபம் பண்ணாமல் நேரே வீட்டுக்குப் போகும்படி கட்டளை கொடுத்து அனுப்பினார்.

அவ்விடம் விட்டு பிலிப்பு செசரியா என்னும் பட்டணத் திற்குச் சுவாமி சீஷருடன் போனார். அவர் சீஷரைப் பார்த்து "ஜனங்கள் என்னைக் குறித்து என்ன அபிப்பிராயம் கொண் டிருக்கிறார்கள் ?" என்று கேட்டார்.

அவர்கள், "தேவரீர், யோவான் ஸ்நானன்தான் என் கிறார்கள். வேறு சிலர், பூர்வகாலத்து எலியாமுனிவர் அவ தாரம் என்கிறார்கள். வேறு ஜனங்கள் இவர் எரேமியாவாய் இருக்கலாம் என்று பேசிக்கொள்கிறார்கள். ஒருக்கால் பழய காலத்து முனிவர் யாரோ ஜன்மம் எடுத்து வந்திருக்கலாம் என்றும் சிலர் பேசுகிறார்கள்," என்றார்கள்.

அப்போது பஹவான் "நீங்கள் என்னை யாரென்று நினைக்கிறீர்கள்?" என்றார்.

கேள்வி முடியுமுன் பேதுரு பதஷ்டமாக "நீரே மகா தேவனுடைய திருக்குமாரன், கிறிஸ்துவாகிய இரக்ஷண்ய மூர்த்தி" என்று விடை பகர்ந்தான்.

பஹவான் அவனைப்பார்த்து "யோனாவின் மகனாகிய சீமோனே, மனிதனாவது, இந்த மாம்ச தேகத்திற்குரிய தத் துவங்களாவது, இந்தப் பெரிய இரகசியத்தை உனக்கு வெளி ப்படுத்தவில்லை. சர்வ வல்ல மேலோனாகிய என் பிதா உனக்கு அறிவித்தார். நீயோ பேதுரு (கல்). இந்தக் கல்மேல் என்

சபையைக் கட்டுவேன். என் சபை மரணத்தின்மேல் ஜெயங் கொள்ளும். நீ பரலோக ராஜ்யத்தின் வாசல் திறந்து விடு வாய். பூலோகத்தில் நீ கட்டுவது பரலோகத்திலும் கட்டப் பட்டிருக்கும். பூமியில் நீ கட்டவிழ்ப்பது பரலோகத்திலும் சுயாதீனமாகவே இருக்கும்'' என்றார்.

தாம் கிறிஸ்துவாகிய இரக்ஷண்ய மூர்த்தி என்று ஒருவ ரிடமும் பேசவேண்டாமென்று சீஷருக்குக் கட்டளை கொ டுத்தார்.

அன்று முதல் தாம் எருசலேம் நகருக்குப் போகவேண் டிய காரியத்தை அவர்களுக்குச் சொல்ல ஆரம்பித்தார். வேத பாரகர் பிரதான ஆசாரியர்களாலும், ஜனத்தின் தலைவரான பெரிய மனுஷராலும், தாம் அடையப்போகிற கஸ்தி, வாதை, நிந்தனை, மரணம் ஆகிய பெருங்காரியங்களைக் குறித்துக் கூறி னார். அவர்கள் கொலை செய்தபோதிலும் தாம் ஜெயமாய் மூன்றாம்நாளில் உயிரோடு எழுந்திருப்பதையும் தெரிவித்தார்.

சீஷர் இதைக்கேட்டுத் துக்கசாகரத்தில் மூழ்கினவராய், வாய்விட்டுப் பேசவும் பயந்தார்கள்.

பேதுரு தைரியமாய் அவரோடு தனித்துப் பேசினான். "சுவாமி, இறைவா, உமக்குமா வாதை, நிந்தனை, வார்அடி, வன்சாவு! என் உயிர் துடிக்கிறது. தேவா, வேண்டாமையா, வேண்டாம். இரக்ஷண்யமூர்த்தி, தேவரீர் திருவுளம்கொள்ள என்ன காரியம் ஆகாது'' என்றான்.

பகவான் அவனைக் கோபித்து, "பைத்தியகாரா, சர்வ சிருஷ்டிகர்த்தாவுக்கு உகந்த காரியம் பேசு!'' என்று சொல்லி சீஷரிடமாகத் திரும்பி, "எனக்குச் சீஷனாயிருக்க விரும்புகிற வன் தன் சுகங்களை வெறுத்துக் கஷ்டங்களை உத்தரிக்கவேண் டும். தன் ஜீவனைக் காக்க விரும்புகிறவன் அதை இழந்து

போவான். அதை என்னிமித்தம் இழந்தவன் மரித்தும் பிழைப்பான்.

உலக முழுவதையும் சம்பாதித்தாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்திவிட்டால் மனுஷனுக்கு லாபம் என்ன? அவன் ஜீவனுக்கு நிகராய் என்ன இருக்கிறது?

என் நாமத்தை அறிக்கை செய்ய வெட்கப்படுகிறவன் பக்தன் அல்ல. என் பிதாவின் ராஜ்யத்தில் அவனை அங்கீகரிக்க நான் வெட்கப்படுவேன்" என்றார்.

---

## 38-ம் அத்தியாயம்.

### சந்திர ரோகியான சிறுவன் குணமானது.

ஸ்ரீ இயேசு பஹவான் ஒரு நாள் காலையில் மலையிலிருந்து கீழே இறங்கினர். அவரைக் கண்ட ஜனங்கள் எதிர் கொண்டு ஓடினார்கள். கூட்டத்தில் ஒருவன் அவரைப் பார்த்து, "எம்பெருமானே, என் மகன் சந்திர ரோகியாய் மகா வேதனைப் படுகிறான். பிசாசு ஒன்று அவனைப் பிடித்திருப்பதால் செவிடனாயும் ஊமையாயும் இருக்கிறான். நெருப்பில் ஜலத்தில் சில சமயம் விழுந்து விடுகிறான். தேவரீருடைய சீஷரிடம் கொண்டு வந்தேன். அவர்களால் ஒன்றும் செய்யக் கூடவில்லை. தேவரீர் அடியான்மேல் இரங்கி எதாகிலும் செய்ய வேண்டும்" என்று மன்றாடினான்.

சுவாமி "என்னால் கூடும் என்ற திடநம்பிக்கை உனக்கு இருக்குமானால் செய்யலாம்" என்றார்.

அந்த மனுஷன், "சுவாமி, என் நம்பிக்கை உமதுபேரில் இருக்கிறது. என் நம்பிக்கைக் குறைவு நீக்கி அருள்புரியும் அவன் எனக்கு ஒரே பிள்ளை. அவனை ரக்ஷியும், அப்பனே" என்று சொல்லிக் கண்ணீர் சிந்தினான்.

அவர் பார்த்தபோது சீஷர் ஒன்பது பேரும் பையனைச் சூழ்ந்து நின்றார்கள். வேதபாரகர் அவர்களோடு தர்க்கம் பண்ணினார்கள். சீஷர் பையனைக் குணமாக்கவில்லை என்று அவர் மிகவும் மன நோவுற்றார்.

அவர் பையனிடம் போய் 'செவிட்டு ஊமை ஆவியே, ஓடிப்போ' என்றார். பையன் கீழேவிழுந்து வாயில் நுரை தள்ளிப் புரண்டு பின்பு செத்தவன்போல் கிடந்தான். சுவாமி அவன் கையைப் பிடித்துத் தூக்கி விட்டார். அப்பொழுது அவன் சுகமாய் எழுந்தான்.

அவனுக்குச் சுகம் கொடுக்கக்கூடாமல் நின்ற தமது சீஷரைப் பார்த்து மிகவும் விசனித்து, "அற்ப விசுவாசிகளே நான் இன்னும் எவ்வளவு காலம் உங்களோடு இருப்பேன். எதுவரை பொறுமையாய் இருப்பேன்" என்றார். அவர் வீட்டுக்குப் போனபின்பு தனித்திருக்கையில் சீஷர் சுவாமியைப் பார்த்து "ஐயனே, அந்தப் பைசாசத்தை எங்களால் துரத்தக் கூடாதது ஏன்?" என்று கேட்டார்கள். சுவாமி அதற்கு "ஊக்கமாய் ஜெபம் செய்து உபவாசம் பண்ணினால் இவ்விதப் பேயை மேற்கொள்ளலாம். மற்றபடி முடியாது. உங்களுடைய விசுவாசக்குறைவால் பையனைக் குணமாக்கக் கூடாமல் போயிற்று. கடுகளவு விசுவாசம் இருந்தால் ஒருமலையைப் பெயர்த்து சமுத்திரத்தில் போட்டு விடலாம்" என்றார்.

மேலும் பஹவான் சீஷரைப் பார்த்து, "அவதார புருஷன் கொடியரான மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படுவார். அவர்கள் அவரை ஹிம்சைப் படுத்திக் கொல்லுவார்கள்" என்றார். சீஷர் இதைக்கேட்டு அளவற்ற வியாகுலமடைந்தார்கள்.

---

# 39-ம் அத்தியாயம்.

## தாழ்மை, இரக்கம், அடக்கமாகிய சுகுணங்களைப் பற்றிய போதனைகள்.

பகவானுடைய சீஷருக்குள் தம்மில் பெரியவன் யார்? விசேஷமானவன் யார்? என்பதாய் ஒரு தர்க்க முண்டாயிற்று. அவர் அதைக் கண்ணுற்று மிகுந்த மனவருத்தமடைந்து, ஒரு குழந்தையை அழைத்து அவர்கள் நடுவில் நிறுத்தி, "நீங்கள் மனம் மாறி சிறு குழந்தைபோல் ஆகாத பட்சத்தில் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை. அங்கே இடம் வேண்டுமானால் குழந்தைபோல் கபடமற்றவர்களாக வேண்டும். என் நாமத்தினிமித்தம் சிறு குழந்தை ஒன்றை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான். என்னிடம் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவருக்கு இடையூறு செய்கிறவனைக் கழுத்தில் கல்லைக் கட்டி சமுத்திரத்தில் அமிழ்த்துவது நலம். அது அவனுக்கு மிக்க லகுவான தண்டனை. ஆதலால் உங்களில் மகா சிறியவனாக நடந்து கொள்ளுகிறவனே பெரிய மனுஷன்.

உலகத்தில் என்னைப் பின்பற்றுகிற என் சீஷருக்கும் நன்மை செய்கிறவனுக்கும் பலவித நல் எண்ணத்துக்கும் அளவற்ற இடையூறுகள் வரும். இப்படி வரவேண்டியதும் அவசியமே. ஆனால் இடையூறுக்குக் காரணமாயிருக்கிறவனுக்கு ஐயோ, பிறருக்கு வீண் உபத்திரவம் கொடுக்கிற கண் கால், கை முதலான உருப்புகளைச் சுமந்து திரிந்து பாவம் பழிக்கு ஆளாயிருப்பதிலும் அவைகளைத் தறித்து எரிந்து விட்டு ஊனமாயிருப்பது இலகு. பிறருக்குத் துன்பம் விளை

விக்கும் காலும் கையும் கண்ணும் மனிதனை நரகத்தில் கொண்டு சேர்க்கும்'' என்றார்.

சீஷரில் ஒருவன் சுவாமியைப் பார்த்து 'ஐயனே, யாரோ ஒரு மனுஷன் தேவரீருடைய நாமத்தைச் சொல்லி பேய் களைத் துரத்தக்கண்டோம். அவன் நம்மைச் சேராதவன் என்று அவனைத் தடை பண்ணினோம்' என்றான்.

சுவாமி 'அப்படித் தடுக்க வேண்டாம். நமது நாமத்தால் பேய்களைத் துரத்தக்கூடியவன் நமக்கு விரோதியாய் இரான்' என்றார்.

மேலும் அவர் 'என்னை அண்டின தாசரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணவேண்டாம். அவர்களுக்காய் ஏற்பட்ட தூதர் என் பிதாவின் சமுகத்தில் இருக்கிறார்கள். அவதாரக் கடவுள் கெட்டுப்போனதை இரக்ஷிக்க வந்தார். ஒருவனுக்கு நூறு ஆடு இருந்தாலும் அவற்றில் ஒன்றை இழக்க அவன் மனம் தாங்காது. ஒன்று காணமல் போனால் அதைக் கண்டு பிடிக்குமளவும் தேடி அலைவான். கண்டவுடனே மெய்மறந்து சந்தோஷிப்பான். அவ்விதமே இந்தச் சிறியரில் ஒருவனாவது கெட்டுப்போக என் பிதா சகியார். அது அவர் சித்தமல்ல' என்றார்.

பின்னும் அவர், "அயலார் செய்யும் பிழைகளைப் பொறுக்க வேண்டியது அவசியம். மற்றப்படி பரலோக ராஜ்யத்தில் இடம் கிடையாது. உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றம் செய்தால், நீங்கள் தனித்து இருக் கும்போது சொல்லி சமாதானமாக வகைபார். அவன் கேளாவிட்டால் இரண்டு சிநேகிதரைக் கொண்டு சொல்லு. அதையும் அவன் அலட்சியம் செய்தால் சபையாருக்குச்

சொல்லு. அவன் சபையார் வார்த்தைக்கும் இணங்காவிட்டால் அப்புறம் அவனை விட்டு விலகிக்கொள்.

பூலோகத்தில் நீங்கள் கட்டுவது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். நீங்கள் இங்கே விடுதலை செய்வது பரலோகத்திலும் விடுதலை அடைந்து இருக்கும். நீங்கள் இரண்டு மூன்றுபேர் கூடி எதைக்கேட்டாலும் பிதா கொடுப்பார். என் நாமத்தில் இரண்டு மூன்றுபேர், எங்கே கூடினாலும் நான் அவர்கள் மத்தியில் இருப்பேன் என்றார்.

பேதுரு அவரை நோக்கி, "சுவாமி எனக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிற என் சகோதரனுக்கு நான் எத்தனை தரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரம் மன்னிக்கவேண்டுமோ?" என்றான். சுவாமி, "அப்படியல்ல, ஏழு எழுபதுதடவை மன்னிக்கவேண்டும்" என்றார். ஒரு உவமானக் கதையும் அவர்களுக்குச் சொன்னார். அதாவது,

"ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு நாள் கணக்குகளை எடுத்துப் பார்த்தார். அதில் பதினாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவன் பெயரைக் கவனித்தார். ராஜா அவனை அழைத்து உள்ளது உரியதெல்லாம் விற்றுக் கடனைத் தீர்க்கக் கட்டளையிட்டார். அவன் ராஜாவின் பாதத்தில் விழுந்து பணிந்து இரக்கத்திற்காய்க் கெஞ்சினான். (ஒரு தாலந்து=ரூ 1875) எஜமானும் கடனைப் பூராவும் மன்னித்துவிட்டார். அவ்வூழியன் புறப்பட்டுப்போய்த் தன்னிடம் கடன்பட்ட உடன் வேலையாள் ஒருவனைப் பிடித்துத் தனக்கு வரவேண்டிய தொகை நூறு பணத்தைக் கேட்டான். கடன்பட்ட ஏழை கொடுக்க நிர்வாகமில்லாமல், அப்பா அரசே, பொறுத்துக் கொள், என்று கொஞ்சம் தவணை கொடுக்கும்படி கெஞ்சினான். அவனோ சகிப்பில்லாதவனாய் கடனாளியைத் துன்பப்

படுத்திச் சிறையில் அடைத்தான். (ஒரு பணம்=5 அணு 3 பை வெள்ளி). இதைக்கண்ட மற்ற வேலையாட்கள் நடந்த காரியாதிகளை ராஜாவுக்குத் தெரிவித்தார்கள்.

எஜமான் கோபமூண்டு தன்னிடம் மன்னிப்புப்பெற்ற பெரிய கடன்காரனை அழைத்து விசாரித்து அவன் கடன் தீர்க்குமட்டும் காவலில் இருக்கக் கட்டளையிட்டார். அவன் என்ன சாக்குபோக்குச் சொன்னாலும் இரண்டாந்தரம் மன்னிப்புக் கிடைக்கவில்லை.

ஆதலால் அயலார் செய்த குற்றங்களை மனப்பூர்வமாய் மன்னியாவிட்டால் உங்களுக்குப் பரலோக ராஜ்யத்தில் இடம் கிடையாது" என்றார்.

---

## 40-ம் அத்தியாயம்.

## ஸ்ரீ இயேசு பஹவான் கலிலேயாவை விட்டு எருசலேமுக்குப் போனது.

ஸ்ரீ இயேசு பஹவான் கலிலேயாவில் நிறைவேற்றத் தாம் திருவுளம் கொண்ட வேலையை முடித்தார். பூலோகம் விட்டுப் பிதாவிடம் போகுமுன் எருசலேமில் நிறைவேற்ற வேண்டிய மகா வேலைகள் பாக்கி இருந்தது. அதற்காகக் கலிலேயா நாடு விட்டு சமாரியாவைக் கடந்து யூதேயா நாட்டுக்கு வந்தார். வழியில் சமாரிய கிராமம் ஒன்றில் இரவு கழிக்கும் நோக்கமாய் சீஷர் கேட்க கிராமத்தார் இடம் கொடுக்கவில்லை. "ஆஹா, நல்லமாதிரி, யூதருக்கா இடம் கொடுக்கிறது! போதகராயினும் யூதன்தானே; மேலும் அவர் நேரே எருசலேமுக்குப் போகிறார்; இடம் இல்லை" என்பதுபோல் சொல்லிவிட்டார்கள்.

இச்செய்தி எஜமானிடம் கொண்டுவந்த சீஷருக்குக் கோபமும் விசனமும் பொங்கினது. அவர் மகிமையை விசேஷமாய்க் கண்ணாரக்கண்ட யாக்கோபும் யோவானும் சினந்து, சமாரியர் அவருடைய பெருமையைக் காணச்செய்ய வேண்டு மென்று தீர்மானித்தார்கள். சுவாமியிடம் போய், "அப்பனே, இவ்வூரார் எம்பெருமானது மகிமையைச் சிறி தளவேனும் மதித்தாரில்லை. வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவரைப் பஷ்பமாக்கக் கட்டளையிடும். தம்மை அவமதித்த சேனைகளையும் வீரரையும் எலியா முனிவர் நீராக்கினரே" என்றார்கள்.

கருணையாளியான பஹவானை இவ்வார்த்தைகள் திடுக் கிடச் செய்தன. அவர்களைப் பார்த்து, அவர், "அப்படியா? நீங்கள் என்ன வேலைக்கு ஏற்பட்டவர்கள் என்று உங்க ளுக்கே தெரியவில்லை. நான் அவதாரமெடுத்து உலகத்தில் தோன்றினது ஜீவகோடிகளை அழிக்க அல்ல, இரக்ஷிப்பதற்கே" என்று சொல்ல, அடுத்த கிராமத்திற்குப் போய்த் தங்கி னார்கள்.

மறுபடியும் அவர்கள் பிரயாணம் போகையில் ஒரு மனு ஷன் அவரிடம் வந்து, "சுவாமி, தேவரீர் எங்கே போனாலும் அடியேன் கூடவே இருக்க உத்தரவாகவேண்டும்" என்றான்.

பஹவான் அதற்கு, "அப்பா, என்கூட இருக்கவேண் டுமோ? நரிகளுக்குக் குழியுண்டு; பக்ஷிகளுக்கு இன்பமான கூடு உண்டு. மனுஷ அவதார புருஷனுக்குத் தலைசாய்க்க இடம் கிடையாது" என்றார். அவன் போய் விட்டான்.

சுவாமி வழியில்போன வேறொரு மனுஷனை அழைத்து, 'எனக்குச் சீஷனாகுக' என்று கட்டளையிட்டார். அவன் "தேவா, நான் வீட்டுக்குப்போய் என் பிதாவின் காலம் வரை

அவரோடு இருந்து அவருக்கு நல்லடக்கம் கொடுத்தபின்பு வருகிறேன்'' என்றான்.

சுவாமி, "அப்பா ஆத்தும விசாரம் இல்லாத மரித்தவர்களான ஜனங்கள் பலர் உன் பிதாவை அடுத்து இருக்கிறார்கள். மரித்தோரை அடக்கம் செய்யும் வேலை அவர்களுக்கு இருக்கட்டும். நீ போய் கடவுளுடைய ராஜ்யம் இத்தன்மையானது என்று பிரசங்கம்பண்ணு'' என்றார்.

வேறொருவன் வந்து அவர் பாதம் பணிந்து, 'ஐயனே, எனக்குத் தேவரீரின் தாசனாகித் தொண்டு செய்ய விருப்பம் அதிகம். உம்மோடு இருப்பதே பாக்கியம். வீட்டுக்குப் போய் வழியனுப்பிக் கொண்டுவந்து விடுகிறேன்' என்றான். பஹவான் 'நீ இல்லற வாழ்வின் மேல் கருத்தாயிருந்தால் பரலோக ராஜ்யத்தின் அடியனாவது எப்படி? கலப்பை பிடித்து ஏர் உழப் புறப்பட்டவன் திரும்பிப் பார்க்கக் கூடாது' என்றார்.

---

## 41-ம் அத்தியாயம்.

### பிறவிக் குருடன் கண் பெற்றது.

ஸ்ரீ இயேசு பெருமான் ஒரு நாள் வழி நடந்து போகையில் பிச்சை வாங்கிக்கொண்டிருந்த ஒரு குருடனைக் கண்டார்.

சிஷர், "சுவாமி, இவன் இப்படிக் குருடனாய்ப் பிறந்து ஹிம்சைப்படுவது யார் செய்த பாவம்? இவன் பாவமா? பெற்றோர் செய்த தீவினையா?'' என்று கேட்டார்கள்.

சுவாமி, "அப்படியல்ல. கடவுளுடைய மகத்துவம் வெளிப்பட இவன் காரணமாய் இருக்கிறான்'' என்று

சொல்லி அவனை அழைத்து, தரையில் உமிழ்ந்து சேருண்டாக்கி, அவன் கண்களில் பூசி, சீலோவாம் குளத்தில் கண்ணைக் கழுவி வா" என்று சொல்லி அவனை அனுப்பி விட்டார். அவனும் போய்க் கண்ணைக் கழுவிப் பார்வையடைந்தான். அது ஒரு ஓய்வு நாள்.

குருடனா யிருந்தவன் ஜனக்கூட்டத்தில் திரிவதைக் கண்ட அயலார், "இவன் யார்? அந்தக் குருட்டுப் பிச்சைக்காரன் அல்லவா! அவன் போலவே இருக்கிறான். நன்றாய்ப் பார்க்கிறான். கண்ணில் பழுதே இல்லை. அவன்தானா?" என்று பலவாறு ஆலோசித்தார்கள். அவன், "ஐயா, குழந்தைப் பிராயமுதல் குருடனாய்ப் பிச்சை வாங்கித் திரிந்தவன் நானே" என்றான்.

அவர்கள், "அடே, எப்படி குருட்டுக்கண் இவ்வளவு அழகிய நல்ல கண்ணாயிற்று?" என்றார்கள். அவன் இயேசு என்னும் பெயர்கொண்ட ஒருவர் என்னைச் சுகமாக்கினார் என்று நடந்த காரியமெல்லாம் விவரமாய்ச் சொன்னான். ஜனங்கள் அவனைப் பரிசேயரிடம் அழைத்துச் சென்று காரியங்களைச் சொன்னார்கள். பரிசேயர். இப்படியும் ஓய்வுநாளை மீறலாமா! என்று சொல்லி, இக்காரியம் செய்தது யார்? என்று குருடனாயிருந்தவனைப் பல முறை கேள்விகேட்டு அலட்டினார்கள். அவன் சொன்னதையே சொன்னான். தாய் தந்தையரை அழைத்து, "இது யார்? உங்கள் மகனா? குருடனாய்ப் பிறந்தானா? எப்படிச் சுகமானான்? யார் சுகமாக்கினார்?" என்று திரும்பத் திரும்பக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள். கேள்வி கேட்கும் பெரியோருடைய கருத்தை அறிந்த பெற்றோர், "எங்களுக்கு அவன் சுகமான விவரம் ஒன்றுமே தெரியாது. பையன் எங்கள் பிள்ளைதான். குருடனாய், பிறந்தவன். இப்போது

கதிர் ஒளி வீசும் கண்களோடு திரிகிறான். அவனையே கேளுங்கள். மற்ற விவரம் எதுவானாலும் அவனைக் கேளுங்கள்'' என்றார்கள். அவர்களைப் போகவிட்டு, குணமான வாலிபனைப் பார்த்துப் பரிசேயர், "அப்பா நீ கடவுளை மகிமைப்படுத்து. இவன் பாவி என்று நாங்கள் அறிவோம்'' என்றார்கள்.

அவன், "அவர் பாவிதானோ அல்லவோ நான் அறியேன். வெளிச்சம் இன்னதென்று அறியாமல் பிச்சை கேட்டுக் கொண்டு கிடந்த ஏழையேன் பார்வை அடைந்து சுகமாயிருக்கிறேன்'' என்றான்.

அவர்கள் மறுபடியும் அவனிடம் கேள்வி கேட்டபோது அவன், "ஐயன்மீர், இந்த வரலாறு யாவும் முன்னமே சொன்னேன். என்னைத் திரும்பவும் கேள்வி கேட்கும் காரணமென்ன? ஒருக்கால் அவருக்குச் சீஷராகப் பிரியமாய் இருக்கிறீர்களோ?'' என்றான். அவர்கள் சீறிச் சினந்து, "அடே, நீ அவனுடைய சீஷன். நாங்கள் மோசேயின் சீஷர். மோசேயுடன் சாக்ஷாத் கடவுள் பேசினார் என்று அறிவோம். இவன் எங்கேயிருந்து வந்தானென்று அறியோம்'' என்றார்கள். விழி பெற்றவன் "அவர் என் கண்களைத் திறந்தாரே! இன்னும் அவர் எங்கேயிருந்து வந்தாரென்று நிதானிக்கவில்லையா? பாவிகளுக்குக் கடவுள் செவி கொடுப்பதில்லை. யார் அவர் திருவுளச் சித்தத்திற்கு அடங்கி நடக்கிறானோ, அவனுக்கு அல்லவோ அவர் செவி கொடுப்பார். பிறவிக் குருடனுடைய கண்களை ஒருவர் திறந்தாரென்று உலகம் உண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே. இதனால் அவர் தேவாதி தேவனிடமிருந்து வந்தாரென்று தெரியவில்லையா? மற்றப்படி அவரால் என்ன ஆகும்?'' என்றான்.

அவர்கள் கோபித்து, "முழுவதும் பாவத்தில் ஜென்மித்த நீயா எங்களுக்குப் போதிக்கத் துணிந்தாய்?" என்று சொல்லி அவனைப் புறம்பே தள்ளிவிட்டார்கள்.

சுவாமி அவனை ஒரு நாள் தேவாலயத்தில் கண்டு, "நீ அவதாரக் கடவுளிடத்தில் விசுவாசமாய் இருக்கிறாயா?" என்று கேட்டார்.

அவன், "ஆண்டவனே அவர் யார்? அறியேனே," என்றான்.

சுவாமி, "நீ அவரைப் பார்த்ததுண்டு. இப்போது உன்னோடு பேசுகிறார்" என்றார்.

அவன், "ஆண்டவனே, விசுவாசிக்கிறேன்" என்று சொல்லிப் பணிந்து கொண்டான்.

பஹவான் தம்மைச் சூழ நின்றவரைப் பார்த்து, "குருடர் பார்க்கவும் கண்ணுள்ளவர்கள் குருடராகவும் இவ்வுலகின் நியாயத் தீர்ப்புக்கு வந்தேன்" என்றார்.

அங்கிருந்த பரிசேயர், "நாங்களும் குருடரா?" என்றார்கள்.

பஹவான், "நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவம் இராது. காண்கிறோம் என்று சொல்லுகிறபடியால் உங்கள் பாவம் நிலைத்திருக்கிறது" என்றார்.

---

## 42-ம் அத்தியாயம்.

### ஒரு நியாய சாஸ்திரிக்குச் சொன்ன உபதேசம்.

### நல்ல சமாரியன் உவமை.

ஸ்ரீ இயேசு பஹவான் காலத்தில் யூத ஜனங்களுக்குள் நியாய சாஸ்திரிகள் என்று ஒரு வகுப்பார் இருந்தார்கள். அவர்கள் பெரும்பாலும் வேதபாரகரைப் போலவே

மோசே முனிவர் அருளிய நியாயப் பிரமாணத்தையும் மற்றும் உள்ள பாரம்பரிய ஆசாரங்களையும் கற்றுணர்ந்து போதிக்கிற தொழிலாளர்.

நியாய சாஸ்திரி ஒருவன் சுவாமியைப் பரிசோதிக்கும் கருத்துக்கொண்டவனாய் அவரிடம் வந்து, "போதகரே, கற்பனைகளில் பிரதானமானது எது?" என்று கேட்டான்.

சுவாமி, "நீயே சொல்லு" என்றார். சாஸ்திரி "உன் இறைவனாகிய கடவுள் பேரில் உன் முழு பலத்தோடும், உன் முழு வாஞ்சையோடும் அன்பு கூறுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூர்வதுபோல் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பவைகளே விசேஷமான கட்டளைகள்" என்றான்.

சுவாமி, "அப்பா நீ போய் அப்படியே செய்" என்றார். சாஸ்திரி தான் உத்தமன் என்று காட்டிக்கொள்ள அபிலாசை கொண்டவனாய், "சுவாமி, எனக்கு, அயலான் யார்?" என்றான்.

சுவாமி, மதபேதம் ஜாதி பேதமில்லாமல் கண்ணுக்கு எதிர்ப்படும் எந்த ஏழை எளியவனும் பெரியவனும் அயலான் தான்; எவனையும் அவசியம் நேசிக்கவேண்டும் என்ற கருத்து அவனுக்கு விளக்கிக்காட்ட ஒரு உவமை சொன்னார். அதாவது:—

"ஒரு மனுஷன் எருசலேமில் இருந்து எரிகோவுக்குப் போகப்புறப்பட்டான். அவன் போன காட்டுப் பாதையில் கள்ளர் வந்து அவனை அடித்துக் காயப்படுத்திக் கொள்ளையிட்டு, மூர்ச்சித்தவனாய்ப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

சற்று நேரத்தில் ஆசாரியன் ஒருவன் அவ்வழி வந்தவன் அவனைக்கண்டு, 'இவனைக் கவனிப்பதுதான் என் சோலியோ!

நான் தேவாலய ஊழியன்' என்று எண்ணி வழியில் கிடக்கும் அகதியைச் சற்றும் கவனிக்காமல் விலகிப்போனான்.

சிறிது நேரம் கழிந்தபின் லேவியன் ஒருவன் அவ்வழி வந்தான். அவன் தாழ்ந்த வேலைக்காரன்; ஆயினும் தேவாலயப் பணிவிடைக்காரன்; தன் அந்தஸ்தை மறந்தவனுமல்ல. ஸ்மர்ணையற்று நாதியற்றுக் கிடப்பவனைக் கண்டு, நமக்கேன் இந்தத் தொல்லை, என்ற தீர்மானத்துடன் பக்கமாய் விலகி நடந்தான்.

பின்பு சமாரிய பிரபு ஒருவன் வாகனம் ஏறி அவ்வழி வந்தான். பல காயங்களுடன் இரத்தத்தில் புரண்டு கிடக்கும் மனிதனைப் பார்த்தான். அவன் யூதன், தன் குலத்து விரோதி, தன்னை மகா தாழ்வாய் மதிக்கிற வகுப்பைச் சேர்ந்தவன், என்ற எண்ணங்கள் வந்து அவனுடைய தருமசிந்தையை வழி மறிக்கவில்லை. அவன் சட்டென வாகனம்விட்டு இறங்கி ஓடி, அவன் காயங்களை எண்ணெய் திராக்ஷ ரசம்போட்டுக் கட்டி, தன் வாகனத்தில் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டு போய் பராமரித்தான். மறுநாள் அவன் புறப்படும்போது, பிணியாளியைச் சத்திரக்காரன் பாதுகாப்பில் வைத்து, செலவுக்கு இரண்டு பணமும் கொடுத்து, 'அப்பா இவனைக் கவனமாய்ப் பார்த்துக்கொள். இதற்குமேல் ஏதாவது நீ செலவு செய்தாலும் நான் வந்து உனக்குக் கொடுப்பேன்' என்றான். சாஸ்திரியாரே, சொல்லும். காயப்பட்டவனுக்கு அயலான் யார்? என்றார். சாஸ்திரி, "அவனுக்குப் பேருதவி செய்த உத்தமனே அயலான்" என்றான்.

சுவாமி, "நீயும் அப்படியே ஜீவியம் பண்ணு" என்றார்.

---



மார்த்தாள் மரியாள் வீட்டில் பஹவான்.

## 43-ம் அத்தியாயம்.

### மார்த்தாள் மரியாள்—பெத்தானியாவில் பஹவான் இராத்தங்கினது—பஹவானுக்கு உகந்த ஊழியம்.

எருசலேமுக்குச் சமீபத்தில் இருந்த பெத்தானியா என்ற கிராமத்தில் சுவாமி மார்த்தாள் என்ற மனுஷி வீட்டில் ஒரு நாள் இரவு தங்கினர். அவளுக்கு மரியாள் என்று ஒரு சகோதரி இருந்தாள்.

சுவாமியைக் கண்ட சந்தோஷம் உள்ளத்தில் பொங்கவே மார்த்தாள் ஓடி ஆடி பலவித உணவு பதார்த்தங்களை அவருக்காய் தயார் பண்ணினுள். மரியாள் வேலே எல்லாம் மறந்தவளாய் அவருடைய பாதப்படியில் உட்கார்ந்து அவர் வார்த்தைகளை ஆவலுடன் கேட்டுக்கொண்டு இருந்தாள். மார்த்தாள் வேலேயில் தவிப் படைந்தவர்களாய் சுவாமியிடம் போய், "சுவாமி, இந்த மரியாள் எனக்கு உதவி செய்யாமல் சௌக்யமாய் உட்கார்ந்திருக்கிருள். அவள் எழுந்து வீட்டு வேலே செய்யக் கட்டளேயிடும்" என்ருள்.

பஹவான், "ஏ, மார்த்தாள், ஏன் இப்படிக் கவலே கொண்டு கஷ்டப்பட்டுக் கலங்குகிருய்? தேவையானது ஒன்றே. அந்த நல்ல பங்கை மரியாள் தெரிந்து கொண்டாள்" என்ருர்.

---

## 44-ம் அத்தியாயம்.

### ஸ்ரீ இயேசு பஹவான் ஜெபம் செய்யக் கற்பித்தது.

ஸ்ரீ இயேசு பஹவான் ஒரு நாள் தம்முடைய சீஷருடன் ஜெபம் செய்து முடிந்தவுடனே ஒருவன் அவரது திருமுகம் நோக்கி, "ஐயனே, எங்களுக்கு ஜெபம்செய்யப் போதிக்க

வேண்டும் என்றான். பஹவான் அவன் மன்றாட்டுக்கு இணங்கிப் போதித்த ஜெபமாவது:—பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பிரிசுத்தமாய் வணங்கப்படுவதாக, தேவரீருடைய ராஜ்யம் வருவதாக, தேவரீருடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூமியிலும் நிறைவேறுவதாக; எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்றும் எங்களுக்குத் தாரும்; எங்களுக்கு விரோதமாய் தீங்கு செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிப்பதுபோல எங்கள் பாவங்களை மன்னியும்; நாங்கள் பாவசோதனைக்கு உட்படாதபடி எங்களைத் தீமையினின்று ரட்சியும்; ராஜரீகம், வல்லமை, மகிமை என்றென்றைக்கும் தேவரீருக்கே உரியது, ஆமென் என்பதே.

மேலும் ஜெபம் செய்வதில் கவனிக்கவேண்டிய சில குறிப்புக்களையும் எடுத்துக் கூறினார்.

நீங்கள் வருந்திக் கேட்கும் சிநேகிதருக்கு எப்படியும் தயை பாராட்டுகிறீர்கள். நடுராத்திரியில் வீட்டு ஜனம் யாவரும் அயர்ந்த நித்திரையில் இருக்கும்பொழுது வந்து கதவைத்தட்டி, "ஐயா அவசர காரியம்" என்றால் அவன் கெஞ்சுகிறதைப் பார்த்தாவது மனம் இரங்கிக் கேட்டதைக்கொடுக்கிறீர்கள். பரலோகத்தில் உள்ள உங்கள் பிதா உங்களை விட உருக்க இரக்கம் நிறைந்தவர். நன்மைச் சொரூபி ஆகையால் எதுவேண்டுமானாலும் அவரிடம் நம்பிக்கையோடு கேளுங்கள். தேடினால் கிடைக்கும். கதவைத் தட்டுங்கள் திறப்பார்.

எத்தனையோ துர்க்குணங்களுக்கும் ஆகாத சிந்தனைகளுக்கும் இடமானவன் மனிதன். தன் குழந்தைகளுக்கு அவனே உசிதமான பதார்த்தங்கள் தேடி அன்புடன் ஊட்டி

ஞல், தேவபிதா தம்மிடம் வேண்டுதல் செய்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவி கொடுப்பது எவ்வளவு நிச்சயம் என்ருர்.

---

## 45-ம் அத்தியாயம்.

### நிமிரக்கூடாத கூனி சொஸ்தமானது.

ஸ்ரீ இயேசு பஹவான் ஒரு நாள் ஒரு ஜெப ஆலயத்தில் பிரவேசித்து அங்கே பிரசங்கம் நடத்திக்கொண்டு இருக்கும்பொழுது அவருக்கு முன்ஞல் ஒரு கூனி உட்கார்ந்திருந்தாள். அவளைப் பதினெட்டு வருஷ காலமாய் ஒரு ஆவி பிடித்திருந்ததால் சற்றேனும் நிமிரக் கூடாதவளாய் இருந்தாள். பஹவான் மனது உருகி அவளை அழைத்து அவள் மேல் கை வைத்து, "சுகம் பெறுவாயாக" என்ருர். அவள் உடனே நிமிர்ந்து நேராய் நின்று கடவுளைப் போற்றிஞள். அன்று ஓய்வு நாள்.

ஜெப ஆலயத்தலைவன் மகா நீதிமாஞய் காணப்பட விரும்பி, ஜனங்களை அதட்டி, இப்படிக் கட்டாயமாய் ஓய்வு நாளை அசட்டை பண்ணி வேலை செய்வானேன். ஆறுநாட்களும் வந்து குணமாகக்கூடாதா" என்ருன்.

பஹவான் அவனுடைய மாயத்தை அறிந்து அவனை நோக்கி, "அப்பா புண்ணிய சீலா, அவசரப்படாதே; ஓய்வு நாளில் தொழுவத்தில் கட்டிக்கிடக்கும் உன் ஆட்டையாவது மாட்டையாவது அவிழ்த்துத் தண்ணீர் காட்டுகிருபா? காட்டுகிருய். சாத்தான் கட்டிவைத்த ஆபிரகாமின் குமாரத்தியான இவளைக் கட்டவிழ்த்து விடுவது தோஷமாகுமா? பதினெட்டு வருஷமாய் சாத்தான் இவளைக் கட்டி வைத்திருந்தானே" என்ருர்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட விரோதிகள் வெட்கமடைந்தார்கள். மற்றவர்கள் சந்தோஷித்தார்கள்.

---

## 46-ம் அத்தியாயம்.

### பிதாவின் மாருத அன்பு. கெட்டகுமாரன் முதலிய மூன்று உவமைகள்.

ஸ்ரீ இயேசு பஹவானைத் தேடி வந்து ஆயம் வாங்குகிறவர்களும் பாவிகள் என்ற பட்டப்பெயர் வாங்கினவர்களும் கூடிப் போதனை கேட்டார்கள். பரிசேயர் வேதபாரகர் அதைக் கவனித்து, இவரும் ஒரு குருவா? நல்லார்பொல்லார் என்ற பேதமில்லாமல் யார் வந்தாலும் சேர்த்துக்கொள்ளுகிருர். பாவிகள் ஆயக்காரர்மேல் இத்தனை பிரியமா!" என்பதுபோல் பேசிக்கொண்டார்கள். பஹவான் அதைக் கவனித்து சர்வ சிருஷ்டி நாயகனிடத்தில் எளியார் வலியார் என்ற வேற்றுமை கிடைக்கவே கிடையாது என்பதை உணர்த்தும்படி மூன்று உவமைகள் கூறினுர்.

(1) இடையன் ஒருவனுக்கு நூறு ஆடுகள் இருந்தன. ஒரு நாள் மாலை நேரம் கணக்குப் பார்த்தபோது ஒரு ஆடு குறைந்தது. அவன் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் காட்டில் தனியாய் விட்டு காணுமற்போன ஆட்டை மேடு பள்ளம் புதர் எல்லாம் தேடிக் கொண்டுவந்து மந்தையில் சேர்த்து, கண்ட சிநேகிதரிடமெல்லாம் சொல்லி மகிழ்ந்தான். அவ்விதமே சிருஷ்டி கர்த்தாவுக்குக் கெட்டுப்போன பாவி ஒருவன் சீர்ப்பட்டு நீதிமான் ஆவது மிகுந்த சந்தோஷம். பரலோக ராஜ்யத்தில் தூதர்கள் யாவரும் அதற்காக மிகவும் ஆநந்தம் அடைவார்கள். மனந்திரும்பிக் குணப்

பட அவசியமில்லாத தொண்ணூற்றென்பது நீதிமான்களை விட சீர் திருத்தமடைகிற ஒரே பாவியைக் குறித்து அவ்வளவு சந்தோஷப்படுகிறார்.

இரண்டாவது, பத்து வெள்ளிக்காசு வைத்திருந்த பெண் ஒருத்தி அதில் ஒன்று காணமல் போனால் எப்படித் தேடுவாள்! கண்டபின்பு என்ன சந்தோஷம்! தன் தோழிகள் அயல் வீட்டார் யாவருக்கும் காசு காணமற் போனதையும், தான் தேடிக் கண்டு எடுத்ததையும் விவரமாய்ச் சொல்லி மகிழ்வடைவாள். கையில் பத்திரமாய் இருக்கிற ஒன்பது காசை அவள் நினைக்கிறதேயில்லை. அவ்விதமே கெட்டுத் தீய வழியில் அலைந்த பாவி சீரடைவது தெய்வ பிதாவுக்கும் பரலோக தூதருக்கும் அளவற்ற சந்தோஷமுண்டாகும்.

பகவான் இக்கருத்தை விளக்கும்படி சொன்ன மூன்றுவது உவமானத்தைக் கெட்ட குமாரன் உவமை என்பது வழக்கம். அதாவது:—

மஹா பிரபு ஒருவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களில் இளையவன் உல்லாசப்பிரியன். ஒரு நாள் அவன் பிதாவிடம் போய், அப்பா, ஆஸ்தியில் என் பங்கை இன்றைக்கே பிரித்துத் தரவேண்டும் என்று கேட்டான். அன்புள்ள பிதாவின் உள்ளம் இதைக்கேட்டு நைந்து உருகின போதிலும், மகன் பிரியத்துக்கு இணங்கி உட்கார்ந்து கணக்குப்பார்த்து அவன் பங்கைக் கொடுத்து விட்டார்.

பாகம் வாங்கின மகன் தனக்குண்டான சகலசம்பத்தையும் சேர்த்துக்கொண்டு தூரதேசம் போய்ச் சேர்ந்தான். அங்கே தன் புத்திக்கு ஏற்ற தகாத சிநேகிதர் பலரைச் சேர்த்து, கைப்பொருள் யாவும் அதிதுரிதமாய்ச் செலவிட்டு வறிஞன் ஆனான். தேசத்தில் கொடிய பஞ்சம் வந்தது. சிநேகி

தர் யாவரும் இவனை விட்டு ஓடிப்போனார்கள். அவனை யார் என்று கேட்பார் இல்லை.

ஐயோ பாவம். என்ன செய்வான். கூலிவேலையும் கிடைப்பது அரிதாயிற்று. வேலை கிடைத்தாலும் கூலி கிடைக்கவில்லை. ஒரு வன்கண்ணனிடம் பன்றி மேய்க்கப் போய் அமர்ந்தான். பன்றிகள் உணவாகிய காட்டுக்காயும் தவிடும் தின்று பசியால் வருந்தி, உடையில்லாமல் கந்தல் தரித்துக் குளிரில் சிறுமைப் படுங்காலம் வந்தது. அப்போது அவனுக்குத் தன் பிதாவின் பெருந்தகை ஞாபகம் வந்தது. அவருடைய சமுகத்தில் வேலையாட்கள் உண்டு, உடுத்தி மனரம்மியமாய் வேலை செய்தார்கள். தானோ தன்னந்தனியாய் நின்று வாடினான். "என் பிதா என்னைப் பிள்ளை என்று சொல்ல எனக்கு யோக்கியதை இல்லை. அவரைப் பாதம் பணிந்து மன்னிப்புக்கேட்டு கூலியாளாய்ச் சேர்ந்து கொள்வேன்" என்று சொல்லிப் புறப்பட்டு வீட்டை நோக்கிக் கடுக நடந்தான்.

போன பையன் திரும்பிவரானா என்ற காதலுடன் எட்டிப்பார்த்து நின்ற பிரபு, கந்தல் கோலமாய், கால்கள் தள்ளாடித் தலை இரங்கவைத்து நடந்துவரும் மகனைப்பார்த்து விரைந்து ஓடி, அவனை இருகக் கட்டி, முத்தமிட்டு, தழுவி, ஆநந்தக்கண்ணீர் ஆறாய்ப் பெருக, மகனைப் பார்த்து நின்றார்.

மகன் பிதாவை வணங்கி, "என் அப்பா, நான் உமது கல்யாண குணங்களை அறியாத பெருந்தோஷி. கடவுளுக்கு விரோதமாகவும் தேவரீருக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன். உம்முடைய பிள்ளை என்று சொல்லப் பாத்திரன் அல்ல. என்னை ஒரு கூலியாளாக ஏற்றுக்கொள்ளும்" என்றான்.

பிதா உள்ளம் பொங்கி, தமது ஏவலாளரை அழைத்து, "என் பிள்ளையாகிய காணமற்போன சிறுவன் வந்துவிட்டான். நல்ல வஸ்திரங்களையும் பொன் ஆபரணங்களையும் கொண்டு வாருங்கள். கழுத்துக்குப் பெரிய சரப்பளியும், விரலுக்கு மோதிரங்களையும் கொண்டுவாருங்கள். விருந்தை அதிசீக்கிரம் தயார் பண்ணுங்கள். வாத்தியக்காரரை வரச்சொல்லி அனுப்புங்கள்" என்று விரைந்து கட்டளை கொடுத்தார்.

மாலையில் வீட்டில் எல்லாரும் விருந்து உண்டு சந்தோஷமாயிருக்கையில், பிதா காணமற்போன மகனைக் கண்குளிரக் கண்டு, ஏக்கம் நீங்கி இருக்கும் தருணத்தில், மூத்தகுமாரன் வயலில் இருந்து வந்து தனது கிரகத்தில் நடக்கும் விருந்தையும் வாத்திய முழக்கத்தையும் பார்த்து, திகைத்து நின்றான். பின்பு காரணம் இன்னதென்று தெரிந்தபின் அவன் முகம் வேறுபட்டு வாடினது.

"ஆஹா, என் பிதா சத்தியமே உருவெடுத்தவர் என்று இதுவரை நம்பியிருந்தேனே. கெட்டலைந்து திரிந்து ஆஸ்தியை அழித்துவந்த மகனுக்குக் காட்டும் பேரன்பு என்னை வருத்துகிறது. என் வாசலில் நில்லாதே என்று அவனுக்குச் சொல்லவேண்டியது. நான் அவரே கதி என்று இருந்து அவர் கட்டளையாவும் செய்கிறேன்; எனக்கு இம்மாதிரியில் பாதி கூட நடக்கவில்லை" என்று சொல்லி வெளியே நின்றான். வீட்டுக்குள் போக மனம் சம்மதிக்கவில்லை. இதை அறிந்த பிதா வெளியே வந்து ஆர்வமொழி பலதும் கூறி, "அப்பன் உனக்கு என்ன குறையடா, என்னுடையது எல்லாம் உன்னுடையதே; தம்பி காணமற் போனவன் சாகாமல் திரும்பி வந்தானே. நாம் சந்தோஷிக்க வேண்டாமா?" என்று சொல்லி சமாதானப் படுத்தினர் என்று சொன்னர்.

# 47-ம் அத்தியாயம்.

## மரித்த லாசருவை பஹவான் உயிரோடு எழுப்பினது.

ஸ்ரீ இயேசு பஹவானும் சீஷரும் யூதேயா நாடு விட்டு அகன்று யோர்தான் நதிக்கரையில் தங்கியிருக்கும் போது எருசலேமுக்குச் சமீபத்தில் இருந்த பெத்தானியா கிராமத்திலிருந்து அவருக்கு ஒரு செய்தி வந்தது. அதாவது, பெத்தானியாவில் அவர் மிகவும் நேசித்த லாசரு என்பவன் கொடிய நோவினால் வருந்தினான் என்பதே.

சுவாமி உடனே போகவில்லை. லாசருவும் மரித்துப் போனான். அவர் இரண்டு நாள் தங்கி, லாசருவின் வியாதி தெய்வ மகிமை வெளிப்பட ஏதுவாய் இருக்கும் என்று சீஷருக்குச் சொன்னார். சீஷருக்கு, அவர் யூதேயாவுக்கு மறுபடி போகவா என்ற விசாரம் பெரிதாயிருந்தது. யூதர் அவரைக் கல்லெறிந்து கொல்லவும் கட்டிப்பிடித்து ஹிம்சை செய்யவும் ஆயத்தமாய் இருக்கிறாரே, எப்படி அங்கே போவது என்று பயந்தார்கள்.

சுவாமி அவர்களிடம், "லாசரு நித்திரையாய் இருக்கிறான்: நான் போய் எழுப்புவேன்" என்றார். அவர்கள் "ஐயனே, நித்திரை செய்கிறவன் எழுந்திருப்பானே" என்றார்கள்.

அவர், "லாசரு மரித்துப்போனான். வாருங்கள் போவோம்" என்றார்.

தோமா என்ற சீஷன், "வாருங்கள். போய் எல்லாரும் ஏகமாய் சாகலாம் என்றான். அவனுடைய திகில் அவ்வளவு பெரிதாய் இருந்தது. அவர் பெத்தானியா போய்ச் சேருவதற்குள் லாசருவை நல்லடக்கம் பண்ணிக் கல்லறையில்

வைத்து நாலு நாளாகிவிட்டது. பெத்தானியா எருசலேமி லிருந்து இரண்டு மைல். எருசலேம் யூதர் பலர் துக்கம் விசாரிக்க மரியாள் வீட்டுக்கு வந்திருந்தார்கள்.

பஹவான் இதோ வருகிறுர் என்ற செய்திகேட்டு மார்த்தாள் அவருக்கு எதிர்கொண்டு போனுள். மரியாள் வீட்டில் இருந்தாள்.

மார்த்தாள் சுவாமியை வணங்கி, "என் அப்பா, தேவரீர் இங்கே இருந்தால் என் சகோதரன் மரித்திருக்கமாட்டானே. இப்போது உயிரோடு சுகமாய் இருப்பான். என்ருலும் என் ஆண்டவன் கேட்பது எதுவானுலும் பிதா தருவார்" என்ருள்.

சுவாமி, "பயப்படாதே, உன் சகோதரன் உயிரோடு வருவான்" என்ருர்.

மார்த்தாள், "பெருமானே, உலகத்தின் கடைசி நாளில் எல்லாரும் எழுந்திருக்கும்போது அவனும் எழுந்திருப்பான், அடியாள் அறிவேன்" என்ருள்.

சுவாமி, "நானே ஜீவனும் ஜீவனைக் கொடுப்பவருமாய் இருக்கிறேன். என்னிடம் விசுவாசம் வைத்தவன் மரித்தும் பிழைப்பான், உயிரோடு இருந்து என்னை விசுவாசிக்கிறவன் மரணத்தைக் காணமாட்டான். இதை நீ உறுதியாய் நம்புகிருயா?" என்ருர்.

மார்த்தாள் "எம்பெருமானே, தேவரீர் பூலோகத்தை ஈடேற்ற அவதரித்த தெய்வ திருக்குமாரன். இரக்ஷண்ய மூர்த்தி, கிறிஸ்துபிரான். இதை நான் உறுதியாய் நம்புகிறேன்" என்ருள்.

பின்பு அவள் வீட்டுக்கு ஓடித் தன் தங்கை மேரியை ரகசியமாய் அழைத்து "நமது குரு வந்திருக்கிருர். உன்னை

அழைத்துவரச் சொன்னார்'' என்றாள். மரியாள் அவசரமாய் அவரைப் பார்க்கப் புறப்பட்டாள். வீட்டில் அவளோடு இருந்த ஜனங்கள் அவள் கல்லறைக்குப் போய் புலம்பி அழப் போகிறாள் என்று எண்ணி அவளோடு போனார்கள். சுவாமி இன்னும் ஊருக்கு வெளியே யிருந்தார்.

மரியாள் அவர் பாதத்தில் விழுந்து, "என் அப்பனே, தேவரீர் இங்கே யிருந்தீரானால் எங்களுக்கு இந்த விக்கினம் நேரிடாதே'' என்று அழுதாள். எல்லாரும் அழுதார்கள். பஹவான் தாமும் கலங்கிக் கண்ணீர்விட்டார். பின்பு அவனை வைத்த இடத்திற்குப்போய் கல்லறையைப் பார்த்தார்.

கூடநின்ற ஜனங்கள் "இவர் லாசருவை எவ்வளவாய் நேசித்தார்! அவனை உயிரோடு எழுப்ப சுவாமியால் கூடும். குருடன் இவர் கிருபையால் பிரகாசமான கண் பெறவில்லையா,'' என்று பேசிக்கொண்டார்கள். அவர் மறுபடியும் கலங்கினார். லாசருவை அடக்கம் செய்த கல்லறை ஒரு குகை. பெரிய கல் ஒன்று வைத்து அதை அடைத்து இருந்தது. சுவாமி, "அந்தக் கல்லை எடுத்துப் போடுங்கள்'' என்றார்.

மார்த்தாள், "சுவாமி, நாலு நாளாயிற்றே, நாறுமே !!'' என்றாள்.

சுவாமி "நீ உறுதியாய் நம்பினால் தெய்வீக மகிமையைக் காண்பாய்'' என்றார். கல்லைப்புறட்டித் தள்ளினபின்பு, கண்களை வானத்துக்கு ஏறெடுத்து, "பிதாவே, தேவரீர் எப்பொழுதும் என் விண்ணப்பம் கேட்கிறீர், நான் உம்மைத் துதிக்கிறேன்'' என்று இறைவனைத் துதிசெய்து, "லாசருவே, வா வெளியே என்றார். லாசரு பிரேத அலங்காரத்தில் சுற்றிக் கட்டின சீலைகளோடு எழுந்து வெளியே வந்தான். சுவாமி,

அவற்றை நீக்கி விடுவிக்கும்படி கட்டளையிட்டார். அப்படியே செய்தார்கள்.

லாசரு சுகமாய் வீட்டுக்குப்போய் சேர்ந்ததைக் கண்ட யூதர் அநேகர் அவர் பேரில் விசுவாசம் வைத்தார்கள். பரிசேயருக்கும் இச்செய்தி அதிதீவிரமாய் எட்டினது. அவர்கள் ஆலோசனை சங்கத்தைக் கூடிவரச்செய்து அவருக்கு என்ன தீங்கு செய்யலாம், எப்படி அவரைக் கொல்லலாம் என்ற நோக்கமாய் ஆலோசனை பண்ணினார்கள். அவரைக் கொல்லா விட்டால் ரோமர் வந்து தங்களை அழித்துப்போடுவார்கள் என்று தந்திரமாய்ப் பேசினார்கள். அவ்வருஷத்துப் பிரதான ஆசாரியன் எழுந்து, "எல்லா ஜனத்திற்காக ஒருவர் மரிப்பது நல்லது தானே" என்று சொன்னான்.

பஹவான் அவர்கள் தீவினைக்கு விலகி மறுபடியும் வனாந்தரத்திற்குச் சமீபமாயிருந்த எப்ராயீம் என்ற இடத்திற்குப் போய்த் தமது சீஷருடன் தங்கினார்.

---

## 48-ம் அத்தியாயம்.

### ஸ்ரீ இயேசு பஹவான் கடைசியாய் எருசலேமுக்குப்போன பிரயாணம்-பத்து குஷ்டரோகிகள் சுகமானது.

யூத பிரதானிகளின் பகைக்கு விலகி எப்ராயீம் என்ற இடத்தில் சிறிது காலம் வாசம் செய்த பின்பு, பஹவான் எருசலேமுக்குப் போகப் பிரயாணப்பட்டார். அவர் ஒரு கிராமத்தைக் கடந்து செல்லும்போது, யூத முறைப்படி வசித்த பத்துக் குஷ்டரோகிகள் கிராமத்தின் வெளியே காணப்பட்டார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட சட்டப்படி தூரத்தில் நின்று, "அப்பனே, ஸ்ரீ இயேசுநாதா, எங்களுக்கு

இரங்கும்'' என்று கூவினார்கள். பெருமான் அவர்களை அழைத்து "குஷ்டரோகிகள் சுகமடைந்தபின்பு செய்யவேண்டிய சுத்திகரிப்பு நியமங்களை நிறைவேற்றும்படி ஆசாரியனிடம் போங்கள்'' என்றார். அவர்கள் புறப்பட்டுப் போகும் போதே, என்ன சுகமாகிவிட்டோமா, என்று பார்த்துக் கொண்டே போனார்கள். சுகமடைந்ததாகக் கண்டவுடன் ஒருவன் தன்மேல் கிருபைகூர்ந்த அருளாழியிடம்போய் பாதம் பணிவேன் என்று அவரை நோக்கி ஓடிவந்து திருப் பாதம் பணிந்து நின்றான். அவன் சமாரிய ஜாதியான். உயர் குலத்தோரான ஒன்பது யூதரும் குணமானதே போதுமென்று எட்டி நடந்து ஊர்போய்ச் சேர்ந்தார்கள்.

பகவான் அவன் முகம் நோக்கி, "ஆஹா, சுகம்பெற்ற நோயாளிகள் பத்துப்பேர் அல்லவா! கடவுளை மகிமைப் படுத்த இந்த அந்நியனுக்குமட்டும் ஞானம் இருந்தது என்று சொல்லி, "உன் விசுவாசம் உன்னை ரக்ஷித்தது; மகனே, போக லாம்'' என்று ஆசீர்வதித்து அவனை அனுப்பினார்.

---

## 49-ம் அத்தியாயம்.

### ஜெபம்—பரிசேயனும் ஆயக்காரனும்.

பகவானை அடிக்கடி சூழ்ந்து நின்ற யூதர்களில் அநேகர் தாங்கள் மகா திவ்ய குணசீலர் என்றும் மற்றவர்கள் தாழ்வானவர்கள் என்றும் கவனித்தார்கள். அவர்கள் மதிப்பு தப்பிதம் என்பதை உணர்த்தும்படி அவர் ஒரு திருஷ்டாந்தம் எடுத்துக் கூறினார்.

இரண்டு மனிதர் பிரார்த்தனை பண்ணும்படி தேவாலயத் திற்குப் போனார்கள். அவர்களில் ஒருவன் ஆயம் (வரி)

வாங்குகிற வேலையாள். மற்றவன் பரிசேயர் இனத்தைச் சேர்ந்தவன்.

பரிசேயன் வணங்கி நின்று "மஹா தேவா, நான் தேவரீருக்கு ஆகாத பாவங்கள் ஒன்றுமே செய்கிறதில்லை. வழி பறிக்காரர், திருடர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய பாவிகள் போலும் இங்கே நிற்கிற இந்த ஆயக்காரனைப்போலவும் நான் சண்டாள ஜீவியம் செய்யாமல் சுத்தனாய் இருப்பதால் உம்மைப் போற்றுகிறேன். என் சம்பாத்தியம் சகலத்திலும் பத்தில் ஒரு பங்கு (தசம பாகம்) காணிக்கை கண்டிப்பாய்ச் செலுத்துகிறேன்" என்று சொன்னான்.

ஆயக்காரன் நின்று தன் பாவங்களைத் தொகை பார்த்து வருந்தி, வெட்கிக் குனிந்தவனாய் மார்பில் அடித்து "என் அப்பா, இறைவா, நிர்மலனே, பாவி சண்டாளனாகிய என் மேல் கிருபை கூர் ஐயா" என்று விண்ணப்பம் பண்ணினான். பரிசேயன் அல்ல, ஆயக்காரனே பாவநிவர்த்தி பெற்றுப் புனிதனாகித் திரும்பினான்.

தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

---

## 50-ம் அத்தியாயம்.

### ஸ்ரீ இயேசு பஹவான் குழந்தைகளை ஆசீர்வதித்தது.

ஒரு நாள் தாய்மார் ஒரு கூட்டமாய்ச் சேர்ந்து பஹவானைப் பார்க்கவும் அவருடைய ஆசீர்வாதம் பெறவும் தங்கள் குழந்தைகளோடு வந்தார்கள். சுவாமி வேலை செய்து களைப் படைந்தவராய் இருந்தார். சீஷர்கள் இந்த மனுஷிகள் அவரை வருத்தப்படுத்துவது எதற்காக என்று எண்ணி மாத

ளைப் பார்த்து அதட்டினார்கள். சுவாமி அதைக் கவனித்து விசனமடைந்தார். "என் சிஷரே, குழந்தைகளைத் தாய்மார் கொண்டுவரட்டும், தடை செய்ய வேண்டாம், பரலோக ராஜ்யம் குழந்தை சுபாவமுள்ளவர்கள் அனுபவிக்கவேண்டியது" என்றார். பின்பு குழந்தைகளை எடுத்து அணைத்துக்கொண்டு பாராட்டி சீராட்டி ஆசீர்வதித்தார்.

---

## 51-ம் அத்தியாயம்.

### ஐசுவரியவான்களும் கடவுளுடைய ராஜ்யமும்.

ஒரு நாள் இளம்பிராயமுள்ள அதிகாரி ஒருவன் சுவாமியிடம் வந்து சேவித்து, "ஐயனே, அடியேன் சாகா ஜீவன் பெற்றுக்கொள்ளும்படி நான் செய்ய வேண்டியது என்ன?" என்று விநயமாய்க் கேட்டான்.

சுவாமி, "நன்மைசெய்: பயன்படாத ஜீவியம் செய்ய வேண்டாம். நித்திய ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கடவுள் விளம்பிய கற்பனைகளைக் கைக்கொண்டு நட" என்றார்.

அவன், "சுவாமி, எந்தக் கற்பனைகள்?" என்றான்.

சுவாமி, "கொலை செய்யாதே, களவு செய்யாதே, விபசாரம் பண்ணாதே, பொய் சாட்சி சொல்லாதே, உன் தந்தை தாயைக் கனம்பண்ணு, உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பவைகள் தான்" என்றார்.

வாலிபன், "சுவாமி, என் சிறுவயது முதல் இந்தப் பிரமாணங்களைக் கைக்கொண்டு வருகிறேன். இன்னும் என்மீது என்ன குறை?" என்றான்.

பஹவான் அவன்மீது அன்புகூர்ந்து, "அப்பா நீ தரும் சுபாவத்தில் பரிபூரணமடைய விரும்பினால் உன் ஆஸ்தியி லிருந்து எடுத்து எளியார் துயரம் நீக்கு. அதன்பின்பு, நீதியினிமித்தம் வரக்கூடிய சகல துன்பங்களையும் சகித்துக் கொண்டு என் சிஷனாய் நடந்துகொள். அப்பொழுது உன் பொக்கிஷம் பரத்தில் மிகுதியாய் இருக்கும்" என்றார்.

அவன் ஆஸ்தி பொக்கிஷம் நிறைந்த சீமான். ஐயோ என் பொக்கிஷத்திலிருந்து ஏழைகளுக்குச் செலவிட்டு நானும் ஏழையாகவா! போதும், போதும், பரலோக வாழ்வு. இந்த உலகத்திலாவது கொஞ்சம் இன்பம் அனுபவிக்கிறேன், அப்புறம் பார்க்கலாம், என்பதாய் தியானித்துக்கொண்டே திரும்பிப்பாராமல் விரைந்துபோய் மறைந்தான்.

சுவாமி சிஷரைப் பார்த்து, "திரவியம் மனுஷனின் காலுக் குப் பெரிய கட்டை. திரவிய சம்பன்னர் பரலோக வாழ்வில் பிரவேசிப்பது அரிது, அரிது, அரிது. ஒட்டகமானது ஊசி என்று பெயர் கொண்ட திட்டி வாசலில் நுழைவதும் செல் வம் மிகுந்தவர்கள் பரலோக பாக்கியம் பெருவதும் ஒன்றே" என்றார்.

சிஷர், "ஐயனே, அப்படியானால் இரக்ஷிக்கப்படுகிறவர் கள்தான் யார்?" என்றார்கள்.

சுவாமி, "மனுஷனால் ஆகாதகாரியம் கடவுள் கிருபை யால் கைகூடும். அவரால் ஆகாதது ஒன்றும் இல்லை" என்றார்.

பேதுரு பஹவானை நோக்கி, "சுவாமி, நாங்கள் வீடு சொத்து சுகம் இன ஜனம் எல்லாம் விட்டு, தேவரீரைத் தஞ்ச மாகக் கொண்டோம். எங்களுக்கு வரும் பலன் என்ன?" என்றான்.

சுவாமி, "மறுஜென்ம காலத்தில், அவதார திருக்குமாரன் மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்போது, என்னைப் பின் சென்றவர்களாகிய நீங்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களை நியாயம் தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களில் வீற்றிருப்பீர்கள். இது நிச்சயம். என்மேலுள்ள பேரன்பினால் வீடு, ஆஸ்தி, தாய் தகப்பன், மனை மக்கள், சகோதரர் இவர்களை விட்டுப்பிரிந்து துன்பங்களைச் சகித்தவன் அப்படி நூறு மடங்கு ஆஸ்தியும் மனுஷர் மக்களும், மறுமையில் நித்திய ஜீவனும் பெறுவான். ஆகிலும் முந்தினோர் பிந்திப்போவார்கள். பிந்தினோர் பலர் முந்திக் கொள்ளுவார்கள்" என்றார்.

---

## 52-ம் அத்தியாயம்.

### தோட்ட வேலைக்காரர்-உவமை.

### பகவான் தமக்கு வரப்போகிற பாடுகளைச் சீஷருக்கு அறிவித்தது.

சுவாமி எருசலேமுக்குப் புறப்பட்டு எல்லாருக்கும் முந்தி நடந்து போனார். சீஷர் யூதர் நிமித்தம் எருசலேமுக்குப்போகப் பயந்து அவர் பின்னால் வருத்தத்தோடு நடந்தார்கள். சுவாமி அவர்களைத் தம்பால் அழைத்து, "என் அன்பான சீஷரே, எருசலேமுக்குப் போகிறோம். திரு அவதாரகுமாரன் அங்கேயுள்ள வேதபாரகர், பரிசேயர், பிரதான ஆசாரியரான சத்துருக்கள் கையில் கஸ்திப்படப் போகிறார். அவரைக்குறித்து முனிவர் கூறின முன்னுரைகள் எல்லாம் நிறைவேற்றுவார்கள். அவரைக் குற்றவாளியாக்கி, விசாரணை செய்து, மரணத்தீர்ப்புக் கொடுத்து, புறஜாதியார் வசம் ஒப்புக்

கொடுப்பார்கள். ரோம சேவகர் அவரைப் பரியாசம் பண்ணி, வார் சவுக்கால் அடித்து, நிந்தனை பண்ணி, துப்பி வருத்தப் படுத்துவார்கள். கடைசியில் கொலை செய்வார்கள்.

ஆகிலும் அவர் மூன்றாவது நாள் உயிரோடு எழுந்திருப் பார் என்றார்.

இவ்வளவு விவரமாய் சொன்னபோதிலும், சீஷர், சுவாமி என்ன சொன்னார் என்று அறிந்து கொள்ளவில்லை.

அவர்கள் எரிகோ என்னும் கிராமத்தைக் கடந்துபோ கையில் திரள் ஜனக்கூட்டம் அவரோடு போனது. அங்கே வழி ஓரத்தில் ஒரு குருடன் பிச்சை வாங்கிக்கொண்டு இருந் தான். சுவாமி வரும் சந்தடியை அவன் கவனித்து, ஸ்ரீஇயேசு பஹவான் அங்கே நடக்கிறார் என்றமட்டும் விசாரித்து அறிந்து கொண்டான். இவன், "ஸ்ரீஇயேசு ஐயனே, தாவீது அரசன் மைந்தனே, எனக்கு இரங்கும்" என்று கூவினான். பக்கத்தில் நின்றவர்கள் "அடே, பேசாதே" என்று அதட்டினார்கள். அவனோ, 'எனக்கு இரங்கும் அப்பனே' என்று அதிகமாய் உரத்துக் கூவினான்.

பஹவான் நின்று அவனை அழைத்துவரச் சொன்னார். பர்த்திமேயு அதைக் கேட்டவுடன் தன்மேல் போட்டிருந்த வேஷ்டியையும் எறிந்துவிட்டு, "அப்பனே அபயம்" என்று விரைந்துபோனான்.

சுவாமி அவனைப் பார்த்து, ஏனப்பா கூப்பிடுகிறாய்? உனக்கு என்ன வேண்டும்?" என்றார்.

அவன், "சுவாமி, நான் பார்க்க வேண்டும். குருட்டு கண்ணாய் இருக்கிறேன், நாதா" என்றான்.

சுவாமி, "அவன் கண்ணைத்தொட்டு உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. கவலையில்லாமல் போய் வா" என்றார்.

அவன் உடனே பார்வை யடைந்தான். அவன் சுவாமியை வணங்கி அவரோடு சேர்ந்து நடந்தான்.

---

## 53-ம் அத்தியாயம்.

### சகேயு என்பவனுக்குக் கிடைத்த தரிசனம்.

**சு**வாமி எரிகோவைக் கடந்து போனார். அவரோடு கூட்டமான ஜனங்கள் போனார்கள். அவ்வூரில் வரிவசூல் செய்கிற உத்தியோகஸ்தன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் சகேயு. அவன் உருவத்தில் குள்ளன். ஸ்ரீ இயேசுநாதரை எவ்விதத்திலும் கண்ணால் காணவேண்டும் என்ற பேராவல் கொண்டவன். அவரோடு நடந்த ஜனக் கூட்டம் பெருத்த சேனையாய் இருந்தபடியால் அவன் நமக்கேது பார்க்கவழி! வேறு உபாயம் இல்லை, என்று எண்ணி விரைவாய் நடந்துபோய் வழியில் இருந்த காட்டு அத்திமரத்தில் ஏறிப் பதிவாய் உட்கார்ந்து கொண்டான். கருணையாழி, எல்லாம் அறிந்த மேலோன், அத்திமரம் வரைக்கும் வந்தபோது நின்று அண்ணாந்து பார்த்து, "சகேயுவே வா: இன்று உன் வீட்டில் தங்கவேண்டும், இடங்கொடு," என்றார்.

சகேயு அளவுக்கடங்காத மகிழ்வுடன் இறங்கி, அவரைப் பணிந்து தன் வீட்டுக்கு அழைத்துப் போனான். சகேயு வீட்டில் அன்று விருந்து நடந்தது.

பஹுவானோடு இருந்த ஜனங்கள் அவர் சகேயு வீட்டுக்குள் போகும் தன்மையைப் பார்த்து வருத்தமடைந்தார்கள். என்ன! என்ன!! இவர்தானா இரக்ஷண்யமூர்த்தி!!! பாவியான சகேயு வீட்டுக்குள்போய் அன்பு பாராட்டுகிறார்! இனிமேல் சாப்பிடாமல் வருவாரா? இதென்ன கோரணி, என்று பலவாறு பேசினார்கள்.

சகேயு பஹவான்முன் வந்து, "பெருமானே, என் ஆஸ்திகளில் சரிபாதி தருமஞ் செய்வேன். நான் ஏதாகிலும் அநியாயமாய் எவரிடத்திலாகிலும் வாங்கினதுண்டாயின் அதற்கு நாலு மடங்கு அதிகமாக திருப்பிக் கொடுக்கிறேன்" என்று தனது புதிய தீர்மானத்தை அறிக்கையிட்டான்.

சுவாமி, "இன்றுதானே இவ்வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது. இவனும் ஆபிரகாமுக்குப் பிள்ளையாய் இருக்கிறான். இழந்துபோனதைத் தேடி இரட்சிக்கவே அவதாரக் கடவுள் வந்திருக்கிறார்" என்றார்.

---

## 54-ம் அத்தியாயம்.

### பெத்தானியாவில் நடந்த விருந்து. மரியாள் சுவாமிக்குத் தைலம் பூசினது.

ஸ்ரீ இயேசு பெருமான் எருசலேமில் பிரவேசிக்க முந்தின நாள் பெத்தானியா கிராமத்தில் இரவு செலவிட்டார். அங்கே சீமோன் எனப் பெயர்கொண்ட ஒரு மனுஷன் அவருக்கு விருந்து பண்ணினான். அவன் ஒரு காலத்தில் குஷ்டரோகத்தினால் வருந்தி பஹவான் கருணையால் சுகம் பெற்றவன். விருந்து வீட்டில் சுவாமியுடைய நண்பரான மார்த்தாள் மரியாள் லாசரு வந்திருந்தார்கள். லாசருவைக் கண்ணாரக் காண விரும்பின யூதர் பலர் அங்கே யிருந்தார்கள். அவர்களில் பெரும்பாலார் பஹவான்பேரில் விசுவாசம் வைத்தார்கள்.

தன் வழக்கப்படி மார்த்தாள் வீட்டுவேலை யாவும் விரைந்து செய்தாள். மரியாள் தன் வழக்கம்போல் சுவாமிக்குப் பூஜை செய்யவும், அவர் வார்த்தையைக் கேட்கவும் கருத்தா

யிருந்தாள். அவள் நளதம் என்னும் வாசனைத் தைலம் ஒரு குப்பியில் கொண்டு வந்து, அதை உடைத்து சிரசில் அபிஷேகம் செய்தாள். தைலவாசனை வீடு முழுவதும் பரிமளித்தது.

சீஷரில் ஒருவன் விசனித்து, "இது யார் செய்த வேலை? முந்நூறு பணம் பெருமான தைலத்தை இப்படிச் சிந்தலாமா? இதை விற்றுக் காணிக்கை செலுத்தினால் எத்தனை தரித்திரருக்கு உதவும்!" என்றான். பணப்பை சுமந்து, அதில் ஆதாயம் தேடுகிற யூதாஸ் சொன்ன வார்த்தை இது.

பகவான் அவனை நோக்கி, "அவளைக் கஷ்டப்படுத்தாதே. அன்பு நிறைந்த ஆராதனை செய்தாள். இப்பூவுலகில் என் சுவிசேஷம் எங்கெங்கே சொல்லப்படுகிறதோ அங்கெல்லாம் அவளுடைய பக்தி விசுவாச பூஜையும் எடுத்துக் கூறப்படும். என் சரீரத்துக்கு நடக்கும் பிரேத அலங்காரத்தை இந்த அபிஷேகம் முன் அறிவிக்கிறது. தரித்திரர் உங்களோடு எப்போதும் இருக்கிறார்கள். நான் இருக்கமுடியாது" என்றார்.

லாசரு நிமித்தமாக ஜனங்கள் அவரிடம் விசுவாசம் வைப்பதைக்கண்ட வேதபாரகர் முதலிய யூத தலைவர் அவரையும் லாசருவையும் கொல்லுவதே சரி என்று யோசனை பண்ணினார்கள். அவர் இருக்கிற இடத்தை அறிந்தவர்கள் அதை அறிவிக்க வேண்டுமென்று கட்டளையிட்டார்கள்.

எருசலேமில் அது பஸ்காப் பண்டிகை காலம். அதற்கு எத்திசையிலுமிருந்து யூதர் வந்து கூடினார்கள். சிலர் சுத்திகரிப்புக்காக நாலு நாளைக்கு முந்தியே வந்தவர். அவர்கள் அவரை எப்போது காண்போம், அவருக்கு எப்படி வந்தனை வழிப்பாடு செய்வது என்று காத்திருந்தார்கள். அவரைப் பெத்தானியாவிலிருந்து அழைத்துவரப் பிள்ளைகளுக்குப் பாட்டுக் கற்பித்து, கையில் பிடிக்கக் குருத்தோலைகள் தயார்

செய்து, பண்டிகையின் ஆரம்பநாள் சனிக்கிழமை இரவு நீங்கி எப்போது விடியுமென்று காத்திருந்தார்கள்.

---

## 55-ம் அத்தியாயம்.

### பஹவான் எருசலேமுக்குப் பவனிபோனது.

அதிகாலையில் ஸ்ரீ இயேசு பஹவான் பெத்தானியாவிலிருந்து எருசலேமுக்குப்போக ஆயத்தப்பட்டார். சீஷர் இரண்டுபேர் சுவாமியுடைய கட்டளைப்படி பெத்பகே என்ற கிராமத்திற்குப் போய் ஒரு கழுதையும் குட்டியும் கண்டு அவைகளைக் கொண்டுவந்து அவைகள் மேல் தங்களுடைய வஸ்திரங்களை விரித்தார்கள். பஹவான் கழுதைமேல் ஏறி எருசலேமுக்குப் போகப் புறப்பட்டார். எருசலேமிலிருந்து திரள் கூட்டம் ஜனங்கள் அவருக்கு எதிர்கொண்டு வந்து தங்கள் வஸ்திரங்களை வழியில் விரித்தார்கள். வேறு பலர் மரக்கிளைகள் தரித்து வழிநெடுகப் பரப்பினார்கள். அவர்கள் குருத்தோலை கையில் பிடித்து, "ஓசன்னா, கடவுளின் நாமத்தினால் வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர். கடவுளின் நாமத்தில் வருகிற நமது பிதாவாகிய தாவீதின் ராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக. உன்னதத்தில் ஓசன்னா" என்று சொல்லி பாடினார்கள். (ஓசன்னா - காத்தருளும்.)

சாதாரண ஜனம், இரக்ஷண்யமூர்த்தி இவரே; நம்மை ரோமர் கையிலிருந்து மீட்டு இரக்ஷிப்பார்; ரோம ராஜாங்கத்தை ஆச்சரியமாய் ஜெயிப்பார் என்று எதிர் பார்த்தார்கள். அவர் லாசருவைக் கல்லறையிலிருந்து வெளியேவரச் செய்ததும், குருடர் குஷ்டரோகிகளைச் சுகமாக்கினதும் ஒவ்வொருவர் நாவிலும் எண்ணத்திலும் இருந்தது. அவர்கள் உரத்தகுர

லாய் ஓசன்னு பாடினது பரிசேயர் முதலான விரோதிகளுக்கு வேதனையாய் இருந்தது. "சுவாமி, நீர் இவர்களை அதட்டும். இவர்கள் கூச்சல் காதைச் செவிடாக்குகிறது" என்றார்கள்.

பகவான் "இவர்கள் பாடாதிருந்தால் இங்கே கிடக்கிற கற்கள் வாய் திறந்து பாடும்" என்றார்.

அவர் நகரை அடுத்து, அதைப் பார்த்தபோது, கண்ணீர் விட்டார். "உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதான வாழ்வைத் தேடுகிறாய் இல்லையே. உன் கண்ணுக்கு அது மறைவாய் இருக்கிறது.

சத்துருக்கள் உன்னைச் சூழ்ந்து முற்றுகை போடுவார்கள். உன் மதிலை இடித்து நாசமாக்குவார்கள். உன் பிள்ளைகளைச் சங்கரிப்பார்கள். ஐயோ அந்த நாள் சமீபமாய் இருக்கிறது" என்றார்.

அவர் நகரத்தில் பிரவேசித்தபோது அங்கே இருந்தவர்கள் ஆச்சரியப்பட்டு, "இவர் யார்?" என்று விசாரித்தார்கள். ஜனங்கள், "இவர் கலிலேயாவில் நாசரேத் ஊரிலிருந்து வந்த தீர்க்கதரிசி" என்றார்கள்.

பகவான் தேவாலயத்துக்குப் போய் அதைச் சுற்றிப் பார்த்து மாலையில் பெத்தானியாவுக்குப் போனார். பரிசேயர் முதலானவர்கள், "உலகமே அவருக்குப் பாதசேவை செய்கிறது. நாம் செய்வது என்ன?" என்று மிகவும் வியாகுலப்பட்டு வருந்தினார்கள்.

## 56-ம் அத்தியாயம்.

### பஹூவான் பாடுகள் அடைந்த வாரம்—திங்கட்கிழமை.

### தேவாலயத்தைச் சுத்திகரித்தது.

ஸ்ரீ இயேசு பெருமான் பெத்தானியாவில் இரவு போக்கி, அதிகாலையில் எருசலேமுக்குப் போனார். அவர் பசியாய் இருந்தார். வழியில் அத்திமரம் ஒன்று சற்றுதூரத்தில் நிறைந்த இலையோடு நிற்கக் கண்டு அதனண்டை போய் பழம் தேடிப் பார்த்தார். பழம் இல்லை. அதனால் அவர், 'மரமே, இனிமேல் ஒருவனும் உன் கனி புசிக்க வேண்டாம்' என்று சொல்லி எருசலேமுக்குப் போய்விட்டார்.

அவர் தேவாலயத்திற்குள் போனபோது அங்கே நின்ற பாலர், "தாவீதின் குமாரனுக்கு உன்னதத்தில் ஓசன்னா" என்று பாடி வாழ்த்தினார்கள். ஆலயமெங்கும் ஆரவாரம்.

குருடர் சப்பாணிகள் முதலிய பலவித வியாதிக்காரர் காத்திருந்து அவரிடம் வந்தார்கள். சுவாமி அவர்களைச் சொஸ்தப் படுத்தினார். பாலர் பாட்டை நிறுத்தாமல் பாடிக் கொண்டிருந்தார்கள். ஜனங்களெல்லோரும் அவரைப் புகழ்ந் தார்கள். நகர் எங்கும் பெரிய ஆரவாரம்.

வேதபாரகர் முதலிய விரோதிகள் பொறாமையால் வருந்தி, "சுவாமி, இவர்களை அதட்டும். பெருங்கூச்சல் போடுகிறார்கள். உமக்கு இது வேண்டுமோ?" என்றார்கள்.

சுவாமி, "ஆம், நான் பிரியமாய்க் கேட்கிறேன். குழந்தைகள் பாலர் வாயினால் துதி உண்டாக்கினீர் என்று வேதவாக்கியம் சொல்லுவதை நீங்கள் வாசித்ததே இல்லையா? இவ்விதம் நடக்குமென்று முன்னமே எழுதியிருக்கிறதே" என்றார்.

சுவாமி தேவாலயத்தில் பல கடைகளையும் நடந்த வியாபாரப் போக்குகளையும் பார்த்தார். சகல கடைகளையும் வெளியே போகும்படி துரத்தி, "என் பிதாவின் வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெப வீடாயிருக்க, நீங்கள் அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்'' என்று சொல்லித் தேவாலயத்தைச் சுத்திகரித்து வியாபாரிகளை அங்கிருந்து ஓட்டினார்.

இவைகளைக் கண்ணுற்ற வேதபாரகர் முதலியோர் கோபம் நிமிஷந்தோறும் அதிகரித்தது. ஜனங்கள் அவர்மேல் அளவு கடந்த பற்றுதலாய் இருந்ததனால் அவர்மேல் கை போட்டுப் பிடிக்கப் பின்வாங்கினார்கள்.

சாயங்காலம் சுவாமி பெத்தானியாவுக்குப் போனார். காலையில் அவர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிருக்கக் கண்ட சீஷர் பிரமிப்படைந்தார்கள். அவர், "நீங்களும் பரிபூரண நம்பிக்கை விசுவாச பக்தியுடன் பிதாவை நோக்கி எது கேட்டாலும் உடனே கிடைக்கும். ஒரு மலையைப் பார்த்து அகன்று சமுத்திரத்தில் விழு என்று சொன்னாலும் அது நடக்கும்'' என்றார்.

---

## 57-ம் அத்தியாயம்.

### ஆலோசனை சங்கத்தாரும் யூதாஸ்காரியோத்தும் செய்த சதி.

ஸ்ரீ இயேசு பகவானைப் பகைத்த பிரதான ஆசாரியர், வேதபாரகர், ஜனத்தின் மூப்பர் முதலிய தலைவர் அக்காலத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் அரண்மனையில் சங்கம் கூடி அவரைப் பிடிக்கவும், குற்றங்கள் ஏற்படுத்தி, விசாரணை செய்து மரண ஆக்கினைத் தீர்ப்பிடவும் ஆலோசனை பண்ணினார்கள்.

சாதாரணமாக ஜனங்கள் எங்கே போனாலும் அவரைச் சூழ்ந்து திரிந்தார்கள். அது பண்டிகைகாலம். எருசலேமில் வந்து கூடியிருந்த பெருந்தொகையான ஜனங்கள் யாவரும் அவர்மேல் மகா பிரியமாய் இருந்தார். சிலர் அத்தியந்த பற்று உள்ளவர்கள். அந்த மாதிரி ஜனக்கூட்டத்தில் அவர் மேல் கைபோட்டுப் பிடித்துத் துன்பப்படுத்த அவர்கள் பொறுக்கமாட்டார்கள். ஒருகால் கலகம் வரலாம்; காலம் பண்டிகை நாட்கள், என்றாலும் அவரைக் கட்டாயம் கொல்ல வேண்டும்; வழிவகை தெரியவில்லையே என்று பகைவர் மயங்கினார்கள்.

பன்னிரண்டு சீஷரில் பணப்பை பத்திரம் பண்ணுகிற யூதாஸ்காரியோத்து என்பவன் இதை அறிந்தான். இவர்களிடம் ஏதோ கொஞ்சம் தொகை சம்பாதிக்கலாம். சுவாமி இவர்கள் கைக்குத் தப்பித்துக்கொள்ள மனதானால் கூடாதவரா! என்று யோசனை பண்ணி சங்கத்தாரிடம் போய், "ஐயன்மீர், நான் இன்று இரவில் அவரைக் காட்டிக் கொடுக்கிறேன், என்ன கொடுக்கிறீர்கள்?" என்று கேட்டான். அவர்கள், 'முப்பது வெள்ளிக்காசு வாங்கிக்கொள்" என்றார்கள். அவன் சம்மதித்து, அவர் ஜெபம் செய்யும் இடம், தனித்து ஜனக்கூட்டத்துக்கு விலகி இருக்கும் நேரம், எல்லாம் திட்டமாய் சொல்லிப் போய்விட்டான்.

பின்பு சுவாமி சன்னிதானம்போய் சீஷர் நடுவில் சேர்ந்து கொண்டான்.

# 58-ம் அத்தியாயம்.

## பெரிய வியாழக்கிழமை I. பஸ்கா

## பஹவான் சீஷருடைய பாதங்களைக் கழுவினது.

## மாயமற்ற தாழ்மையைப் பற்றிய உபதேசம்.

சீஷர்கள் பஹவானிடம் வந்து, "அப்பனே, இன்று இரவு பஸ்கா உணவு சாப்பிடவேண்டுமே. எங்கே தயார் பண்ணச் சித்தம் கொண்டீர்" என்று கேட்டார்கள். சுவாமி, "நகரத்துக்குள் போங்கள். ஒருவன் தண்ணீர்க் குடம் சுமந்து உங்களுக்கு எதிரே வருவான். அவனோடு போய் வீட்டெஜமானிடம் நான் சொன்னதாய்க் கேளுங்கள். அவன் கம்பளம் விரித்த விஸ்தாரமான ஒரு மேல் அறையைக் காட்டுவான். அங்கே தயார் பண்ணுங்கள்" என்றார். அவர் சொன்னபடி கண்டு அங்கே சித்தப்படுத்தி வைத்தார்கள்.

பஸ்காவுக்குப் புளிப்பு இல்லாத அப்பப் பண்டிகை என்று இன்னொரு பெயர் இருந்தது. அந்த நாளில் ஆலயத்தில் மணி அடிக்கும். அப்பொழுதே சகல வீடுகளிலும் புளித்த மாவு அப்பம் முதலியவற்றை அப்புறப் படுத்துவார்கள். பின்பு பஸ்கா ஆட்டுக்குட்டியைத் தேவாலயத்திற்குக் கொண்டுபோய் அடித்து, அதன் இரத்தத்தை ஆசாரியன் பலிபீடத்தின்கீழ் ஊற்றி, அதின் கொழுப்பைப் பலிபீடத்தின்மேல் சுட்டெரிப்பான். ஒரு ஆட்டுக்குட்டி சாப்பிட, சமயம்போல், பத்து முதல் இருபது வரை எத்தனைபேரானும் சேர்ந்து கொள்வார்கள்: ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை நெருப்பில் பொரிப்பார்கள். குடும்பத்தில் உள்ள எல்லாரும் சேர்ந்து கடவுளுக்குத் துதி செலுத்துவார்கள். சாப்பிடும்பொழுது மகன் தகப்பனைப் பார்த்து, "அப்பா,

ஏன் இந்தப் பண்டிகை ஆசரிக்கிறோம்" என்று கேட்கவேண்டும. தகப்பன் இஸ்ரவேலர் எகிப்து தேசத்தில் அடிமைகளாய் இருந்ததையும், அந்த பின்பு சர்வ வல்லவரின் அநந்த கிருபையால் அவர்கள் சிறை மீண்டு வந்ததையும், அப்போது பஸ்காப் பண்டிகை நியமிக்கப்பட்ட வரலாறையும் சொல்லவேண்டும். அப்புறம் இரண்டு கீர்த்தனம் பாடுவார்கள். ஒரு பாத்திரம் நிறையத் திராக்ஷரசம் ஊற்றி ஒவ்வொருவரும் சாப்பிடும்படி அவர்களுக்குள் அனுப்பப்படும். இவ்விதமாய் நாலுதரம் நடக்கும். இடையில் வேறு ஆகாரங்களும் சாப்பிடுவார்கள். மறுபடியும் நான்கு சங்கீதம் பாடுவார்கள். அடுத்த நாள் தேவாலயத்தில் பலியிட்டுக் காணிக்கை செலுத்துவார்கள்.

ஸ்ரீ இயேசு பஹவான் வியாழக்கிழமை மாலையில், தமது வேலையை உலகத்தில் முடித்துப் பிதாவினிடம் போக ஆயத்தமாய் இருப்பதை நினைவு கூர்ந்தார். தமது அருமையான சீஷர்பேரில் அன்பு பொங்கி அவர்களுக்கு வெகு அவசியமான சில போதனைகள் போதிக்க மனம் உவந்தார்.

பஸ்கா போஜனம் சாப்பிடும்போது அவர் இடையில் சாப்பாடு விட்டு எழுந்து, ஒரு பாத்திரத்தில் ஜலம் வார்த்து, தமது வஸ்திரங்களைக் கழற்றி அப்பால் வைத்து, ஒரு துவாலை எடுத்து இடுப்பில் சுற்றிக்கொண்டு, சீஷர்களுடைய கால்களைக் கழுவவும் துடைக்கவும் ஆரம்பித்தார். இது யூதருக்குள் சாதாரணமாய் ஒரு வேலைக்காரன் செய்கிற வேலை. சீஷர் பேச்சு மூச்சு இல்லாமல் பிரமித்துக் கண்சிமிட்டாமல் இருந்தார்கள். அவர் பேதுருவிடம் வந்தபோது அவன், "எம்பெருமானே, நீர் என் கால்களைக் கழுவ நான் பார்த்திருக்கவா! சுவாமி, கூடாது" என்றான்.

பஹறவான், "நான் உன்னைக் கழுவாவிட்டால் உனக்கு என்னிடம் பங்கு இல்லை" என்றார்.

பேதுரு, "அப்படியானால் ஐயனே, என் தலை கை எல்லாம் கழுவவேண்டும்" என்றான்.

சுவாமி, "நீ முழுகித் தீர்ந்தவன். கால்மட்டும் கழுவினால் போதும். நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள். ஆகிலும் எல்லாருமல்ல" என்றார். அப்போது யூதாஸும் அங்கே யிருந்தான்.

அவர் தமது உடைகளைத் தரித்து உட்கார்ந்து, உங்கள் ஆண்டவனாகிய நான் உங்களுக்குப் பாதம் கழுவினால் நீங்கள் ஒருவருக் கொருவர் எவ்வளவு பணிந்து நடந்து கொள்ள வேண்டும் என்பதை உணருங்கள். நீங்கள் கற்று அறிந்த சத்தியத்தின்படி நடந்து அதை நிறைவேற்றினால் பாக்கியவான்களாய் இருப்பீர்கள்.

உங்களெல்லோரையும் சேர்த்துப்பேச இடமில்லை. நான் தெரிந்து கொண்டவர்களைக் குறித்தே சொல்லுகிறேன். தெய்வ குமாரன் தமது அவதாரத்தில் நிறைவேற்ற வேண்டிய காரியம் யாவும் முடித்து, அநாதி தீர்மானத்தின்படி பரலோகம் போகிறார். வேத வாக்கியங்களின்படி, என்னுடன் அப்பம் புசிக்கிறவனே என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான். இவைகள் சம்பவிக்கும்போது நானே இரக்ஷண்ய மூர்த்தி என்று நீங்கள் அறியும்படி முன்னதாகவே அறிவிக்கிறேன் என்று சொல்லி, அவர் யூதாஸைப் பார்த்து, "நீ செய்வதைச் சீக்கிரம் செய்" என்றார்.

சிஷர்கள் பஸ்காப்பண்டிகை சம்பந்தமான ஏற்பாடு ஏதாகிலும் முடிக்கச் சொன்னார் என்று நினைத்தார்கள். அவர் மறுபடியும் சிஷரைப் பார்த்து, "நான் எப்படி உங்களை நேசித்

தேனோ அவ்விதமே நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாய் இருங்கள். இது நான் கொடுக்கிற புதுக்கட்டளை. தெய்வ குமாரன் பிதாவின் அநாதி தீர்மானத்தின்படி, முனிவர்கள் தம்மைக் குறித்து எழுதினபடியே, பூலோகம் விட்டுப் பரலோகம் போகிறார். ஆகிலும், அவரை விரோதிகள் கையில் காட்டிக் கொடுப்பவனுக்கு ஐயோ! அவன் பிறவாதிருந்தால் நலம்'' என்றார்.

இவ்வார்த்தைகள் சொல்லி ஆவி கலங்கி, "உங்களில் ஒருவன் என்னை எதிரிகள் கையில் ஒப்புக்கொடுப்பான்'' என்றார்.

சீஷர் இதைக் கேட்டுத் திடுக்கிட்டு, "சுவாமி, நானோ? நானோ அந்த வேலைக்காரன்?'' என்று ஒவ்வொருவராய்க் கேட்டார்கள். யூதாஸும் ஆளோடு ஆளாய், "சுவாமி, நானோ அது?'' என்றான். பகவான், "அப்பா நீ சொல்லுவது சரி'' என்றார். அந்தச் சமயம் சிமோன் பேதுரு சுவாமியுடைய மார்பில் சாய்ந்துகொண்டிருந்த யோவானுக்குக் கண்காட்டி, காட்டிக் கொடுப்பவன் யார் என்று விசாரிக்கச் சொன்னான். அவன் கேட்டபோது, சுவாமி ஒரு துண்டு அப்பம் எடுத்து, அது தொட்டுச் சாப்பிடவேண்டிய குழம்பில் தோய்த்து, இது யார் வாங்குகிறானோ, அவனே காட்டிக் கொடுப்பவன் என்று சொல்லி, யூதாஸ் கையில் கொடுத்தார். உடனே சாத்தன் அவனில் பிரவேசித்தான். "நீ செய்வதைச் சீக்கிரம் செய்'' என்றார். அவன் போய் விட்டான்.

அவர் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீஷருக்குக் கொடுத்து, "இதை வாங்கிச் சாப்பிடுங்கள். இது உங்களுக்காக நான் கொடுக்கிற என் சரீரம்'' என்றார். பின்பு

அவர் பாத்திரத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி அவர்களுக்குக் கொடுத்து, "நீங்கள் எல்லாரும் இதைச் சாப்பிடுங்கள். இது உங்களுக்காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குறிய என்னுடைய இரத்தம். என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள். இதை உங்களோடு பானம்பண்ண ஆசையாய் இருந்தேன். என் பிதாவின் ராஜ்யத்தில் உங்களோடு நான் திராக்ஷரசம் பானம் பண்ணும் வரையில் இதை ருசிபார்ப்பதில்லை'' என்றார்.

அவர் பேதுருவைப் பார்த்து, "சீமோனே, சாத்தான் உன்னை உருட்டிப் புறட்டிச் சோதிக்க உத்தரவு கேட்டான். உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடி உனக்காக வேண்டுதல் செய்தேன். நீ சீர்ப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப் படுத்து'' என்றார்.

பின்னும் சுவாமி, 'இந்த இரவில் முனிவர் என்னைக் குறித்து எழுதின வார்த்தைகள் நிறைவேறும்' என்றார்.

பேதுரு, "ஐயனே, காவலிலும் சாவிலும் உம்மோடு இருப்பேன். இங்கே இருக்கிற எல்லாரும் ஓடிப்போனாலும் நான் உம்மை விடேன்'' என்றான்.

சுவாமி, "பேதுரு, இன்று இரவு, சேவல் இரண்டு தடவை கூவுகிறதற்குமுன் நீ என்னை அறியமாட்டாய் என்று சொல்லி மூன்று தடவை மறுதலிப்பாய் என்றார்.

பேதுரு, "சுவாமி, உம்மைவிட்டு ஓடிப்போவேனா? உம்மோடு மரிக்க நான் தயாராயிருக்கிறேன்'' என்றான். சீஷர் ஒவ்வொருவரும் அப்படியே சொன்னார்கள்.

---

## 59-ம் அத்தியாயம்.

### பெரிய வியாழக்கிழமை II.

பஹவான் சீஷருக்கு ஆறுதல் சொல்லி தைரியப்படுத்தினது.

திராக்ஷச் சேடியின் உவமை-ஜெபம்.

பஹவான், கலங்கி திகில் மேலிட்டு, இந்த இரவில் என்ன நடக்குமோ; ஐயோ, நம் பெருமான் போய்விட்டால் நமது கதி என்னவோ என்பதுபோல் நூறு விதம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி மனம் புண்ணாய் உலைந்து வாடும் சீஷரைத் தேற்றி, தாம் அவரை விட்டுப் போய்விடுவதில்லை என்று அவர்களுக்கு உணர்த்தத் திராக்ஷச்செடியைக் கொண்டு ஒரு உவமானம் சொன்னார்.

"நான் திராக்ஷச் செடி போலும்,நீங்கள் என் கொடிகள் போலும் இருக்கிறோம். கிளைகள் செடியோடு பூரணமாய் ஒட்டியிருந்தால் செடியில் கனி உண்டாகும். கொடிகள் அடித்தண்டை விட்டுப் பிரிந்துபோன மாத்திரமே அவை காய்ந்து போகும். கவைக்கு உதவா. கனி கொடா.

என்னில் நிலைத்திருங்கள். என் வார்த்தைகளைக் காத்து நடவுங்கள். நான் உங்களைச் சிநேகித்து உங்களுக்காய் என் ஜீவனையும் கொடுக்கிறேன். இதைவிட மேலான அன்பு உண்டோ! மேலும் உங்களை நான் தொண்டராகப் பாவிக்காமல் என் சிநேகிதராக மதிக்கிறேன். என் பிதாவிடம் அறிந்த சகல காரியங்களையும் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் என்னுடைய கொடிகளாய் இருந்து கனி கொடுக்கவும், உங்கள் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பாய் இருக்கவேண்டும் என்ற கருத்துடன் இவைகளை உங்களுக்குப் போதிக்கிறேன்.

உலகம் உங்களைப் பகைக்கும். அப்பொழுது அது என்னைப் பகைத்த விதத்தை நினைவு கூறுங்கள். நீங்கள் உலக மக்களாய் இருந்தால் அது உங்களைப் பகையாது. என்னைத் துன்பப்படுத்தினபடியே உங்களையும் பகைத்து வருத்தப் படுத்தும். தொண்டன் எஜமானிலும் பெரியவனல்ல. பிதா உங்களுக்கு அனுப்பும் சகாயராகிய சத்தியத்தின் ஆவியானவர் வரும்போது அவர் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பார். நீங்களும் என் சாட்சிகளாய் இருப்பீர்கள்.

தற்சமயம் நான் பிதாவைக் குறித்து வெளிப்படையாய் பேசக்கூடாமல் உவமைகளாய்ப் பேசுகிறேன். பரிசுத்த ஆவியானவர் வரும்பொழுது அவர் சகல காரியங்களையும் உங்களுக்குத் தெரிவிப்பார்" என்றார்.

சீஷர், "சுவாமி, தேவரீர் பிதாவினிடமிருந்து வந்தீர் என்பதை இப்பொழுது அறிவோம்" என்றார்கள். சுவாமி,'மெய்தான், விசுவாசிக்கிறீர்கள். ஆகிலும் இந்த இரவில் நீங்கள் சிதறுண்டு, என்னைத் தனியே விட்டு, அவனவன் இடத்துக்கு ஓடிப்போவீர்கள். அப்படி நடக்கும்பொழுது என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் இருக்கும்படி அதை இப்பொழுதே உங்களுக்குச் சொல்லுகிறேன். உலகத்தில் உங்களுக்குத் துன்பங்கள் உண்டு. ஆகிலும் தைரியமாய் இருங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்' என்றார்.

இதன் பின்பு அவர் பிதாவை நோக்கி வேண்டிக்கொண்டார். இந்த விண்ணப்பத்தின் சுருக்கமாவது,

"பிதாவே வேளை வந்தது. உலகை ஈடேற்றி, அதற்கு நித்திய ஜீவனைக்கொடுக்கும் வேலையை எனக்குக் கொடுத்தீர். நான் அவ்வேலை முடித்து உம்மை மகிமைப் படுத்தும்படி உமது குமாரனை மகிமைப்படுத்தும்.

ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் தேவரீர் அனுப்பினவராகிய இயேசுக்கிறிஸ்து—இரக்ஷண்ய மூர்த்தியையும் அறிவதே நித்திய ஜீவன். அதுவே சாகா வரம். தேவரீர் எனக்குத் தந்த மனுஷர் நம்மைப்போல ஒன்றாய்—ஐக்யமாய்—இருக்கும்படி அவர்களைக் காத்துக்கொள்ளும். அவர்களைத் தீமையிலிருந்து இரக்ஷித்து, உமது சத்தியத்தின்படி அவர்களைப் பரிசுத்தராக்கும்.

அப்படியே, இவர்கள் வார்த்தையைக்கேட்டு என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்கள் மூலமாய் உலகம் என்னை விசுவாசிப்பதற்காக அவர்கள் எல்லாரும் நம்மோடு ஒன்றாய் இருக்கப் பிரார்த்திக்கிறேன். நம்மைப்போல் அவர்கள் ஐக்யபாசமாய் இருப்பதால், அவர்கள்மேல் உமக்கு இருக்கிற மகா பெரிய அன்பை அவர்கள் அறிந்து கொள்ளக் கிருபை கூர்ந்தருளும்.

உம்முடைய அன்பு அவர்களில் நிறைவாய் இருக்கும்படி உமது நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன் இன்னும் தெரியப்படுத்துவேன்'' என்றார்.

பஸ்கா விருந்தின் கடைசியாகப் பாட வேண்டிய ஸ்தோத்திரப் பாட்டைப் பாடின பின்பு பஹவான் சீஷரோடு ஒலிவ மலைக்குப் போனார்.

அவர் வழக்கமாய் இரவில் ஜெபம் செய்யப்போகிற இடம் அதுவென்று அறிந்த யூதாஸ்காரியோத்தும், பரிசேயர் முதலான சத்துருக்களின் கூட்டமும் அவர்கள் ஊழியக்காரரும், போர்ச்சேவகரின் கூட்டமும் அவரைப் பிடிக்கப் போகும்படி பந்தங்கள் தீவட்டிகள் ஆயுதங்களோடு ஆயத்தமானார்கள்.

---

## 60-ம் அத்தியாயம்.

### பெரிய வியாயக்கிழமை - இரவு III.

### இரக்ஷண்ய மூர்த்தியின் ஆத்துமப் பாடுகள்.

### சீஷன் முத்தமிட சத்துருக்கள் பிடித்தது.

பகவான் ஒலிவ மலை ஏறி, அதில் ஓடும் கீதரோன் ஆற்றைக் கடந்து, அதற்கப்பால் இருந்த கெத்சேமனே என்று பெயர் கொண்ட ஒரு தோட்டத்திற்குப் போனார். அது அவர் வழக்கமாய் ஜெபம் செய்யப்போகும் இடம். யூதாஸுக்கு அவ்விடம் தெரியும். தோட்டம் சேர்ந்தவுடனே சுவாமி தூங்காது விழித்து இருந்து ஜெபம் செய்யும்படி சீஷருக்குக் கட்டளை கொடுத்து, அவர்களில் பேதுரு யாக்கோபு யோவான் ஆகிய மூவரைத் தமமோடு அழைத்துக்கொண்டு சற்று அப்புறம் போனார். அங்கே அவர்களை இருக்கவிட்டு, விழித்திருந்து ஜெபம் செய்யக் கட்டளை கொடுத்து, "என் ஆத்துமா மரணத்துக்கு ஏதுவான துக்கத்தில் இருக்கிறது; நீங்கள் இங்கே விழித்து இருங்கள்" என்று சொல்லி, அவர்களை விட்டுச் சற்று தூரம் போய் தரையில் முகம் குப்புற விழுந்து ஜெபம் செய்தார். "என் பிதாவே, இந்த பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும். அப்பனே, உம்மால் எல்லாம் ஆகும். என் சித்தம் அல்ல. உமது சித்தம் ஆகட்டும்" என்று மன்றாடி சீஷரிடம் வந்தார். அவர்கள் அயர்ந்த நித்திரையில் இருந்தார்கள். அவர்களை எழுப்பி, "சீமோனே, நீ என்னோடு ஒரு மணி நேரம் விழித்திருக்கக் கூடாதா! சோதனைக் குட்படாதபடி விழித்து இருந்து ஜெபம் செய்யுங்கள்" என்று சொல்லி, மறுபடியும் போய் ஜெபம் செய்தார்.

இரண்டாந்தரம் அவர் சீஷரிடம் போய் பார்த்தபொழுது அவர்கள் மெய் மறந்து தூங்கினுர்கள். உருக்க ஊற்ருன வள்ளல் அவர்களைப் பார்த்து, சீஷருக்கு என்னோடு விழித்து இருக்க விருப்பம் உண்டு. அவரால் கூடாத குறை ஒன்றே, என்று சொல்லி அவர்களை விட்டுப்போய் மூன்ருந்தரம் ஜெபம் செய்தார். அவருடைய வேர்வை இரத்தம் தரையில் சொட்டுச் சொட்டாய் விழுந்தது. வானத்திலிருந்த ஒரு தேவதூதன் வந்து அவரைத் தேற்றினுன்.

அவர் சீஷரிடம் வந்து அவர்கள் நித்திரை மயக்கமாயிருக்கக்கண்டு, சற்றும் விசனிக்காமல், "சீஷரே, நித்திரை பண்ணி இளைப்பாறுங்கள். இரக்ஷண்ய மூர்த்தி பாவிகள் கையில் ஒப்புக் கொடுக்கப்படும் வேளை வந்துவிட்டது. என்னைக் காட்டிக் கொடுக்கிறவனும் பிடிக்கிறவர்களும் வந்துவிட்டார்கள், வாருங்கள் போவோம்" என்ருர்.

இப்படி அவர் பேசுகையில் யூதாஸ் பிரதான ஆசாரியர் வேதபாரகர் மற்றும் பிரதானிகள் அனுப்பின ஊழியக்காரர் போர்ச்சேவகர்கள் கூட்டங்களோடு வந்து சேர்ந்தான். பஹவான், அவர்களுக்கு எதிர்கொண்டுபோய், 'யாரைத் தேடி வந்தீர்கள்? என்னையானுல் சீஷர் போகட்டும்' என்ருர். அப்பொழுது யூதர் சிநேகிதனை முத்தம் செய்யும் முறைப்படி, யூதாஸ் அவரைக் கட்டி, ரபீ (போதகரே, ஐயா), ரபீ, என்று சொல்லி முத்தம் கொடுத்தான்.

சுவாமி, "யூதாஸ், முத்தஞ் செய்து, அவதார கடவுளைக் காட்டிக் கொடுக்கிருயா!" என்ருர்.

போர்ச்சேவகர் அவரைப் பிடித்துக் கள்ளனைக் கட்டுவதுபோல் இருகக் கட்டினுர்கள்.

சீஷரிடம் பட்டயம் இருந்தது. ஒருவன், "ஆண்டவனே, பட்டயத்தினால் இவர்களை வெட்டலாமா" என்றான். பேதுரு மல்கூஸ் என்ற ஒரு வேலைக்காரனை வெட்டினதில் அவன் வலது காது துண்டாய் போய்விட்டது.

சுவாமி, அவனைக் கண்டித்து, வேலைக்காரன் காதையும் சுகப்படுத்தி, "அப்பா சீஷனே, பட்டயம் அப்பால் இருக்கட்டும். என் பிதாவை நான் வேண்டிக்கொண்டால் எத்தனை லக்ஷம் தூதர் வரமாட்டார்! நான் அப்படிச் செய்தால் நான் எடுத்த இரக்ஷண்ய வேலை எப்படி நிறைவேறும்!" என்றார்.

பஹவான் ஜனக்கூட்டத்தின் பெரியோரையும் சேவகர் முதலானவரையும் பார்த்து, "தூக்கம் நிறுத்தி தடிக் கம்பு, ஈட்டி, பட்டயம், பந்தம், தீவட்டிகளோடு கள்ளனைப் பிடிக்கப்போகிறவர்கள் மாதிரி என்னைத்தேடி இந்த நள்ளிருளில் புறப்பட்டு வந்தீர்கள். நான் நாள்தோறும் தேவாலயத்தில் உங்கள் நடுவில் சாவகாசமாய் உட்கார்ந்து போதிக்கவில்லையா? அப்போது நீங்கள் என்மேல் விரல் நீட்டவில்லை. என்? இது உங்கள் வேளை. அந்தகாரப் பிரபுவின் அதிகார காலம்" என்றார்.

அவர்கள் சுவாமியைப் பிடித்து நிற்கும் கோலம் கண்ட சீஷர் எல்லாரும் உயிர் தப்ப ஓடிப்போனார்கள். ஒரு வாலிபன் வஸ்திரம் ஒன்றைப் போர்த்துக்கொண்டு அவர் பின்னால் போய்க்கொண்டிருந்தான். அவனை அவர்கள் பிடிக்கவே, வஸ்திரத்தையும் எறிந்துவிட்டு ஓடிப்போனான். ஆகிலும் பேதுருவும் வேறொரு சீஷனும் கூட்டத்தை முன்விட்டு சற்று தூரத்தில் பின் தொடர்ந்து போனார்கள்.

---

# 61-ம் அத்தியாயம்.

## பாடுபட்ட வாரம். வியாழக்கிழமை இரவு IV

### இரக்ஷண்ய மூர்த்தியின் பாடுகள்—அன்னு வீட்டில், காய்பா-வீட்டில், சனதரீம் சங்கத்தில் விசாரணை

இரக்ஷண்ய மூர்த்தியைப் பிடித்தவர்கள் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனுகிய காய்பாவின் மாமன் அன்னு என்பவன் வீட்டுக்குக் கொண்டு போனுர்கள். முன் ஒரு சமயம் பஹவானுக்கு விரோதமாய் தலைவர் சதி ஆலோசனை செய்யக் கூடியிருக்கும்பொழுது, ஜனங்கள் எல்லாருக்காகவும் ஒருவன் மரிப்பது நல்லதுதானே என்று தீர்க்க தரிச்னம் கூறினது இந்தக் காய்பாவே.

பிரதான ஆசாரியன் சுவாமியை விசாரணை பண்ணினுன். அவருடைய சீஷர்களைக் குறித்தும், உபதேசத்தைக் குறித்தும் பல கேள்விகள் கேட்டான். சுவாமி, "நான் எப்போதும் வெளிப்படையாய் ஜெப ஆலயங்களிலும் தேவாலயத்திலும் கூடின ஜனக்கூட்டத்தின் நடுவில் பேசினேன். ஆதலால் என் கொள்கைகளாவது சீஷரைப்பற்றிய விவரமாவது உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை" என்ருர். அப்பொழுது அண்டையில் நின்ற அதிகாரி ஒருவன் "பிரதான ஆசாரியனுக்கு என்ன மாதிரி உத்தரவு கொடுத்தாய்!" என்று சொல்லி பஹவானைக் கன்னத்தில் அடித்தான்.

சுவாமி, "நான் தகாத வார்த்தை ஒன்றும் சொல்ல வில்லையே, சொல்லியிருந்தால் அதை ரூபகாரப்படுத்து" என்ருர்.

இக்காரியங்கள் நிகழும்போது, சீஷர் இரண்டுபேர் இரக்ஷண்ய மூர்த்திக்கு என்ன ஆகுமோ என்ற ஏக்கமுற்றவர்க

ளாய் அதைப் பார்க்கும்படி, கூட்டத்தோடு வந்து கலந்து கொண்டார்கள். ஒருவன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவன் தைரியமாய் உள்ளே போனான். அடுத்தவன் பேதுரு வெளியே வாசல் அருகில் நின்றான். உள்ளே போனவன் திரும்பி வந்து, வாசல் காக்கிற மனுஷியிடம் சொல்லி பேதுரு உள்ளேபோக ஒழுங்கு பண்ணினான். அவள் பேதுருவைப் பார்த்து, "உன்னை நான் அந்த மனுஷனோடு பார்த்திருக்கிறேன். நீ அவன் சீஷனாய் இருக்கவேண்டும்" என்றாள். பேதுரு திடுக்கிட்டு, "நான் அவனை அறியேன். அவன் யாரோ எனக்குத் தெரியாது" என்றான்.

பிரதான ஆசாரியன் அரண்மனைக்குள் போனபோது, முற்றத்தில் குளிர்காய்வதற்காக நெருப்பு மூட்டினார்கள். அங்கே நெருப்பைச் சுற்றி உட்கார்ந்திருந்த சேவகர் முதலிய பல விதமான ஜனங்கள் கூடப்பேதுருவும் உட்கார்ந்தான். அங்கே ஒரு வேலைக்காரி அவனைப் பார்த்து, "இவன் நசரேயனாகிய இயேசுவோடு இருந்தவன், இவன் பேச்சுக் காட்டுகிறது" என்றாள்.

அவன், "அது யாரோ, நான் அறியேன்" என்று சத்தியம் பண்ணினான். அவன் எழுந்து வாசலண்டை போனான். சேவல் கூவிற்று.

அன்னாவின் அரண்மனையிலிருந்து பஹவானைக் காய்பாவின் அரண்மனைக்குக் கொண்டு போனார்கள். அங்கே யூதரின் ஆலோசனைச் சங்கமாகிய சனதரீம் சங்கம் கூடினது. அவர் மேல் குற்றங்கள் எற்படுத்தி சாதிக்க சாட்சிகள் தேடினார்கள். சரியான சாட்சிகள் கிடைப்பது அரிதாய் இருந்தது. ஒருவன் வந்து, "இவர் நமது அழகிய ஆலயத்தை இடித்துத் தள்

ளிக் கைவேலை யில்லாத ஆலயம் ஒன்றை மூன்று நாளில் எழுப்புவேன் என்றார்'' என்பதாய்ச் சொன்னான். சாட்சிகள் வாக்கு ஒன்றுக்கொன்று வித்தியாசமாய் இருந்தது. சுவாமி ஒன்றும் பேசவில்லை.

பிரதான ஆசாரியன் அவரைப் பார்த்து, "இந்த சாட்சிகளுக்கு நீர் பதில் சொல்லுவதில்லையா?'' என்றான். அவர் பேசாமல் நின்றார். மறுபடியும் அவன், "நீர் உன்னதமான தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து—இரக்ஷண்ய மூர்த்திதானா?'' என்றான்.

சுவாமி "நானே அவர். அவதார திருக்குமாரன் சர்வ வல்லவரின் வலதுபக்கம் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள்'' என்றார்.

இதைக் கேட்டவுடனே பிரதான ஆசாரியன் முதலானோர் வஸ்திரம் கிழித்துக்கொண்டு, ஆரவாரித்து நிற்க, "தேவதூஷணம் பேசக் காதாரக் கேட்டீர்களே, சங்கத்தாரே, உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது?'' என்று சங்கத் தலைவன் சொன்னான். எல்லாரும் ஏகவாக்காய், "மரணத்தீர்ப்பு'' என்றார்கள்.

அப்பொழுது அவர்கள் மனங்கொண்டபடி அவரை நிந்திக்கவும், ஹிம்சைபடுத்தவும் ஆரம்பித்தார்கள். அவர்மேல் துப்பி, முகத்தைமூடி, குட்டி, "அடித்தது யார்? ஞான திருஷ்டியால் சொல்லு'' என்று சொன்னார்கள். வேலையாட்களும் அவரைக் கன்னத்தில் அடித்தார்கள்.

பேதுரு, வாசலண்டை வந்து இறைவன்படும் துயர்களைப் பார்த்து, விம்மினவனாய் நின்றான். முன்னே கண்ட வேலைக்காரி வேறுபட்ட அவன் முகநாடி பார்த்து நிச்சய

மாகவே இவன் இயேசுவோடு இருந்தவன் என்று சாதித்தாள். பேதுரு, "ஐயோ, நான் அறியேன். அவன் யாரோ," என்று சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினன். சேவல் இரண்டாந்தரம் கூவிற்று. சுவாமி திரும்பி, அவனைப் பார்த்தார். பேதுரு அவருடைய வாக்கை நினைத்து வெளியே ஓடிப்போய், தன் மன நோவை அப்புறம் அடக்கமாட்டாதவனாய் நெஞ்சம் புண்பட்டு அழுதான்.

---

## 62-ம் அத்தியாயம்.

### பாடுபட்ட வாரம்-பெரிய வெள்ளிக்கிழமை I

### யூதாஸ்காரியோத்தின் முடிவு.

### பிலாத்துவின் விசாரணை-ஏரோது ராஜாவின் விசாரணை.

யூத அதிகாரிகளும் பெரியோரும் சுவாமி மரண ஆக்கினைக்குப் பாத்திரர் என்று தீர்த்து, அத்தீர்ப்புத் தாங்கள் கொடுக்க அதிகாரம் இல்லாதபடியால் அவரை அந்நாட்டுத் தேசாதிபதியான பிலாத்துவிடம் விசாரணைக்காக அதிகாலமே கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

யூத பிரதானிகள் பிலாத்துவிடம் சுவாமியை ஒப்புக்கொடுத்து, அவர் அவசியம் மரணத் தீர்ப்படையவேண்டும் என்று பல தீதுகள் அவர்மேல் சுமத்தினர்கள். பிலாத்து, "நீங்கள் சொல்லும் குற்றங்கள் வெகுவாய் உங்கள் வேதப் பிரமாணங்களுக்குச் சார்ந்ததாய் இருப்பதால் நீங்களே உங்கள் சங்கத்தில் விசாரித்துத் தண்டனை கொடுங்கள்" என்றான்.

அவர்கள், "நாங்கள் சந்தோஷமாய்ச் செய்வோம். ஆனால் மரணத்தீர்ப்புக் கொடுக்க எங்களுக்கு அதிகாரமில்லை. அதனாலும், தன்னை ராஜா என்று சொன்ன மனிதன் ராயனுக்கு விரோதி என்ற பெரிய குற்றம் இவன்மேல் இருப்பதாலும், தேசாதிபதி துரைகளே இந்த விசாரணையை எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் இவன் ஜனங்களைக் கலகப்படுத்தி ராயனுக்கு வரி கொடுக்க வேண்டாம் என்கிறான்" என்று பிடிவாதமாய்ப் பேசினார்கள். பஸ்கா தினமானபடியால், தீட்டுப்படாதிருக்கும்படி வெளியே நின்றார்கள். பிலாத்து வெளியே போய்ப் பேசினான். பின்பு யூதரை உள்ளே அழைத்து, விசாரணை செய்தான். தேசாதிபதி சுவாமியை நோக்கி, "நீர் யூதருடைய ராஜனா?" என்றான்.

சுவாமி: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான். ஆகிலும் என் ராஜ்யம் இவ்வுலகத்துக்கு உரியதல்ல. அப்படியிருந்தால் என் சேனைகள் யூதரோடு போராடியிருப்பார்கள்.

பிலாத்து: அப்படியானால் நீ ராஜாதானோ?

சுவாமி: நான் ராஜனே. சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க நான் அவதாரம் எடுத்தேன். சத்தியவான் எவனும் என்னுடைய ராஜ்யத்தின் பிரஜை. அவன் எனக்குக் கீழடங்குகிறான்.

பிலாத்து: சத்தியமாவது என்ன?

அவர் தன் கேள்விக்குப் பதில் சொல்ல அவன் காத்திருக்கவில்லை. யூதரைப் பார்த்துப் பிலாத்து, "அவரில் நான் யாதொரு குற்றமும் காணவில்லை" என்றான். யூதர்கள் "இவன் கலிலேயா தொடங்கி யூதேயாவரை ஜனங்களைக் கலகப்படுத்துகிறான்" என்றார்கள். பிலாத்து, "அப்படியா? கலிலேயா நாடா? அது

நமது சகோதரன் ஏரோது ராஜாவைச் சேர்ந்தது அல்லவா. அவரே இந்த விசாரணை நடத்தட்டும்'' என்று சொல்லி, அப்போது தற்செயலாய் எருசலேமில் வந்திருந்த ஏரோது விடம் அவரை அனுப்பி நமது சங்கடம் ஒழிந்தது என்று எண்ணி இளைப்பாறப் போனான்.

ஏரோதுவுக்கு வெகு காலமாய் ஸ்ரீ இயேசு பஹவானைக் காண மிகுந்த வாஞ்சையிருந்தது. பலகாலும் அவர் செய்த அற்புதங்களைக் குறித்துக் கேள்விப்பட்டவன். அவற்றைத் தானும் காணவேண்டும் என்ற ஆவல்கொண்டவன். அவன் நினையாத நேரம் பஹவான் விசாரணைக்காக எதிரில் வந்து சேர்ந்தது, கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததாய் இருந்தது.

ஆகிலும் அவன் விருப்பம் நிறைவேறவில்லை. அவன் கேட்ட வேடிக்கைக் கேள்வி ஒன்றுக்கும் அவர் பதில் பேசவில்லை. பிரதான ஆசாரியர் வேதபாரகர் முதலியவர்கள் அவர்மேல் பலவிதமான குற்றங்கள் சொல்லிக்கொண்டே நின்றார்கள்.

ஏரோது மன்னன் தான் ஏமாந்து போனதாலும், யூதரையும் சமாதானம் பண்ண வேண்டியதாலும் சுவாமியை வேதனைப் படுத்தத் துணிந்தான். தன் சேவகரின் கூட்டத்தோடு அவரை நிந்தித்துப் பரியாசம் பண்ணி மினுக்கான உடைதரித்து அனுப்பிவிட்டான். இதற்குமுன் விரோதிகளாயிருந்த பிலாத்துவும் ஏரோதும் அன்றே சிநேகமானார்கள்.

யூத அதிகாரிகள் ஒன்றுகூடி மூர்க்கமாய் நிற்கும் தன்மை கண்டு பிலாத்து பயந்து, மறுபடியும் நியாயாசனத்தில் உட்கார்ந்து பஹவானை விசாரணை செய்தான்.

## 63-ம் அத்தியாயம்.

### பாடுபட்டவாரம்—பெரிய வெள்ளிக்கிழமை II.

### பிலாத்துவின் இரண்டாம் விசாரணை—மரண ஆக்கினை.

**பி**லாத்து இரக்ஷண்ய மூர்த்தியை விசாரணை செய்யும் பொழுது, அவன் மனைவி ஒரு செய்தி அனுப்பினாள்· "எஜமானே, நீர் விசாரணை செய்ய உமக்குமுன் நிற்கும் கைதி ஒரு விசேஷித்த நீதிமான், அவருக்குத் தீங்கு ஒன்றும் செய்ய வேண்டாம். இரவின் கனவில் அவர் நிமித்தம் வெகு பாடுபட்டேன்" என்பதே அந்தச் செய்தி.

பிலாத்துவின் கலக்கம் அதிகப்பட்டது. அவன் யூத தலைவரைப்,பார்த்து "பிரதானிகளே,இவர் ஜனங்களைக் கலகப் படுத்துவதாய்ச் சொன்னீர்கள். நான் விசாரித்ததில் அப்படி ஒன்றும் ருசுவாகவில்லை. ஏரோது ராஜாவிடம் அனுப்பினேன். அவரும் அந்தக் குற்றம் இருப்பதாக அபிப்பிராயப்படவில்லை. நான் சொன்னபடியே அவரும் குற்றம் ஒன்றுமே காண வில்லை. மரணத் தீர்ப்பு எதற்காக விதிக்கிறது ? ஆனாலும் உங்கள் கோபம் அடங்கும்படி தண்டித்து விடுதலையாக்குவேன்" என்றான்.

பண்டிகை தோறும் ஒரு கைதியை விடுதலை பண்ணும் வழக்கத்தை அனுசரித்து அவரை விடுதலை பண்ண பிலாத்து வகை தேடினான். நகரத்தில் நடந்த கலகத்தில் சம்பந்தப் பட்ட கொலைகாரன் பரபாஸ் என்கிற கைதி ஒருவன் இருந் தான். பிலாத்து சுவாமியை விடுதலை பண்ணலாம் என்று சொன்னபோது யூதர், 'அப்படியல்ல, பரபாசையே விடுதலை யாக்கும்' என்று கூச்சலிட்டார்கள்.

பிலாத்து, "அப்படியானால் இயேசுவை நான் என்ன செய்யவேண்டும்?" என்றான். அவர்கள், "சிலுவையில் அறையவேண்டு" மென்று கூவினார்கள்.

பிலாத்து: ஏன்! என்ன பொல்லாப்புச் செய்தான்?

யூதர்: சிலுவை, சிலுவை, சிலுவையில் கொல்லவேண்டும்.

பிலாத்து கலகம் அதிகமாகிறதேயன்றித் தன் முயற்சியால் பயன் யாதுமில்லை என்று அறிந்து, தண்ணீரை எடுத்துக் கைகழுவி, "தலைவர்களே, அவர் குற்றம் யாதொன்றும் அறியாத நீதிமான். நான் அவருடைய இரத்தப் பழிக்குச் சம்பந்தப்பட்டவன் அல்ல. நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" என்றான்.

யூதர்கள், "அவனுடைய பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்றார்கள்.

பிலாத்து பரபாசை விடுதலை பண்ணி, பஹுவானை அவர்கள் இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுத்தான்.

போர்ச்சேவகர் அவரை அரண்மனைக்குள் கொண்டு போய், கூட்டத்தார் எல்லாரையும் அழைத்து, சூழ்ந்து கொண்டு, அவர் வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான அங்கி கொடுத்து, தலையில் முள்ளால் பின்னிய கிரீடம் வைத்து, கையில் செங்கோலுக்காக ஒரு நாணல்கோல், கொடுத்து அவர் முன்பாக முழங்கால் படியிட்டு, "மஹாராஜாவே வாழ்க" என்று சொல்லிப் பரியாசம் பண்ணினார்கள். அவர் மேல் துப்பி, நாணல்கோலை எடுத்து அவர் தலையில் அடித்தார்கள்.

பிலாத்து இன்னும் அவரை விடுதலைபண்ண வாஞ்சை உள்ளவனாய், அவர் வீணே அடைந்திருக்கிற ஹிம்சைகளைப் பார்த்த உடனே யூதர் நெஞ்சம் இளகுமென நம்பி, அவரை

வெளியே கொண்டு வந்து நிறுத்தி, இதோ இந்த மனுஷன். இவரில் நான் யாதொரு தோஷமும் காணேன்,'' என்றான். சுவாமி முள் முடியும் சிவப்பு அங்கியும் தரித்தவராய் அவர்கள் முன் நின்றார்.

யூதபிரதானிகள், "இவனைச் சிலுவையில் அறையவேண்டும்; சிலுவையில் அறையவேண்டும்'' என்று பெருங் கூச்சலிட்டார்கள்.

பிலாத்து, "நீங்களே அந்தக் காரியத்தைச் செய்து முடியுங்கள். நான் அவனிடம் ஒருதோஷமும் காணேன்,'' என்றான்.

யூதர் "எங்கள் நியாயப் பிரமாணத்தின்படி, இவன் தன்னைத் தெய்வகுமாரன் என்று சொன்னபடியால் சாகவேண்டும்'' என்றார்கள்.

பிலாத்து இதைக்கேட்டு மிகவும் பயந்தான். திரும்பவும் பஹவானை உள்ளே அழைத்துப்போய், "சுவாமி, நீர் எங்கிருந்து வந்தவர்'' என்று கேட்டான்.

அவர் மாறுத்தரம் சொல்லவில்லை. பிலாத்து அவரைப் பார்த்து, "உம்மை விடுதலை பண்ணவும் சிலுவையில் தூக்கவும் அதிகாரி நான். எனக்கு நீர் பதில் பேசாதிருப்பது எப்படி?'' என்றான்.

சுவாமி, "பரத்திலிருந்து என் பிதாவினால் கொடுக்கப் படாவிட்டால் என்மேல் உமக்கு என்ன அதிகாரம்? ஆகையால் என்னை ஒப்புக்கொடுத்தவர்கள் பாவம் பெரிது'' என்றார்.

பிலாத்து மறுபடியும் அவரை விடுதலைபண்ண ஆசித்தான். யூதர்கள் அவன் மனநிலையைக் கவனித்து, "இவனை நீர் தப்புவிக்கும் பக்ஷத்தில் நீர் சீசர் சக்கரவர்த்திக்கு நண்பன் அல்ல. துரோகியாவீர். இந்த மனுஷன் தன்னை அரசன் என்று சொன்னது துரோகம் அல்லவா'' என்றார்கள்.

அப்போது பிலாத்து பஹவானை வெளியே அழைத்து வந்து, தளவரிசைப் படுத்தப்பட்ட கபத்தா என்ற மேடை மேல் உட்கார்ந்து, "இதோ உங்கள் வேந்தன்!" என்றான். அவர்கள், "இவனை அகற்றும், சிலுவையில் ஆணி அடியும்" என்று கூக்குரல் இட்டார்கள்.

பிலாத்து, "ஐயோ, உங்கள் மன்னனை நான் சிலுவையில் கொல்லுவது சரியா?" என்றான்.

பிரதான ஆசாரியர் முதலானோர் "ரோமாபுரி சீசர் சக்கர வர்த்தி யன்றி எங்களுக்கு வேறே அரசன் கிடையாது" என்றார்கள்.

பிலாத்து அவரைச் சிலுவையில் அறையும்படி ஒப்புக் கொடுத்தான். அவர்கள் ஸ்ரீ இயேசு பெருமானைப் பிடித்துக்கொண்டு போனார்கள்; அவரைப் பரிகாசம் பண்ணின பின்பு, சிவப்பான அங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை உடுத்தி, சிலுவையில் அறைய நகருக்கு வெளியே கொல்கதா என்ற மேட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். அப்பொழுது நமது கணக்கின்படி நடுப்பகல் பன்னிரண்டுமணி.

---

## 64-ம் அத்தியாயம்.

### பெரிய வெள்ளிக்கிழமை III
### சிலுவைக்காட்சி—மரணம்.

ஸ்ரீ இயேசு பஹவானும், கொலைத்தீர்ப்பு பெற்றிருந்த இரண்டு கள்ளரும் சிலுவை தூக்கிக்கொண்டு கொல்கதா மேட்டை நோக்கி நடந்தார்கள். பஹவான் சிலுவை மரத்தைத் தூக்கி நடக்க சக்தியில்லாதவராய் இருந்தார். அவ்வழியே போன சிரேனே ஊரானான சீமோன் என்ற ஒரு

மனிதன் சிலுவையைத் தூக்கிக்கொண்டு அவரோடு போகும்படி அவனைக் கட்டாயம் பண்ணினார்கள்.

திரள் கூட்டம் ஜனங்களும், தலைவிரி கோலமாய் மாரடித்துப் புலம்பும் மாதரும் அவர் பின் சென்றார்கள். சுவாமி திரும்பி மாதரைப் பார்த்து, "எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காகப் புலம்பவேண்டாம். உங்கள் மேலும் உங்கள் குழந்தைகள் மேலும் வரப்போகும் துயர்களுக்காய்ப் புலம்புங்கள். மலடிகள் பாக்கியவான்கள் என்று சொல்லும் காலம் வருகிறது. அப்பொழுது, குன்றுகளே, எங்களை மறைக்கமாட்டீரா என்பீர்கள். பச்சை மரத்துக்கு இந்தப் பாடுகளானால் பட்டமரத்துக்கு என்ன வரலாம்" என்றார்.

அவர்கள் தலை ஒட்டுஸ்தலம் என்று பொருள் கொண்ட கொல்கதாவுக்கு வந்தபோது, சுவாமியைச் சிலுவை மரத்தில் படுக்க வைத்து, கைகளையும் கால்களையும் மரத்தில் சேர்த்து ஆணி அடித்தார்கள். பின்பு மரத்தைத் தரையில் நாட்டினார்கள். அவர் வலபாகத்தில் ஒரு கள்ளனும், இடபாகத்தில் ஒரு கள்ளனும் சிலுவைகளில் தொங்கினாகள். மயக்கம் உண்டாவதற்காக கசப்புக்கலந்த திராக்ஷரசம் குடிக்கக் கொடுத்தார்கள். அவர் அதை அங்கிகரிக்கவில்லை.

பிலாத்து, "நசரேயனாகிய இயேசு, யூதரின் ராஜா" என்ற விலாசம் எபிரேயு, கிரேக்கு லத்தீன் பாஷைகளில் எழுதி அவர் சிலுவைமேல் போடுவித்தான். யாவரும் அதை வாசித்தார்கள். யூதபிரதானிகள் பிலாத்துவிடம் போய், "துரைகளே, அந்த விலாசம் மாற்றவேண்டும். தன்னை ராஜா என்று அவன் சொன்னதாக எழுதவேண்டும்" என்றார்கள்.

பிலாத்து அதற்கு, "ஒருதரம் எழுதின எழுத்தை அழித்து எழுதக்கூடாது" என்றான்.

வழி நடக்கிற ஜனங்கள் அதைப் பார்த்து, "ஆஹா, எல்லாரையும் இரக்ஷித்தான்; தன்னைத்தான் இரக்ஷிக்க முடியவில்லை என்றும், வேறு சிலர், இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுதே சிலுவையை விட்டு இறங்கட்டும்" என்றும் சொன்னார்கள். "தேவாலயத்தை இடித்து மூன்றுநாளில் கட்டுகிறவன், தெய்வகுமாரன், சிலுவை விட்டு இறங்கக் கூடாதா" என்றார்கள். "நானே தெய்வகுமாரன், அவதார புருஷன் என்றார். கடவுள் இவன் பேரில் அன்பாயிருந்தால் இப்பொழுது ரக்ஷிக்கமாட்டாரா" என்றார்கள் வேறு சிலர். அவரோடுகூட சிலுவையில் தொங்கி நினைக்கவும் அரிதான வேதனை அனுபவித்துக்கொண்டிருந்த கள்ளரும் பெருமானைத் தூஷித்தார்கள்.

பன்னிரண்டு மணி முதல் மூன்று மணி வரையில் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. சூரியன் ஒளி குறைந்து பிரகாசித்தான்.

---

## 65-ம் அத்தியாயம்.

### பெரிய வெள்ளிக்கிழமை IV.

### சிலுவை - திருவாக்கு.

இரக்ஷண்யமூர்த்தி அகோர வேதனையோடு சிலுவையில் தொங்கினார். யூததலைவர்கள் அவரை மரண ஆக்கினைக்குக் கொண்டு வந்த சந்தோஷத்தில் கண் தெரியாமல் நின்றார்கள். பஹவான் அவரைப் பார்த்துப் பரிதபித்தார். நீதிபரனைத் தீன தயாளுவைக் கொலைக்களம் கொண்டுவந்து ஆனந்தப் பரவசராய் ஆரவாரிக்கும் பேதைகளை நோக்கி, வியாகுல

முற்றுப் "பிதாவே இவருக்கு மன்னியும், தாங்கள் செய்யும் பிழையின் தன்மை இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்றார்.

அத்தருணம் கள்ளரில் ஒருவன் அவரை நிந்தித்தான். அடுத்த கள்ளன் மனம் மாறி அவனைப் பார்த்து, "அடே, நாம் செய்த தீமைக்கு நியாயமான தண்டனை அடைந்தோம். உனக்கு இன்னும் புத்தி வரவில்லையா?" என்று சொல்லி, பஹ வானைப் பார்த்து, "ஆண்டவனே, தேவரீர் உமது இராஜ்யத் தில் வரும்பொழுது அடியேனை நினைத்தருளும்" என்றான்.

சுவாமி அவனைப் பார்த்து, "இன்றைக்கு நீ என்னோடு பேரின்ப பூமியில் இருப்பாய்" என்றார்.

சிலுவையின் அடியில் அவருடைய தாயாரும், அவள் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களை அடுத்து அவருடைய அன்பான சீஷன் யோவான் நின்றான். சுவாமி மாதாவை நோக்கி, சீஷனைக் காட்டி, "அதோ பார், உன் மகன்" என்றார். சீஷனைக் கண்ணுற்று, "அப்பா, உன் தாயார்" என்று குறிப்பாய் சொல்லித் தமது சீஷனுடைய பாதுகாவலுக்கு அன்னையை ஒப்புவித்தார். சீஷன் அந்த நிமிஷம் முதல், ஆயுள் பரியந்தம் அவளை ஆதரித்தான்.

பிற்பகல் மூன்று மணிக்கு பஹவான், "என் தெய்வமே, என் தெய்வமே, ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று உரத்த சத்தமாய்க் கூவினார்.

சற்றுநேரம் பொறுத்து அவர், "தாகமாய் இருக்கிறேன்" என்றார். அங்கிருந்தவர்கள் காடி நிறைந்த பாத்திரம் ஒன்றை ஒரு கோலில் மாட்டி அதைக் குடிக்கும்படி கொடுத்தார்கள்.

அப்போது தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ் வரை இரண்டாய்க் கிழிந்தது. கன்மலைகள் பிளந்தன. பூமி அதிர்ந்தது. மரித்த பலர் உயிர்த்து எழுந்து, அவர் எழுந்தபின் நகரத்தில் காணப்பட்டார்கள். அவர் "முடிந்தது, பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறேன்" என்று சொல்லித் தலை சாய்த்தார். ஆவி உடலை விட்டு நீங்கியது.

நூறு சேவகருக்குத் தலைவனான ரோம அதிகாரியும், மற்றும், அவனோடு இருந்தவர்களும் பயந்து, "நடந்த சம்பவங்களைக் கவனிக்கும்பொழுது, அவர் தெய்வக் குமாரனே; அதற்குச் சந்தேகமில்லை" என்றார்கள். நூற்றுக்கு அதிபதி கடவுளை மகிமைப்படுத்தினான். மற்றப் பொதுவான ஜனங்கள் நடந்த காட்சிகளைப் பார்த்து மார்பில் அடித்து மனம் நொந்தவர்களாய்த் திரும்பினார்கள். அவருக்கு அறிமுகமானவர்களும், கலிலேயாவிலிருந்து வந்த மாதரும் சற்று தூரத்தில் நின்று பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

அந்த நாள் ஓய்வு நாளுக்கு ஆயத்தநாளானபடியால் சிலுவையில் இருந்த சரீரங்களை இறக்கப் போர்ச்சேவகர் வந்தார்கள். அவர்கள் கள்வர் இருவருடைய கால்களையும் முறித்து உயிரைப் போக்கினார்கள். எம்பெருமான் ஆவி போய்விட்டது கண்டு ஒருவன் ஈட்டியால் திருவிலாவில் குத்தினான். அதிலிருந்து ஜலமும் இரத்தமும் வந்தது.

# 66-ம் அத்தியாயம்.

## பெரிய வெள்ளிக்கிழமை V.

## திருப்பிரேத அடக்கம்.

இரக்ஷண்ய மூர்த்தியின் ஆவி நீங்குவதைக் கவனமாய் நோக்கிக் காத்திருந்த பக்தர்களில் ஒருவனான அரிமத்தியா ஊர் யோசேப்பு என்பவன் பிலாத்துவிடம் தைரியமாய்ப் போய் உத்தரவு கேட்டு, திருச் சரீரத்தைச் சிலுவை விட்டு இறக்கி நல்லடக்கம் செய்ய ஒழுங்கு பண்ணினான். அப்போது பஹவானுடைய அந்தரங்க பக்தர்களில் வேறொருவனான நிக்கோதேமு என்பவன் நூறு இராத்தல் வெள்ளைப் போளமும் கரியபோளமும் கலந்த வாசனைத் திரவியத்தைக் கொண்டுவரவே திரு உடலை அதில் பொதிந்து மெல்லிய துப்பட்டியில் சுற்றிக் கட்டினார்கள். அந்த இடத்திற்கு அருகில் ஒரு தோட்டமும், அதில் ஒருவரும் வைக்கப்படாத ஒரு புதுக் கல்லறையும் இருந்தது. அவதார சரீரத்தை அதில் வைத்து ஒரு பெரிய கல்லால் மூடினார்கள். அக்கல்லறை யோசேப்புக்காய் வைக்கப்பட்டிருந்தது.

யோசேப்பும், நிக்கோதேமுவும், சனதரீம் சங்கத்தைச் சேர்ந்த பிரபுக்கள்: மகதலேனா மரியாளும், யோசேப்பின் தாயார் மரியாளும், மரியம்மாளுடைய சகோதரியும், கலிலேயாவிலிருந்து வந்த மாதரும், பிரேத அடக்கம் நிறைவேறும் வரை அங்கே காத்திருந்து, அது முடிந்தவுடனே வீடுபோய், மூன்றும் நாளில் பிரேதத்திற்குப் போடவேண்டிய கந்தவர்க்கங்களை அவசரமாய் ஆயத்தம் பண்ணினார்கள். அடுத்த தினம் ஓய்வு நாள். அன்று ஒரு காரியமும்செய்யக்கூடாது. அவரோ

சர்வவல்ல சாக்ஷாத் இறைவனின் திருமைந்தன். எந்தக் கல்லறையும் அவரை அடக்கிக்கொள்ள முடியாது என்ற எண்ணமாவது, பஹவான் தமது உயிர் பெற்றுக் கல்லறை விட்டு மூன்றும் நாள் வெளிப்படுவதாய்ச் சொன்ன கட்டுரை களாவது அவர்கள் ஞாபகத்தில் வரவேயில்லை. செத்துப் போனர். மூன்றும் நாளில் சரீரம் நாற்றத்துடன் இருப்பதைப் பார்த்துச் செய்யவேண்டிய சிறுபணி நிறைவேற்றுவோம் என்று வியாகுலத்துடன் சனிக்கிழமை இரவு போக்கி, ஞாயிறு காலை காண்மாட்டோமா என்று விழித்து இருந்தார்கள்.

யூத பிரதானிகள், எவ்வுயிர்க்கும் இனிய நண்பனுய் விளங்கிய அவதார புருஷனை வன்கொலை செய்தும் திருப்தி அடையாமல், அவர் ஆவி போய்விட, சடலம் கல்லறை சேர்ந் தும் பயம் தெளியாமல், கல்லறையைக் காவல் பண்ணி அவர் உயிரோடு எழும்பாமல் தடை செய்யும்படி புறப்பட்டார் கள்! பிலாத்துவிடம் போய், "துரைகளே, கல்லறையைக் காவல் பண்ணும்படி ஏற்பாடு செய்யவேண்டும். மூன்றும் நாளில் எழுந்திருப்பேன் என்று அவன் சொன்ன வாக்கும் உண்டு. சிஷர் சரீரத்தை எடுத்து எங்காவது போட்டு விட்டு, அவர் உயிரோடு எழுந்தார் என்று சொல்லி, ஜனங் களை வஞ்சிக்கலாம்" என்றூர்கள்.

பிலாத்து "ஆஹா, தடையில்லை, உங்கள்தேவாலய சேவ கர் இருக்கிறூர்கள். அவரைக்கொண்டு உங்களால் ஆனமட் டும் பத்திரமாய் முத்திரைகள் போட்டுக் காவல்பண்ணுங்கள்" என்றூன்.

யூதபிரதானிகள் எம்பெருமான் கல்லறைவிட்டு வெளியே வராமல் தடுக்கும்படி பந்தோபஸ்து பண்ணினூர்கள்!!

மூன்றும் நாள் அதிகாலையில் பூமி அதிரும்படி ஜோதி மயமான உடைதரித்த தேவதூதன் வானத்திலிருந்துஇறங்கி, கல்லைப் புறட்டித் தள்ளி கல்லறையைத் திறந்துவைத்து கல்லின்மேல் உட்கார்ந்தான். காவல் சேவகர் வீரம் குலைந்து, திடுக்கிட்டு, திசை தப்பி ஓட்டம் பிடித்தார்கள்.

---

## 67-ம் அத்தியாயம்.

### ஞாயிற்றுக்கிழமை.

### இரக்ஷண்யமூர்த்தி உயிரோடு எழுந்தது.

### பக்தருக்குக் கோடுத்த தரிசனம்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் ஸ்திரீகள் கந்தவர்க்கம் எடுத்துக்கொண்டு பஹவான் சரீரம் வைக்கப்பட்ட கல்லறையை நாடி வேகமாய் நடந்து போனார்கள். வாசலில் இருக்கும் கல்லைப் புறட்ட நம்மால் ஆகாதே, துணை நமக்கு இல்லையே என்று பேசிக்கொண்டே வழி நடந்தார்கள்.

கல்லறையண்டை வந்தபோது, கல் புறட்டித் தள்ளுண்டு கிடக்கப் பார்த்துத் திடுக்கிட்டு நின்றார்கள். பின்பு உடல் உள்ளே இருக்கிறதா என்று பார்த்தபோது, சரீரம் இல்லை! வெண்மையான உடைதரித்த தேவதூதர் இருவர் அங்கே இருந்து "யாரைத் தேடுகிறீர்! நசரேயனைய் வளர்ந்த ஸ்ரீ இயேசு பஹவானைத் தேடுகிறீர்களா? அவர் உயிரோடு எழுந்தபின் அவரைக் கல்லறைக்குள் தேடுகிறீர்! இது தகுதியோ! அவர் உங்களோடு இருக்கும்போது இந்த விவரங்கள் உங்களுக்குச் சொன்னதுண்டே'' என்றார்கள்.

இதைக்கேட்ட மாதர், திகைத்து இச்செய்தி பேதுரு முதலிய அறிவாளருக்குச் சொன்னால் நல்லது. பெரிய

விசேஷமாய் இருக்கிறது! என்ற எண்ணத்துடன் விரைந்து ஓடி, கண்ணீரும் கவலையும் ஏக்கமுமாய்க் கூடியிருந்த சீஷர் கூட்டத்தில் சொன்னார்கள். பேதுருவும் யோவானும் எழுந்து ஓடிக் கல்லறைக்குள் நுழைந்து, அவரைச் சுற்றியிருந்த சேலை கிடப்பதையும், தலையைக் கட்டின துணி சுருட்டித் தனியாய்க் கிடப்பதையும், கண்டு அதிசயித்து நின்றார்கள்.

அவர்கள் சற்று நேரம் கழித்து வீட்டுக்குப் போய் விட்டார்கள். மகதலேனா மரியாள் கல்லறையைப் பார்த்துப் பார்த்து அழுதவண்ணமாய் நின்றாள். கண்ணீரினால் அவள் கண்கள் தெளிவாய் பார்க்கக் கூடாதிருந்தது. ஸ்ரீ இயேசு பஹவான் அவள் சமீபமாய் நின்றார். அவள் யாரோ தோட்டக்காரன் நிற்கிறான் என்று நினைத்து, தலை நிமிர்த்திப் பாராமலே "தோட்டக்கார அண்ணா, சுவாமி உடலை எங்கே கொண்டு போய் வைத்தீர்கள்? எனக்குக் காட்டுமையா" என்று சொல்லி கோவென்று அழுதாள்.

சுவாமி, "மரியாள்!" என்றார்.

மகதலேனா மரியாள் அவர் திருமுகம் பார்த்து, "போதகரே, என் அப்பா" என்று பாதம் பணிந்தாள், அவர் காலை இருகக் கட்டித்தழுவ அவள் விரைந்து வருவதைப் பார்த்துப் பெருமான், என்னைத் தொடாதே, நான் இன்னும் பிதாவினிடம் போகவில்லை. என் சகோதரரிடம் போய் என் பிதாவும், என் தெய்வமும், உங்கள் பிதாவும் உங்கள் தெய்வமுமாய் இருக்கிற பெருமானிடம் நான் போகவேண்டும்" என்று சொல்லு என்றார்.

மகதலேனா மரியாள் போய் கூடியிருந்த சீஷருக்கு இந்தச் செய்தியைச் சொன்னாள்.

காவல்காரர் நகரில் பிரவேசித்து, தூதன் வானத்திலிருந்து இறங்கிக் கல்லறை மூடியிருந்த கல்லைப் புறட்டித் தள்ளினதையும், தாங்கள் அந்த ஒளியினால் மயங்கி விழுந்ததையும் தெரிவித்தார்கள். யூதர்கள், சேவகரே வேண்டிய பொருள் கொடுக்கிறோம். இரவில் நாங்கள் தூங்கும்போது சீஷர்கள் களவாடி சரீரத்தைக்கொண்டு போய்விட்டார் என்று சொல்லுங்கள். அவர் உயிரோடு எழுந்தார் என்ற சங்கதி வெளியிடவேண்டாம்" என்று போதனை பண்ணினார்கள். காவல் சேவகர் கூலி பெற்று அப்படியே செய்தார்கள். அந்த வார்த்தைகளும் யூதருக்குள் பரவின.

அன்று எருசலேமிலிருந்து எட்டுமைல் தூரத்தில் இருந்த எம்மா என்னும் கிராமத்திற்குச் சீஷரில் இரண்டுபேர் போய்க்கொண்டு இருந்தார்கள். அவர் மகா துயரத்தோடு ஸ்ரீ இயேசு—இரக்ஷண்ய மூர்த்தியின் மகிமையையும் திருப்பாடுகளையும், யூத தலைவருடைய குரூர பாவங்களையும் குறித்துப் பேசிக்கொண்டே வழி நடந்தார்கள். அவர் இஸ்ரவேல் ஜனத்தை இரட்சிப்பார் என்ற எண்ணம் வீண்போய் விட்டதே என்று துயரப்பட்டார்கள். பஹவான் யாரோ வழிப் போக்கன் போல் நடந்து அவர்களோடு சேர்ந்துகொண்டார்.

சுவாமி "ஏன் துக்கமாய் இருக்கிறீர்கள். பேசுகிற சங்கதி என்ன?" என்றார்.

சீஷர்: எருசலேமில் கடந்த வாரம் நடந்த மகா காரியங்களை அறியாதபடிக்கு நீர் அந்நியனா?

சுவாமி: அது என்ன சம்பவம்? சற்று விவரமாய்ச் சொல்லுங்கள்.

அவர்களில் கிலேயோப்பா என்ற சீஷன், "நசரேயனுகிய ஸ்ரீ இயேசு பிரானுக்கு வந்த அரும்பாடுகள் மரணத்தைப் பேசுகிருேம். அவர் மனிதன் முன்பாகவும் கடவுள் பார்வையிலும் வாக்கிலும் செய்கையிலும் நிகரற்ற பரம புருஷனுய் விளங்கினர். நாங்கள் அவரே இஸ்ரவேலை ஈடேற்ற வந்த இரக்ஷண்ய மூர்த்தி. வருவார், கலிதீர்ப்பார், என்று நாம் எதிர்நோக்கிக் காத்திருந்த கிறிஸ்து—மேசியா, அவரே என்ற உறுதியான நம்பிக்கையோடு இருந்தோம். நமது பிரதான ஆசாரியர் பரிசேயர் வேதபாரகரான பெரியோர் அவர்மேல் அநியாயப் பழி போட்டு, அகோர நிஷ்டூரப் பாடுகள் நிந்தைகள் கொடுத்துச் சிலுவையில் ஆணி அடித்துக் கொன்றுர்கள். இன்றைக்கு மூன்றும் நாள் சாஸ்திரம் முடிக்க எங்கள் ஸ்திரீகள் அதிகாலையில் போய், உடலைக் காணுமல், அவர் உயிரோடு எழுந்தார் என்று சொன்ன தூதரைக் கண்டதாக எங்களிடம் வந்து சொன்னுர்கள்.

எங்களில் சிலர் கல்லறையண்டை ஓடி மாதர் சொன்ன படியே சரீரத்தைக் காணுமல் திரும்பி வந்தார்கள். உயிரோடு எழுந்த பெருமானை அவர்கள் காணவில்லை" என்றுர்கள்.

சுவாமி "இரக்ஷண்ய மூர்த்தி இவ்விதம் பாடுகள் உத்தரித்து மகிமையில் பிரவேசிப்பார் என்று நமது முனிவர் பலரும் தெரிவித்தார்கள். அந்த வாக்குகள் நீங்கள் வாசிக்கவே இல்லையா?" என்று சொல்லி, மோசே முதல் சகல முனிவர் எழுதின வாக்குகளையும் எடுத்துக் காட்டினர். கிறிஸ்துவாகிய இரக்ஷண்யமூர்த்தி அவதார சரீரத்தோடு பூலோக வேலை முடிந்தபின் இருக்கக்கூடாதென்று ரூபகாரப்படுத்திக் காட்டினர். அவர்கள் பேசிக்கொண்டே எம்மாவூர் சேர்ந்தார்கள். பொழுதும் அஸ்தமாயிற்று. அவர் எங்கேயோ

போவதுபோல் காணப்பட்டார். சீஷருக்கு அவரை விட்டுப் பிரிவது அரிதாய் இருந்தது. சகலவிதமான காரணங்களையும் எடுத்துக் காட்டி, ஐயா, எப்படியும் நீர் எங்களோடு இராத் தங்கவேண்டும் என்று கெஞ்சினார்கள். அவர் சம்மதித்து அவர்களோடு போய் சாப்பாட்டுக்குப் பந்தி அமர்ந்தார்.

அவர்கள் குல ஆசாரப்படி தோத்திரம் பண்ணி அப்பம் அவர் கையிலிருந்து வாங்கினவுடனே அவர் திருமுகம் நோக்கிப் பார்த்தார்கள். அவர் இரக்ஷண்ய மூர்த்தி!

உடனே மறைந்துபோனார்.

இரண்டு சீஷரும் அடக்கமுடியாத ஆனந்தத்துடன், எருசலேமில் கதவு அடைத்துத் தாளிட்டு, பெருமூச்சு விட்டு, தங்கள் துக்கத்துக்கு நிகர் உலகில் எங்காவது உண்டோ என்று தியங்கியிருக்கும் சகோதரருக்குச் சொல்லுவோம் என்ற பெருங் காதலுடன் விரைந்து சென்றார்கள். அவர்கள் கதவுதட்டித் திறந்து உள்ளேபோனால், "நமது நாதர் எழுந்தார், எழுந்தார்! உயிரோடு இருக்கிறார். சீமோனுக்குத் தரிசனம் கொடுத்தார், கொடுத்தார் என்று சீஷர் ஆநந்தக் கூத்தாடக் கண்டார்கள். அதோடு தாங்கள் கொண்டுவந்த செய்தியையும் சொல்லவே அச்சமயம் அவர்கள் மனதில் வீற்றிருந்த கருணாநிதி அவர்கள் நடுவில் சுயரூபமாய் எழுந்தருளினார்! "உங்களுக்குச் சர்வமங்களம்" என்றார்.

சீஷர் தமக்கு முன்னே திடீரெனத் தோன்றிய சொரூபியைக் கண்டு, இது ஒரு ஆவேசமே ஒழிய வேறொன்று மில்லை என்று நிதானித்துக் கலங்கினார்கள்.

சுவாமி அதைக்கண்டு மனதுருகி, "சீஷரே, பாருங்கள், நீங்கள் காண்பது ஆவேசமா? என் கால் கை பாருங்கள். என்னைத் தொட்டுப் பாருங்கள். ஆவேசம் இப்படியே

இருக்குமா ? அதற்குச் சதையும் எலும்பும் உண்டோ ? என்று சொன்னார். தமது கை கால்களைக் காட்டினார். அவர்கள் கண் தெரியாமல் பூரிப்படைந்த போதிலும் சந்தேகம் ஒரு பால் இருந்தது. அதையும் நீக்கத் திருவுளம் உவந்து, 'சாப்பிட ஏதாகிலும் கொண்டு வாருங்கள்' என்றார். அவர்கள் பொரித்த மீன் கொடுக்க, அதை வாங்கி உண்டு அவர்களை மகிழச் செய்தார்.

பஹவான், மேலும் அவர்களை நோக்கி, "ஆறுதலாய் இருங்கள். பிதா என்னை அனுப்பின வண்ணம் நானும் உங்களை அனுப்புகிறேன்" என்று சொல்லி, அவர்கள் மேல் ஊதி, "பரிசுத்த ஆவியை உங்களுக்கு அளிக்கிறேன். யார் யார் பாவம் மன்னிக்கிறீர்களோ, அவர்களுக்கு மன்னிப்பு உண்டு. நீங்கள் மன்னியாத பாவிக்கு நிவாரணமில்லை." என்று வரம் கொடுத்தார்.

அத்தருணம் தோமா என்ற சிஷன் அங்கே யில்லை. அவன் வந்து பஹவான் காணப்பட்டதையும், இன்னும் நடந்த வரலாறுகளையும் கேட்டபோது, அவன் "நானே அவரைக் கண்ணாரக்கண்டு, என் ஆசைதீரத் தொட்டுப் பார்த்தால் நம்புவேன், மற்றபடி நம்பவே முடியாது" என்றான்.

அப்படியே, மறு எட்டாம் நாள் சிஷர் எல்லாரும் கூடியிருந்த இடத்தில் அவர் தோன்றி காட்சி கொடுத்தார். அவர் தோமாவை அழைத்து, "அப்பா என்னைத் தொட்டுப்பார். விலாவில் கைபோடு. கையிலும் காலிலும் ஆணி கடாவிய தழும்பில் உன் விரலை வைத்துப் பார். இனிமேல் சந்தேகம் கொள்ளாமல் திடநம்பிக்கையோடு இரு" என்றார்.

தோமா "நாதா, பெருமானே" என்று வணங்கி நின்றான்.

சுவாமி "தோமா, பார்த்தபின் நம்புவது பெரிதல்ல. காணுமல் இருக்கும்போது நம்புவதே பாக்கியம்'' என்ருர்.

பின்பு சீஷர் சுவாமி கட்டளைப்படியே புறப்பட்டு கலிலேயாவிற்குப் போனுர்கள்.

---

## 68-ம் அத்தியாயம்.

### உயிர்த்து வெற்றிசிறந்த இரக்ஷண்ய மூர்த்தியின் தரிசனங்கள்.

சீஷர் கலிலேயா நாடு போய்ச் சேர்ந்தபோது பேதுரு, யாக்கோபு, யோவான், அந்திரேயா முதலிய சீடர் சேர்ந்து திபேரியாக் கடல் என்று மறுபேர் கொண்ட கலிலேயாக் கடலில் மீன் பிடிக்கப்போனுர்கள். அவர்கள் இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் மீன் கிடைக்கவில்லை. காலையில் பஹவான் கரையில் நின்ருர். வலைகளை அலசவேண்டிய நேரம். சீஷருக்கு கரையில் யார் நிற்கிருர் என்று தெரியவில்லை. சுவாமி அவர்களைப் பார்த்து, "அப்பன்மாரே! சாப்பிட ஏதாகிலும் உண்டா'' என்ருர்.

சீஷர், "இரவெல்லாய் பாடுபட்டும் கண்ட பலன் ஒன்றுமில்லை" என்ருர்கள்.

சுவாமி, "படகின் வலது பக்கம் வலைபோடுங்கள்'' என்ருர். அவர்கள் அப்படியே போட்டு நூற்று ஐம்பத்து மூன்று பெரிய மீன்கள் அடங்கிய வலையை வெகு பிரயாசத்தோடு இழுத்துக் கரையில் சேர்த்தார்கள். யோவான் சுவாமியைக் கவனித்து, இதோ "இரக்ஷண்ய மூர்த்தி'' என்ருன். பேதுரு சந்தோஷம் கொள்ளாமல் கடலில் குதித்தான். எல்லாரும் கரை சேர்ந்தபின் அங்கே கரி நெருப்பு மூட்டி தமக்கு அப்ப

மும் மீனும் சாப்பாட்டுக்குத் தயாராய் இருப்பதைக் கண்டார்கள்.

சுவாமி எண்ணற்கும் எடுத்து உரைப்பதற்கும் அரிய காருண்யத்தோடு அவர்களை நோக்கி வழக்கம்போல், "வாருங்கள், சாப்பிடலாம்" என்றார். அவர்கள் உட்கார்ந்து சாப்பிட்டுத் தீர்ந்தபோது அவர் பேதுருவை நோக்கி, "யோனாவின் மகனாகிய சீமோனே, நீ இந்த எல்லா சீஷரிலும் என்மேல் அதிக அன்பு பாராட்டுகிறாயா?" என்றார். பேதுரு, "சுவாமி நான் தேவரீரை நேசிக்கிறேன் என்று அறிவீர்" என்றான்.

சுவாமி: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக.

அவர் இரண்டாந்தரம் "யோனாவின் குமாரனாகிய சீமோனே, என்னை நேசிக்கிறாயா?" என்றார்.

பேதுரு: ஆண்டவனே, நான் உம்மை நேசிக்கிறேன். இதை அறிவீர்.

சுவாமி: என் ஆடுகளை மேய்க்கக் கடவாய்.

அவர் மூன்றாந்தரம், "யோனாவின் மகனாகிய சீமோனே நீ என்னிடம் அன்பு கூறுகிறாயா?" என்றார்.

பேதுருவுக்குத் துக்கம் மேலிட்டது. "என் ஆண்டவரே உமக்குச் சகலமும் தெரியும். நான் உம்மை நேசிக்கிறேன். இதையும் அறிவீர்" என்றான்.

சுவாமி, "என் ஆடுகளை மேய்த்துவா. நீ வாலிபமாய் இருந்த காலம் உன் மனம்போல் கைவீசித் திரிந்தாய். பெரியவனாகி விட்டாய். இனிமேல் அப்படித் திரிய முடியாது. நீ விரும்பிய இடம் இருக்க, வேண்டாத இடத்துக்கு உன்னைக் கொண்டு போவார்கள். என்னையே பின்பற்றி நட" என்றார்.

அதனால் சீஷர் பேதுருவுக்குக் கொடுமையான பாடுகளும் வன்சாவும் முன் கூறியாயிற்று என்று உணர்ந்தார்கள். யோவானைப் பற்றிக் கேட்டபோது, அவர், "நான் வருமளவும் அவன் இருந்தாலும் இருப்பான். அதைப்பற்றி யோசிக்க வேண்டாம்" என்றார்.

சீஷர்கள் பஹுவான் கட்டளைப்படி கலிலேயாவில் அவர் குறித்த மலைக்குப் போனார்கள். சுவாமி அவர்களைச் சந்தித்து, "சங்கீதங்களிலும், தீர்க்கதரிசன ஆகமங்களிலும் என்னைக் குறித்து சொல்லப்பட்டதும் நிறைவேறுமென்று முன்னமே உங்களுக்கு நான் சொல்லித் தெரிவித்தவைகளுமான விஷயங்களே இப்போது நிறைவேறி இருக்கின்றன. பூலோகத்திலும் பாலோகத்திலுமுள்ள சகல அதிகாரங்களும் எனக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜனங்களுக்கும் போதித்து, சீஷராக்கி பிதாக்குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நான தீட்சை கொடுங்கள்.

நான் உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் உங்களோடு இருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவர்கள் பேய்களை ஓட்டுவார்கள், பற்பல பாஷை பேசுவார்கள், நோயாளிகள்மேல் கைவைத்துக் குணமாக்குவார்கள், விஷம் உண்டாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது" என்றார்.

இரக்ஷண்யமூர்த்தி சீஷரை அழைத்துக்கொண்டு மலைமேல் சற்று தூரம் போய் பெத்தானியாவுக்கு எதிரே நிற்கும் பொழுது தம் கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். அச்சமயம் அவர் உயர எழுந்தருளியாகி ஒரு மேகத்திற்குள் பிரவேசித்த பின்பு சீஷர் அவரைக் காணவில்லை. அவர் தமது பிதாவின் வலபாகத்தில் அமர்ந்தார்.

சீஷர் சந்தோஷமாய்த் திரும்பிவந்து எருசலேமுக்குப் போய் நாள்தோறும் கடவுளைத் தோத்தரித்து ஜெபம் செய்து அவர் கட்டளைப்பிரகாரம் பரிசுத்த ஆவியானவர் வரும்வரை பத்துநாள் காத்திருந்தார்கள். பஹவான் கல்லறையை விட்டு வந்து, நாற்பதுநாள்வரை தம் உத்தம தொண்டருக்கு ஒன்பது சமயங்களில் காணப்பட்டார். அவர் பரலோகம்போன பத்தாவது நாளில் பரிசுத்த ஆவியானவர் வந்தார். பின்பு சீஷர் விசேஷமான தைரியமடைந்து அவரைக் குறித்து சாட்சிபகர்ந்தார்கள். அவருடைய ராஜ்யம் உலகில் மனுஷர் இருதயங்களில் நிலைபெற்று வருகிறது.

---

The B. N. Press, Educational Printers, Madras.